Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜன.07-13,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 135

## சித்திரைக்கு முன்னர் முற்றுகை!



வானில் இருந்து ஆயுதங்கள்

அரசியல் அலசல்

பிரபுதேவாவா? அரவிந்தசாமியா?

கல்லூரி மாணவிகளிடம் கருத்துக் கணிப்பு

# முரசம்

## ஆறப்போடலாமா...?

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

நாட்டில் -
அனைத்துக் காரியங்களும்
ஆமை வேகத்தில் தான்;
யுத்தத்தைத் தவிர!

போதியளவு
இரத்த ஓட்டம் இருப்பதால்
யுத்தம்
சுறுசுறுப்பாக இருக்கிறதோ?!

நிர்வாகச் செயற்பாடுகளிலும்
ஒரு சோம்பல்தனம்
அழுத்தமாக அமர்ந்திருக்கிறது.

ஓர் உதாரணம்-
தபால்துறை.
கொழும்பிலிருந்து கொழும்புக்கு
அனுப்பும் கடிதம் கூட
மிக்க ஆறுதலாக
உரியவர் கரம் சேர்கிறது!

நிர்வாகத் துறை விடயத்தில்
தமிழ் மக்களுக்கு
மேலதிகமாகவும் ஒரு பிரச்சனை!
வடக்கு - கிழக்குக்கு வெளியே
அரச அலுவலகங்களுக்கு
அலுவல்கள் நிமித்தம் செல்வோர்
சந்தேகப் பார்வைகளை
சங்கடத்தோடு சந்திக்க வேண்டியுள்ளது.

யாழ் - அரச அதிபர்
அனுப்பிவைத்த காசோலை
சந்தேக வலையில் சிக்கி
மீண்டுவர நீண்டநாளானது.

வவுனியாவுக்கு
வடக்கிலிருந்து வருவோர்
வாடிப் போய்த்தான் வருகிறார்கள்.
வரவேற்காவிட்டாலும்
வருத்தப்பட வைக்காமலிருக்கலாம்!

கொழும்பில் குடியிருக்கும்
பொலிஸ் பதிவு அத்தாட்சி
முதலில் கோரப்பட்டது.
பின்னர் - பொலிஸ் நிலையத்தில்
தனியாக ஒரு கடிதமும்
பெற்று வந்தால்தான்
கொழும்பு செல்ல அனுமதி
என்று கட்டுப்பாடு வந்தது.

விழிப்புணர்வு
வேண்டாம் என்று கூறவில்லை.
கட்டுப்பாட்டு விதிகள்
கெடுபிடியாகிவிடக்கூடாது!

அரசியல் அரங்கைப் பொறுத்தவரை,
வெற்றிக் களிப்பில் அரச தரப்பும்,
'கிழக்கு என்னாச்சு,
மேற்கு என்னாச்சு?' என்று
ஆளும் தரப்புக்கு
அபசகுனம் தேடும்
அவசரத்தில் எதிர்த்தரப்பும்
விவாதத்தில் கரைந்து போயுள்ளன.

அரசியல் தீர்வு யோசனை
பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு
முன்பாக தோன்றவே
வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தெரிவுக் குழுவுக்கு
சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்
சிகிச்சை ஆரம்பமாகும்.
வேகம் மந்தமாகவேயிருக்கும்.

உள்ளாட்சி தேர்தல்கள்
ஓடோடி வரப் போவதால்
தீர்வு யோசனையை
இறுதியானதாக்க
அரசு ஆர்வம் காட்டுமா?
என்பது சந்தேகம்தான்?

கடந்த பொதுத் தேர்தலை
சமாதானத் தீர்வுக்கான
ஒப்புதல் பெறுவதற்கும்
பொதுஜன முன்னணி
துணிச்சலோடு பயன்படுத்தியது.

எதிர்வரும் குட்டித் தேர்தலை,
இனப்பிரச்சனை தீர்விற்கான-
தனது தீர்வு யோசனைக்கான
ஆதரவைத் திரட்டும்
களமாகப் பயன்படுத்தலாமே!

பிறந்துள்ள ஆண்டும்
போர் ஆண்டாகவே தொடர்ந்து
முற்றுப் பெறப் போகிறதா?
போருக்கு முடிவு கட்டும்
ஆண்டாக மாறப் போகிறதா?

தீர்மானிக்கும் பொறுப்பு
இனப்பிரச்சனை தீர்வில்தான்
தங்கியுள்ளது.
புலிகளின் முடிவில்தான்
என்று நினைத்து
தீர்வைத் தள்ளிப் போட்டால்
கணக்குத் தப்பாகலாம்!

▭ ▭

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்



### வாரி இறைத்து விருத்தி அடைவோம்

மனிதர்களாகிய நாம் மனமுவந்து மற்றவர்களுக்குக் கொடுத்து வாழவேண்டும். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று சொல்லப்படுகிறது. மக்கள் சேவை என்பது மேடையில் பேசும் பேச்சுகள் அல்ல, இல்லாதவர்களுக்குக் கொடுத்து உள்ளவர்களாய் ஆக்குவதே-எனவேதான்!

"உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். தானியத்தைக் கட்டி வைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும்." என்று கூறப்பட்டுள்ளது. ஆம், ஆன்மா செழித்து ஆன்மீகம் வளரவேண்டும் என்றால் நாம் மற்றவர்களுக்கு இல்லை என்று கூறாது வழங்கும் நல்லவராக இருக்க வேண்டும். உதாரகுணம் நம்மை உத்தமராக்கும்.

அல்லாமலும், வலிமைநிறைந்த சில வார்த்தைகள் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளன. கர்த்தருக்குக் கூட நாம் கடன் கொடுத்து அதனைத் திரும்பப் பெறும் திவ்யமான நாளை எதிர்பார்த்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. விவிலியத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:-

"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கும் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்."

எனவே, இருக்கும் பொழுது இருக்கும் பொருளை இல்லாதவர்களுக்குக் கொடுத்து பின் இன்பம் துய்க்கும் நன்னாளை எதிர்பார்த்திருப்போமாக.

ஏ.பி.வி.கோமஸ்

### பொன் மொழிகள்~கர்வம்

மானிடனுக்கு நாம் நற்பாக்கியம் அளிக்கும்போது அவன் கர்வம் கொண்டு (நம்மைப்) புறக்கணிக்கிறான்; ஆனால், அவனைத் தீங்கு பற்றும் போது (நம்மை நோக்கி) நெடிய பிரார்த்தனை செய்கிறான்.

(அல்குர்ஆன் 41:51)

"ஒரு அணுவளவேனும் தன் மனதில் கர்வம் வைத்திருப்பவர் சுவர்க்கம் பிரவேசிப்பதுஇல்லை." என நபி பெருமான் (ஸல்) அவர்கள் திருவுளமான சமயம் "தன் ஆடை அழகாக இருக்க வேண்டும்; செருப்பு அழகாக இருக்க வேண்டும்; என்று ஒருவர் விரும்புகிறார். இது கர்வமாகுமா?" என்று ஒரு ஸஹாபி கேட்டார் "நிச்சயமாக அல்லாஹ் அழகுவாய்ந்தவன்; அவன் அழகை விரும்புகிறான். ஆனால், கர்வம் என்பது சத்தியத்தை மறுப்பதும் ஜனங்களை இழிவாகக் கருதுவதுமாகும்" என்று பெருமானார் (ஸல்) பதிலளித்தார்கள்.

(இப்னு மஸ்ஊது: ரலி)

"ஏ! மூஸா மாந்தரில் எனக்கு வெறுப்பானவர் மனதில் கர்வமும், நாவில் குரோதமும், கரத்தில் உலோபமும், குணத்தில் தீமையும் உடையவராவார்." இது மூஸா நபிக்கு கிடைத்த இறைக் கட்டளை.

(இப்னு அப்பாஸ்; (ரலி))

மொஹமட் நியார், ஹாலி-எல.

## கவிதைப்போட்டி இல-132

பரிசுக்குரிய கவிதை

### அவனும் அகதியா?

தஞ்சமென நெஞ்சொடிந்து வந்தவரை
துஞ்சவைத்து துயர் துடைத்த
கோயிலுக்குப் பெருமை.
கொஞ்ச நாளாய் வெஞ்சமரின்
வஞ்சனையால்
எஞ்சி நின்ற இறைவனையும்
இழந்ததுதான் கொடுமை!

சதா கணபதி, உடபுஸ்ஸலாவ.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### இதுதான் முடிவோ?

ஆதவன் தன்கதிரால்
அனைத்தையும் எரித்துவிட,
ஆண்டவனே நீரும்
அணைக்க மறுத்துவிட,
ஆற்றொண்ணா துயரத்தால்
நீர்நிலையில் விழுகின்றேன்,
நீந்திக்கரை சேரவல்ல.....
நீத்துவிட உயிர்தன்னை!

ஆரையம்பதி-இதயம்.

### தப்பலாமா?

ஆழியைத் தாண்டினாலும்!
அடிக்கும் செல்லுக்கு,
அகதிகள் தப்பலாமோ?

எஸ். பிரதாபன், மணல்சேனை.

## கவிதைப் போட்டி இல-135



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.01.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 135. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



### நானும் வாறேன்

தாவி உயிர் மடித்து தரணியை கலங்கச்செய்ய
பாவியாய்ப்போர் வந்து பல்கிப் பெருகியதால்
ஆவி காத்திடவே ஆண்டவனின் சந்நிதியை
சேவித்து நானும் வாறேன் திருக்குமரா காத்திடுவாய்!

திருமதி. மல்லிகா பத்மநாதன்,
டெமேரியா குறூப், பசறை.

### தஞ்சம்

பாதையில்லை:
பட..கில்லை;
பகவானே!
பார் என்னை...!
ஒற்றைக்காலும்
பொய்க் காலே
தநித்து விட்டேன்
துணை நீயே!

சேனையூரான், செங்கலடி.

### யார் இவர்?

அந்த மில்லா யுத்த மதால்
சொந்த மெல்லாம் மாண்டதனால்
பந்த பாசம் தனை இழந்து
நொந்த மனம் சாந்தி பெற
கந்தனவன் கோவிலின்முன்
அந்தரத்தில் காலுயர்த்தி
விந்தை யான தவமிருக்க
வந்தவரோ இம் மனிதர்

முஸ்தபா - சித்தி றசீதியா, ஏறாவூர்-01.

### எங்கே நிம்மதி?

இறந்த கால நிகழ்வுகளால்
எதிர்கால வாழ்வை எண்ணி
நிகழ்கால மனிதம் இங்கே
நிம்மதி தேடி அலைகிறது.

செல்வி.பி. நடராஜ், பாண்டிருப்பு-02, கல்முனை.

### அவர்கள் எங்கே?

கோடிக் கொடிகள்
கோபுரத்தில் பறந்தாலும்
கூடிக் களிக்க
குடிமக்கள் வேண்டுமன்றோ?

ச. மகாலிங்கம், வெலிமடை குறூப்,
வெலிமடை.

### கவனம்

காலில் பட்ட வடு
காயு முன்
ஏரிக்கரை தாண்டி
எங்கே நீ ஓடுகிறாய்?
கோயிலிலும்
குண்டு விழும்
கவனம்!

மாதவி குணசீலன்,
பொத்துவில் -03.

### எங்கு சொல்வேன் இறைவா?

அக்கரையின் அவலத்தால்
இக்கரைக்கு வந்தால்
இக்கரையின் கெடுபிடியை
எக்கரையில் சொல்வேன்?

எஸ். உமையவன், சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

### துணை

நாடுமில்லை
வீடுமில்லை
நானிருக்க
நாதியில்லை
நல்லூர் கந்தா
நியே துணை!

ரோஜா ஆனந்தராஜா,
ராகலை.

### ஆழம் பார்

நீளத்தைப் பார்க்காதே
நிச்சயம் அதிர்வாய்!
அகலத்தை நோக்காதே
'ஆ'வென்று பிளப்பாய்!
'ஆழம் பார்' - இது
அறிதலின் முதல் அத்தியாயம்!

உதய சிவா, மாத்தளை.

### தப்பித்தல்

கோர யுத்தம் என்னை
கொலை செய்ய முன்பு
ஆழக் கடல் தாண்டி
அடைந்திடுவேன் அ[illegible]யத்தை.

எஸ்.கே. ராஜரட்னம் - [illegible]- எல.

### வளர்ச்சி

உலகத் தமிழர்களே!
ஒன்று சேருங்கள்
கோயில் கட்ட-
அடுத்த நூற்றாண்டுக்கு
அகதிமுகாம் தேவை!

சுபாவரன், கண்டி.

## வாசகர் சாலை

கொடிகளிற்கிடையில் இடிபடும் நந்தியை ஒத்த, யாழ் மக்களின் அவலநிலையை, யதார்த்தமாக தொட்டுக் காட்டிய இராஜதந்திரியாருக்கு பாராட்டுக்கள்!!

து. சர்மிளாதேவி, கலஹா.

முரசின் விடயங்கள் யாவும் படு யதார்த்தம். அரசியல் கட்டுரைகள் சூடு, சுவை, நிஜமானவை. தேன் கிண்ணத்திற்கு முழுப்பக்கம் ஒதுக்கினால் என்ன?

எம்.எச். எம்.ஹாரிஸ், புத்/கரம்பை.

மனித வெடிகுண்டு கார்லோசின் தொடர் கதையும், இலக்கிய நயம், இவை இரண்டும் நன்றாக இடம்.பெற்று வருகின்றன. வெளுத்து வாங்குகிறார் ரசிகன். இவைகளை தவறாமல் பார்த்து வருகிறேன். இதே போன்று இனி வரும் கதைகளும் சிறந்திட முரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

மு.சரவணன். டெமேரியா- பசறை.

முரசாரே! சிரிப்பரங்கம் வெகு ஜோர். மற்றும் "யாழிசையால் தோன்றிய யாழ்ப்பாணம்" அலசிய இராஜதந்திரியாருக்கு பல கோடி நன்றிகள்.

டி.சசிகலா, சாம்பல்தீவு, திருகோணமலை.

மனித வெடிகுண்டு கார்லோஸ் ஒவ்வொரு வாரமும் கலக்கிக் கொண்டே வருகிறார். அப்துல் ரகுமானின் ஆக்கங்கள் பிரமாதம். பட்டுக்கோட்டையார் அடுத்த வாரம் எப்போது வருவார் என்று எதிர்பார்க்க வைக்கிறார்.

எம்.எஸ்.சனூதா, பதுளை.

துணிச்சலோடு தொட்டு...தொட்டு..காட்டும் அரசியல் கட்டுரைகள்...இராஜகுமாரன் தொகுத்து வழங்கும் "இராமாயணம்" ரசிகன் தரும் "இலக்கிய நயம்" அப்பப்பா.. இன்னும் என்ன..? முரசில் கேட்டது கிடைக்கிறது உனக்கு எனது...சபாஷ்..


சதாத் ஏ.லெத்தீப், கிண்ணியா-05.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

* சீ. திருக்குமார், காரைதீவு - 07.
* வ. றஜனிதேவி, குருக்கள்மடம்.
* ரி. சீத்தா, திருக்கோணமலை.
* அருள் சபானந்தன், சங்கமான் கிராமம்.
* பைறோஸ், சாய்ந்தமருது.
* பாதிமா நிஹானா பாரூக், உலப்பனை.
* க. ரவிச்சந்திரன், மட்டக்களப்பு.
* முகம்மது லாபீர், புல்மோட்டை - 01.
* எம்.எச்.எம். ஹம்ஸா, களுத்துறை தெற்கு.
* வே. திவகர், கெலிவத்த.
* ஏ.ஆர். பஸ்மியா, சிறாஜ்நகர்.
* எம்.ஏ.எச். சில்மியா, கிண்ணியா.
* எஸ்.எம். சலீக், கிண்ணியா-03.
* உம்மு சிபாஜா, தெல்தோட்ட.
* வே. ராஜ்குமார், தெஹியோவிற்ற.
* தி. அபயசேகரன், இந்தகல மேற்பிரிவு.
* வி. கனகசிங்கம், கிரான்குளம் வடக்கு.
* மா. கயல்விழி, பலாங்கொடை.
* சி. அமீன், நூச்சியாதீவு.
* சசிகலா துரைநாயகம், திருக்கோணமலை.
* கே. ராஜா, வவுனியா.
* ஏ. தமிழ் செல்வன், அக்கரைப்பற்று-07.
* மர்ஜானா இத்ரீஸ், மருதமுனை-1.
* ஏ.எச். ஜெம்ஹீத் நிஸா, புதிய காத்தான்குடி.
* துஸ்ரத் ஜஹான் ஹனீபா, மாத்தளை.
* என். டயஸ், கல்முனை.
* எம். நிஸா, மதவாச்சி.
* தர்சிபரன், வவுனியா.
* சே. மணிசேகரன், சப்னி ஜனபத்தய.
* மா. கண்ணாளன், கொழும்பு-6.

'அற்புதனின்' அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை எனும் தொடரில் வவுனியாவில் தாக்குதல் 9.10.85 இல் நடந்ததாக குறிப்பிடுவதற்கு 9.10.95 இல் நடந்ததாக குறிப்பிட்டு என்னை குழப்பி விட்டீரே! கவனித்திருக்க கூடாதா? மேலும் வளர வாழ்த்துக்கள்,

ஆத்ம ஆசான், வவுனியா.



தந்திரியாரும் நாரதரும் அரசியலை அக்குவேறு ஆணி வேறாக்குகிறார்கள். இலக்கியத்தை நயம் சேர்த்து ரசிகனும், இராஜகுமாரனும் சுவைக்கத் தருகிறார்கள். ஒன்று விட்டு ஒன்று சொல்ல முடியாது- அனைத்துமே படு ஜோர்.

பிரியதர்ஷினி குமாரசிங்கம், மட்/
பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு.

அதிரடி அய்யாத்துரையின் அசத்தலான தகவல்கள் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. முரசே! உன் இலக்கிய நயமும் சுப்பர்.

கோ. ஸ்ரீதரன், வுட்லண்ட், அப்புத்தளை.

இராமாயணத்தை எத்தனையோ புத்தகங்களில் வாசித்து விட்டேன். ஆனால் முரசே, உன் மூலம் தான் தெரிந்து கொள்ள வேண்டிய பல இராமாயணச் சமாச்சாரங்களை அறிந்து கொண்டிருக்கிறேன்.

ரி. விமலேஸ்வரி, வட்டக்களி, சிலாபம்.

ரசிகன் சளைக்காது வழங்கும் 'இலக்கிய நயம்' சூப்பர்தான். பல திக்கில் வாழும் பலராலும் இன்று பாராட்டத்தக்க ஒரே இதழ் தினமுரசே...! தேன் கிண்ணத்தில் வர வர கவிதைகள் குன்றிவருகிறது. இது எமக்கு வேதனையைத் தருகிறது!

கஹவத்தை- எம். சிவகுமார், காலி.

# "சந்திரிக்காவோடு நேரடிப் பேச்சுக் கிடையாது"

## "சர்வதேச மத்தியஸ்தம் வந்தாலும் நிபந்தனை உண்டு!"

வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

திரு.அன்ரன் பாலசிங்கம், பிரபாகரன் சார்பில் அவரது அறிக்கையை வெளியிட்டதாக சில செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட செய்திகளில் உண்மையில்லை.

பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட திரு.அன்ரன் பாலசிங்கம் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்குரிய சூழல் பற்றி கேட்கப்பட்டபோது அன்ரன் பாலசிங்கம் கூறியதாவது:

"சிறிலங்கா அரசுடன் இனிமேல் நேரடியான பேச்சுவார்த்தை எதிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஈடுபடப்போவதில்லை.

நேரடியான பேச்சுக் கதவுகளை நாம் மூடிவிட்டோம். வெளிநாட்டு மத்தியஸ்தம் ஒன்று இருந்தால் மட்டுமே இனிமேல் பேச்சு நடத்த முடியும். ஆனால் வெளிநாட்டு மத்தியஸ்தத்தோடு பேச்சு நடத்துவதாக இருந்தாலும், சிறிலங்கா படைகள் தற்போது ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் இருந்து வெளியேறவேண்டும். அதற்குப் பின்னர்தான் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று நிபந்தனை விதிப்போம்." இவ்வாறு தெரிவித்தார் அன்ரன் பாலசிங்கம்.

சமீபத்திய போர் நிலவரம் குறித்து அன்ரன் பாலசிங்கம் விளக்கும்போது, "சமீபத்திய வடபுலப் போரில் புலிகள் தரப்பில் 500 பேருக்கு உட்பட்டவர்களே பலியாகியுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டமைப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை" என்று தெரிவித்தார்.

# "இன்றைய பின்னடைவு நாளைய வெற்றி"

## தமிழகத் தலைவர்களுக்கு பிரபா பகிரங்க கடிதம்

## சென்னையில் கண்டன மாநாட்டில் கடிதம் வாசிப்பு

தமிழக அரசியல் தலைவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் பகிரங்கக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் தமிழக மக்களுக்கு பிரபாவிடமிருந்து வெளியாகியுள்ள முதல் செய்தியும் இதுதான். தமிழ் நாட்டில் ஏற்படும் ஆதரவு அலை இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளது தீவிரத்தைக் குறைக்கும் என்று புலிகள் நம்புவதாகத் தெரிகிறது.

### கண்டன மாநாடு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழக அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள பகிரங்க கடிதம் தமிழ் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் 30.12.95 அன்று இலங்கைத் தமிழர் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் மாநாடு ஒன்று நடைபெற்றது.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி தலைமையில் நடைபெற்ற அந்தக் கண்டன மாநாட்டில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் வைத்து திரு.கி. வீரமணியால் பிரபாகரனின் கடிதம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

பலத்த கரகோஷத்தின் மத்தியில் வாசிக்கப்பட்ட அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

### பிரிக்கச் சதி

"தமிழீழ விடுதலைக்காக போராடிவரும் தமிழினத்துக்காக உரிமைக்குரல் எழுப்பியிருக்கிறார்கள் தமிழக மக்கள். அதற்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழினத்தில் இருந்தும், எமது மூல வேர் ஆழமாக வேரோடியுள்ள தமிழக மக்களிடம் இருந்தும் எம்மைப் பிரிக்க எதிரிகள் சதி செய்கிறார்கள்.

ஆனாலும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு அளித்துவரும் ஆதரவை தமிழக மக்கள் விலக்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்து தமிழக மக்கள் காட்டிவரும் ஆதரவு எமக்கு தார்மீகப் பலத்தையும், மன உறுதியையும் தருகின்றது.

இன்றைய பின்னடைவை நாளைய வெற்றியாக மாற்றியமைக்க தமிழகம் தனது ஆதரவை தொடர்ந்து வழங்க வேண்டும்." இவ்வாறு பிரபாகரன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தீக்குளித்து பலியான அப்துல் ரவூப் என்னும் இளைஞருக்கும் பிரபா தனது கடிதத்தில் அஞ்சலி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் உணர்வெழுச்சியின் தீவிர வெளிப்பாடு என்று தீக்குளிப்பை பிரபா விபரித்துள்ளார். எனினும் இவ்விதமான உயிர்த்தியாகங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் பிரபா குறிப்பிட்டுள்ளார்.

"இன்றைய பின்னடைவு நாளைய வெற்றியாகும்" என்று பிரபா குறிப்பிட்டதை வாசித்தபோது பலத்த கரகோஷம் எழுந்தது.

### தீர்மானம்

கண்டன மாநாட்டில் பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது:

"இலங்கைத் தமிழர் படுகொலை விடயத்தில் இந்திய மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும். இலங்கைத் தமிழர்களின் சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும்.

மத்திய அரசு அதற்கு முன்வராது போனால், தமிழகத்தில் உள்ள நாம் உலகத் தமிழர்களை ஓரணியில் திரட்டி, கரிசனையுள்ள நாடுகளின் ஆதரவோடு, இலங்கைத் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுக்க போராட்டத்தில் குதிப்போம்"

கண்டனமாநாடு வெற்றி பெறுவதற்கு இந்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங், திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணநிதி ஆகியோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

# வடக்கில் ஏட்டிக்குப் போட்டியான பிரசுரங்கள்

## 'வா' என்கிறது அரசு; 'போகாதே' என்கிறார்கள் புலிகள்

விமானங்கள் மூலமாக வடபகுதியெங்கும் துண்டுப்பிரசுரங்கள் போடப் பட்டுள்ளன.

'வடபகுதியில் வாழும் தமிழ் சகோதரர்களுக்கு' என்ற தலைப்பிட்டு அப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், அவருடன் சேர்ந்து ஆயுதமேந்தியவர்களும் பாசிச ஆட்சி நடத்தினார்கள். இன்று உங்களை அநாதரவாக நட்டாற்றில் கைவிட்டு தப்பியோடிவிட்டனர்.

இது உங்கள் வரலாற்றின் ஒரு முக்கியமான கட்டம். உங்களின் எதிர்காலம் இப்போது நீங்கள் எடுக்கப்போகும் முடிவில் தான் தங்கியிருக்கிறது. இதுவரை நீங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தீர்கள். இப்போது சரிநிகர் சமானமாக வாழச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட முடியுமா?" என்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னி-கிளிநொச்சி பகுதிகளில் புலிகள் அமைப்பினரும் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

"யாழ்ப்பாணத்தை சிறையாக மாற்றியுள்ளார் சந்திரிக்கா. யாழ்ப்பாணத்திற்கு திரும்பச் செல்வது மூலம் அரசின் சூழ்ச்சி வலையில் சிக்க வேண்டாம். மரணப் பொறியில் விழவேண்டாம்" என்று புலிகளின் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடத்திய பஸ் ஒப்படைப்பு

## ஆள் திரட்டும் கருத்தரங்குகள்

சென்ற 12.12.95அன்று வாழைச்சேனை-நாசிவன் தீவில் வைத்து பயணிகளை இறக்கிவிட்டு கடத்திச் செல்லப்பட்ட வாழைச்சேனை டிப்போ பஸ்ஸை புலிகள் 27.12.95 அன்று வாகரையில் வைத்து "குவேக்கர் பீஸ்" எனும் வெளிநாட்டு சமாதான நிறுவன பிரதிநிதியிடம் ஒப்படைத்தனர்.

வாகரைக்கு தொடரான பஸ் சேவை நடத்த ஒழுங்கு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே பஸ் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக புலி இயக்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பயணிகளை இடைநடுவில் இறக்கி விட்டு வாகனங்களை பறித்து செல்லுதல் சம்பந்தமாக பொது மக்கள் அதிருப்தி தெரிவித்து வந்துள்ளனர், என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே சென்ற 19.12.95அன்று மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த திணைக்கள-கூட்டுத்தாபன தலைவர்கள் கலந்து கொண்ட பாதுகாப்பு சம்பந்தமான கூட்டத்தில், வாகரைக்கு தனியார் பஸ்களை மாத்திரம் செல்ல அனுமதிக்கலாம் என்று மாவட்ட பிரிகேடியர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளும் புதிய கருத்தரங்குகளை மட்டக்களப்பு வாகரைப் பகுதி, பதுளை வீதி, படுவான் கரைப் பகுதி, கொக்கட்டிச்சோலை போன்ற பகுதிகளில் புலிகள் மும்முரமாக நடாத்தி வருகின்றனர்.

# மட்டக்களப்பில் புதிய அடையாள அட்டைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்கும் 13 வயதைத் தாண்டிய ஒவ்வொருவரும் இனிமேல் பிரிகேடியரின் உறுதிப்படுத்தலுடன் வழங்கப்படும் அவரவரின் புகைப் படத்துடன் கூடிய புதிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வறிவித்தல் மாவட்ட பிரிகேடியரால் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராம சேவையாளரும் தமது கிராமத்தில் வசிக்கும் 13 வயதைத்தாண்டிய ஒவ்வொருவரின் விவரத்தையும் (பெயர், வயது, பிறந்த திகதி, விலாசம், தேசி.அ.இல) நிழற் படங்களுடன் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் பிரதேச செயலாளர் ஊடாக அவை பிரிகேடியரை சென்றடையும்.

அவ்வப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளவும் சுற்றி வளைப்பின்போது பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்கும் முகமாகவும் இந் நடவக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வறிவித்தலின் பின் அனைவரும் விரைந்து நிழற் படம் எடுப்பதையும் ஸ்டூடியோக்கள் மக்களால் நிரம்பி வழிவதையும் காண முடிகிறது.

இதன் மூலம் ஸ்ரூடியோக்காரர்களுக்கும் அவசரகால அதிஷ்டம் கிடைத்துள்ளது என்பதை திருவாளர் பொதுஜனத்தார் தெரிவிக்கத் தவறவில்லை.

# போர்க்களமாக மாறியுள்ள சந்திவெளி!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சந்திவெளிப் பகுதி பல உயிர்களைப் பலி கொண்ட இடமாக மாறியுள்ளது. இப் பகுதியில் தொடராக இடம் பெற்ற பல சம்பவங்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

சமீபத்தில் (23.12.95) கொழும்பு-மட்டக்களப்பு பிரதான வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் படைத்தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 32 பேரும், புலிகள் தரப்பில் மேஜர் புஸ்பகுமார், கேப்டன் ராஜேஸ், 2வது லெப்டினன் பெண் புலியான தமிழ்வாணி ஆகியோரும், பொதுமக்கள் தரப்பில் ஒருவரும் உயிரிழந்தனர்.

இத்ற்கு சில நாட்கள் முன்னர் இதே இடத்தில் நடந்த இதே மாதிரியான சம்பவம் ஒன்றில் 38 படையினரும் 7 புலிகளும் பலியாகினர்.

சந்திவெளிப் பகுதியில் தொடராக நடத்தப்பட்ட புகையிரதத் தாக்குதல்கள் பலவற்றிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் வாவியையும் மறு பக்கம் அடர்ந்த பற்றைக் காடுகளையும் கொண்ட சந்திவெளி புலிகளின் தாக்குதலுக்கு சாதகமான இடமாக உள்ளது.

வசதி படைத்தவர்கள் சந்திவெளியை விட்டு வெளியேறி மட்டு நகருக்கு வந்துள்ளார்கள். மிக வறிய மக்கள் நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்னமும் அங்கேயே காலம் கழிக்கின்றார்கள்.

# ஐந்து லொறிகளில் பொருட்கள் பறிமுதல்

(ஏறாவூர் நிருபர்)

2.1.96 அன்று மட்டக்களப்பு சந்திவெளியில் வைத்து ஐந்து லொறிகள் புலிகள் இயக்கத்தினரால் தடுக்கப்பட்டன. அந்த லொறிகளில் இருந்து மாவு மூட்டைகள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை புலிகள் இயக்கத்தினர் தமது தேவைகளுக்காக எடுத்துக் கொண்டனர்.

செங்கலடிக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான லொறியில் இருந்தும் சுமார் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் எடுக்கப்பட்டன.

புகையிரத சேவைகளில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மண்ணெண்ணெய்க்கு நீண்ட கியூ வரிசை காணப்படுகிறது. மாவுத் தட்டுப்பாட்டால் பாணுக்கும் மக்கள் அலைந்து திரிகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ இயக்க உறுப்பினர்களை வேட்டையாடுவதில் புலிகள் தீவிரமாக இருக்கின்றனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களை படையினருடன் இணைந்து தேடுவதிலும் மட்டக்களப்பில் ரெலோ இயக்கத்தினரே முன்னணியில் உள்ளனர்.

செங்கலடியில் வைத்து ரெலோ இயக்க உறுப்பினர் ஒருவரை சுடுவதற்கு வந்த புலிகள் இயக்க உறுப்பினர் கொல்லப்பட்டார். அவரது உடலை வாகனத்தில் கட்டி இழுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

# வன்னியை மிரட்டும் வறட்சி அபாயம்

## அகதிகளுக்கு ரூபா. 8 இலட்சம் செலவில் கிணறுகள்

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் குடிநீருக்கு பெரும் அவதிப்படுகின்றனர்.

இதேவேளை இம்முறை மழை ஏமாற்றிவிட்டதால் வன்னிப்பகுதியில் கடும் வறட்சி தோன்றும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

வன்னியிலும், கிளிநொச்சியிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் தேவைப்படும் அதே வேளையில், வன்னிப்பகுதியிலும் கிளிநொச்சியிலும் வாழும் மக்களுக்கு வரட்சி நிவாரண உதவிகளையும் விரைவில் வழங்க வேண்டிய நிலை ஏற்படப்போகிறது.

கிளிநொச்சியில் அகதிமுகாம்களில் உள்ள குடிநீர் தேவையை நிறைவு செய்ய குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. அதற்காக எட்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பத்து அகதி முகாம்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், அறவழிப் போராட்டக் குழுவும் வன்னிப்பகுதியில் விவசாயத் திட்டம், பாலர் கல்வித் திட்டம் என்பவற்றை ஆரம்பித்துள்ளன. அதற்கான திட்டங்களை மேற்பார்வையிடும் அலுவலகம் ஒன்றும் வன்னிப் பகுதியில் திறக்கப்படவுள்ளது.

# போட்டிப் பரீட்சையில் 45 ஆயிரம் பேர்

## தெரிவாகப் போவது 8 ஆயிரம் பேர்

(கண்டி நிருபர்)

தமிழ், சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தவிர்க்கும் பொருட்டு 8000 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற உள்ளன.

மலையக பெருந்தோட்டப்புறப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க ஜனவரிமாதம் இரண்டாம் வாரத்திலும் மற்றும் நாடுபூராவிலும் உள்ள தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதற்கான பரீட்சை ஜனவரி இறுதியிலும் சிங்கள மொழி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை பெப்ரவரி முதல் வாரத்திலும் நடைபெற இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 4000 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. சிங்கள மொழிப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் இதே எண்ணிக்கையாகும். சுமார் 1,45,000 பேர் அளவில் இவற்றுக்கான விண்ணப்பங்கள் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டன.

# ஓடுகள்—கூரைகள் மாயம்

## கிளிநொச்சியில் விற்பனை

வடமராட்சியில் இருந்து மக்கள் வெளியேறியுள்ள வீடுகளில் ஓடுகள், கூரைகள் என்பவை மாயமாய் மறைந்து போயுள்ளன.

பல வீடுகளில் இருந்து புலிகள் அமைப்பினரும் ஓடுகள், கூரைகள் ஆகியவற்றை தமது வாகனங்களில் ஏற்றிச் செல்லுகின்றனர்.

வன்னிப்பகுதியில் புதிதாக அமைக்கப் படும் வீடுகளுக்கு அந்த ஓடுகளும், கூரைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கிளிநொச்சிப் பகுதியில் பழைய ஓடுகள், கூரை மரங்கள் என்பவை விற்பனை செய்யப் பட்டும் வருகின்றன.

வடமராட்சியில் உள்ள வீடொன்றில் கூரைகளை கழற்றி புலிகள் வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வீட்டு உரிமையாளர் அங்கு வந்துவிட்டார். "இவற்றை ஏன் கழற்றுகிறீர்கள்?" என்று அவர் கேட்க, "வன்னியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவிசெய்யப்போகிறோம்" என்று புலிகள் கூறினார்கள். "இது என்னுடைய வீடு தம்பிமார்" என்று உரிமையாளர் கூறினார். "அப்படியானால் நீங்களும் வந்து வாகனத்தில் ஏற்ற உதவி செய்யுங்கள்" என்றார்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள். உரிமையாளரின் முகத்தில் ஈயாடவில்லை.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையங்கள், கடைகள் போன்றவற்றில் இருந்த சகல பொருட்களும்-இராணுவத்தினர் உள்ளே செல்ல முன்னரே புலிகள் அமைப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

"இராணுவம் எடுப்பதைவிட நாமே எடுத்துக் கொள்கிறோம். அவர்களின் கையில் ஏன் போக வேண்டும்?" என்று புலிகள் இயக்கத்தினர் காரணம் கூறினார்களாம்.

# கோழிக்கு 2 ஆண்டுக் காவல்?

## கேரள மாநிலத்தில் புதுமையான சம்பவம்

இந்தியாவில் கேரள மாநிலத்தில் 'குவர்ளா' என்னும் கிராமத்தில் 1993ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரட்டைக் கொலை நடைபெற்றது.

ஸ்ரீகிருஷ்ண பட்டு என்பவரும் அவரது மனைவியும் கொலை செய்யப் பட்டிருந்தனர்.

மந்திரவாதி ஒருவரே இரட்டைக் கொலைகளின் சூத்திரதாரி என்று பொலிசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

வீட்டுத் தோட்டத்தில் ஸ்ரீகிருஷ்ண பட்டின் உடல் தலைகீழாக தொங்கவிடப் பட்டிருந்தது. அருகில் ஒரு கோழிக்குஞ்சும், கறுத்த துணியும், கறுப்புக் குடையும், கறுப்புப் பூவும் காணப்பட்டன.

கோழிக்குஞ்சு மந்திரவாதிக்குச் சொந்தமானது என்று அயலவர்கள் சாட்சி சொன்னார்கள். மந்திரவாதி மாயமாகிவிட்டார்.

மந்திரவாதியை கொலையோடு சம்பந்தப் படுத்தும் முக்கிய தடயமாக கோழிக்குஞ்சை பொலிசார் எடுத்துச் சென்று காவலில் வைத்திருந்தனர்.

இப்போது அந்தக் கோழிக்குஞ்சு பெரிய சேவலாக மாறிவிட்டது.

அந்த சேவல் கோழியை காவலில் இருந்து விடுவிக்க கேரள மாநில காசர் கோடு மாவட்ட ஆட்சியாளர் சத்தியஜித்ராஜன் நடவடிக்கை எடுத்துள்ளார். ஒரு கோழி பொலிஸ் காவலில் இரண்டுவருடம் இருந்தது புதுமையான சம்பவமாக பேசப்படுகிறது.

கடந்த இரண்டு வருடகாலமாகத் தேடியும் மந்திரவாதி மாட்டவில்லை.

# காட்டூண் மூலை




இலங்கை நிலவரம் பற்றி இந்தியாவிலிருந்து வெளிவரும் 'த வீக்' வாரஇதழ் வெளியிட்டுள்ள காட்டூண்.

# புலிகள் கடத்திய படகு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-மாந்தீவில் அமைந்துள்ள தொழுநோயாளர் ஆஸ்பத்திரியின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்த 8 குதிரைச் சக்தி கொண்ட இயந்திரப் படகொன்றைப் புலிகள் பறித்துச் சென்றுள்ளனர். இதனால் இவ்வைத்தியசாலைக்கு மட்டக்களப்பிலிருந்து செல்லும் வைத்தியர்களும், பணியாளர்களும் நோயாளிகளும், உறவினர்களும் கூடுதலான போக்குவரத்துச் சிரமங்களையும் வசதியீனங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

படகு பறித்துச் செல்லப்பட்ட பின்னர் வைத்தியசாலை அதிகாரிகளினதும், நோயாளிகளினதும் பாவினைக்காக இப்பொழுது ஒரு பழைய, தண்டு வலித்துச் செல்லும் படகு வழங்கப்பட்டுள்ளது. இப்படகில் ஒரு தடவை 10 பேரே செல்லக் கூடியதாகவுள்ளது. மேலும்; இரவாகியதும் படகைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக மறுகரைக்கு கொண்டு செல்லுமாறு கேட்கப்படுகிறது. இதனால் இரவு வேளையில் நோயாளர்களுக்குப் பாம்பு கடித்தால் கூட தீவைக்கடந்து அவசர சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் நாலா பாகங்களிலுமிருந்தும் இவ்வைத்தியசாலையில் 20 தமிழ் நோயாளர்களும் 15 சிங்கள நோயாளர்களும், 05 முஸ்லிம் நோயாளர்களுமுள்ளார்கள். வைத்தியர்கள் உட்பட 42 ஊழியர்கள் இங்கு கடைமையாற்றுகிறார்கள். தாம் இவ்வைத்திய சாலையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வாவியைக் கடக்கும் போது தங்களைத் தியாகம்செய்து பணியாற்றுவதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். இலங்கையில் முதலாவது தொழுநோயாளர் வைத்தியசாலை மாந்தீவிலேயே உள்ளது. மற்றொரு வைத்தியசாலை ஹெந்தலையில் உள்ளது.

# புலிகள் ஏற்றிச் சென்ற குண்டு

மட்டக்களப்பு- ஈரலக்குளம் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் சுப்பர் சொனிக் விமானத்திலிருந்து போடப்பட்ட இரு குண்டுகளும் முகுந்தனை ஆற்று மணலில் வீழ்ந்தன. இதில் ஒன்று வெடிக்கவில்லை. ஆற்று மணிலில் புதைந்து கிடந்த 250 கிலோ எடையுள்ள இக்குண்டை மக்கள் திரண்டு பார்த்தனர். மக்களின் முன்னிலையில் புலிகள் இக்குண்டை உழவு இயந்திரத்தால் கட்டியிழுத்து எடுத்து பின்னர் சமீபத்தில் கடத்திச் செல்லப்பட்ட ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளரின் பிக்அப் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

இச்சம்பவத்திற்குப் பல நாட்கள் முன்னரும் இதே பகுதியில் விமானத்திலிருந்து சில குண்டுகள் போடப்பட்டதால் ஒரு 3 வயதுச் சிறுமி கொல்லப்பட்டதுடன் 4 மந்திக் குரங்குகளும் பலியாகின.

# வாகரையில் மாவீரர் துயிலும் இல்லம்

கிழக்கில் மட்டக்களப்பு வாகரையிலிருந்து இராணுவம் வெளியேறிய பின் புதிதாக மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றைப் புலிகள் அமைத்துள்ளனர். இவ்விடத்தில் 50 க்கும் 100 க்கும் இடைப்பட்ட மாவீரர்களின் கல்லறைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இது தவிர கிழக்கில் மட்டக்களப்பு தரவைப் பகுதியில் இருந்த முதலாவது பெரிய மாவீரர் துயிலும் இல்லம் படையினரால் சில காலங்களுக்கு முன்னர் உடைக்கப் பட்டது. படையினர் அப்பகுதியிலிருந்து விலகியதும் மீண்டும் அங்கிருந்த மாவீரர் இல்லத்தைப் புலிகள் மக்களைக் கொண்டு சிரமதானம் செய்வித்துப் புனரமைத்துள்ளனர்.

மேலும் மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் தாண்டியடி, களுமுந்தன் வெளி ஆகிய இடங்களிலும் இரு சிறிய மாவீரர் இல்லங்கள் உள்ளன.

# அம்பாறை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கென அடுத்தவருடம் (1996) புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு 90 மில்லியன் (9 கோடி) ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் 50 மில்லியன் ரூபா முஸ்லிம் பிரதேசங்களுக்கும், தமிழ், சிங்கள பிரதேசங்களுக்கு முறையே 25 மில்லியன், 15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது, என கல்முனை மாவட்ட அபிவிருத்திக்குழு உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.ஆர்.ஏ.சத்தார் (ஜே.பி) முரசுக்கு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் தனது 1996க்கான பன்முகவரவு செலவு 25இலட்ச ரூபாநிதியில் அம்பாறை, வவுனியா மாவட்டங்களுக்கு தலா 10 இலட்சரூபாவும் மன்னார் மாவட்டத்திற்கு ரூபா 5இலட்சமும் ஒதுக்கியுள்ளார்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச பிரதான வீதி அபிவிருத்திக்கென 650 கோடி ரூபா செலவு செய்யப்பட விருக்கிறது. இது இரு கட்டடிங்களை உள்ளடக்கியது. பெரிய நீலாவணை-காரைதீவு-முதலாம் கட்டம் காரைதீவு-அக்கரைப்பற்று-இரண்டாம் கட்டம் முதற் கட்டத்திற்கு 250 கோடியும், இரண்டாம் கட்டத்திற்கு 400 கோடியும் ஒதுக்கப்பட விருக்கிறது.

ஜனவரியிலிருந்து வேலைகளை ஆரம்பிக்குமுகமாக 30 இலட்சரூபாவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வீதி அபி விருத்தி அதிகாரசபைக்கு வழங்கியுள்ளது. வீதி அகலமாக்கலே பிரதானமாக நடைபெறும்.

# தமிழக மீனவருக்கு சூடு

தமிழ் நாட்டில் ஜெகதாப்பட்டினம் கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

முருகன் என்னும் மீனவருக்கு துப்பாக்கிச் சூட்டில் காலில் காயம் ஏற்பட்டுள்ளதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய எல்லையை ஒட்டிய பகுதியில் நின்று மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் சரமாரியாகச் சுட்டனர். படகில் நான்கு மீனவர்கள் இருந்தனர். துப்பாக்கிச் சூட்டை அடுத்து படகை வேகமாகச் செலுத்தியதால் உயிர் தப்பியதாக அந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வாகனங்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில், பிரதேச செயலாளர்களின் வாகனங்களைத் தொடராக விடுதலைப் புலிகள் கடத்திவருவதால் காத்தான்குடி, மண்முனைவடக்கு ஆகிய பிரதேச செயலாளர்களின் வாகனங்கள் தவிர ஏனைய பிரதேச செயலர்கள் அனைவரும் தமது வாகனங்களை மாவட்டசெயலகத்தில் ஒப்படைக்குமாறு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5க்கும் மேற்பட்ட பிரதேச செயலகங்கள் படையினரின் கட்டுப்பாடில்லாத பகுதிகளிலுள்ளன. இதனால் அண்மையில் பட்டிப்பளை, ஏறாவூர்ப்பற்று ஆகிய பிரதேச செயலாளர்களின் வாகனங்களை புலிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

உடனடியாக மேற்படி 10 பிரதேச செயலாளர்களும் தமது வாகனங்களை ஒப்படைக்குமாறு மாவட்ட செயலகம் கேட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தாக்குதலை நிறுத்துக

யாழ்-குடாநாட்டில் சாவகச்சேரி, மந்திகை வைத்தியசாலைப் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்படாமல் தவிர்க்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. அகதிகள் தங்கியுள்ள பகுதிகளில் தாக்குதல்கள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.


## நடிகைகள் தேவை!

சுபர் ஜெகா புரடக்ஷன்ஸ் வெகு விரைவில் "ஷர்மிளாவின் இதயராகம்" தந்த பேராதனை ஏ.ஏ.ஜுனைதீனின் டைரக்ஷனில் தயாரிக்கவிருக்கும் "மிஸ் ஸ்ரீலங்கா" என்ற மும்மொழித் திரைப்படத்தில் நடிக்கத் திறமை வாய்ந்த நடிப்பாற்றல் உள்ள நடிகையர்களும், ஐந்து வயது மதிக்கத்தக்க நடிக்கக்கூடிய பெண் குழந்தை ஒன்றும் தேவை. மிக அண்மையில் எடுத்த வர்ணப்படத்துடன், உங்கள் விபரங்களையும் 20/01/1996 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

மு.கு. நேரடித் தொடர்புகள் இல்லை.

Producer, Super Jega Production,
No.123, Peradeniya Road, Kandy.


# தமிழ் நாட்டில் தீக்குளிப்பு

தமிழ் நாட்டில் மீண்டும் ஒரு வாலிபர் தீக்குளித்து இறந்துள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தே அவர் தீக்குளித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் அப்பதுல் ரவுப் என்னும் வாலிபர் தீக்குளித்து இறந்திருந்தார். அவருக்கு அனுதாபம் தெரிவித்து புலிகள் அமைப்பினரும் வடபகுதியில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டிருந்தனர்.

அதையடுத்து தமிழ்நாடு வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மதியழகன் என்னும் 30 வயது இளைஞர் ஒருவர் கடந்தவாரம் தீக்குளித்து இறந்துள்ளார்.

இவர் தீக்குளிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தனது நண்பர்களோடு கவலைப்பட்டு பேசிக் கொண்டிருந்தார்.

# வைரம் கடத்திய இலங்கையர் கைது

இந்தியாவில் பம்பாய் விமான நிலையத்தில் இருந்து ஹொங்கொங் நகருக்கு வைரம் கடத்திய இலங்கையர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்த முகமது நதிர் என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒரு கோடியே 62 இலட்சம் ரூபா மதிப்புள்ள (இந்திய மதிப்பு) வைரம் அவரிடமிருந்து இந்திய சுங்க அதிகாரிகளால் மீட்கப்பட்டது.

வேறு ஒருவருக்காக தான் வைரம் கடத்தியதாக முகமது நதிர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

# கருணாநிதிக்கு வெடிகுண்டு மிரட்டல்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

மதுரையில் நிதியளிப்பு வைபவம் ஒன்றில் கலந்துகொள்ள கருணாநிதி சென்றிருந்தார். அங்கு அவர் ஒரு விடுதியில் தங்கியிருந்தார்.

அந்த விடுதியில் வெடிகுண்டு வைக்கப் பட்டிருப்பதாக தொலைபேசியில் சொல்லப் பட்டது.

உடனடியாக பொலிசார் சென்று சோதனை நடத்தினார்கள். வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்று தெரியவந்தது.

எனினும், கருணாநிதிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

# ரஜினி ரசிகர்கள் உண்ணாவிரதம்

நடிகர் ரஜினிகாந்த் தனிக்கட்சி தொடங்கி அரசியலில் ஈடுபடவேண்டும் என்று கோரி கடந்த டிசம்பர் மாதம் 29ம் திகதி தமிழ் நாட்டில் ரஜினி ரசிகர்கள் உண்ணாவிரதமிருந்தனர்.

காலை ஏழு மணிமுதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் பட்டது. அகில இந்திய ரஜினிகாந்த் பேரவை இந்த உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்திருந்தது.




## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை

### 1996ஆம் ஆண்டு வருடத்துக்கான மாணவர் அனுமதி

சுவிட்சர்லாந்தின் சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையில் மூன்று ஆண்டு ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கையை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து ஏற்கப்படுகின்றன.

**தகைமை:** க.பொ.த. (சா/த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம் 17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறைப் பயிற்சிக் காலத்தின்போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10.000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூ 470,000) சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கை பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1996 தை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய விவரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தழுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்**

LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு 11.
தொ. பே. 320139
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)

(Advt)



## — புறூஃப் ரீடர் தேவை —

பதிப்பகம் ஒன்றிற்கு தமிழில் நல்லறிவுள்ள அனுபவமிக்க ஒப்புநோக்காளர் (புறூ.ஃப் ரீடர்) தேவை. தொடர்பு கொள்ளவும்.

மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.இல.1772, கொழும்பு.



சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன் ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/ நோர்வே நாடுகளுக்காகன

## தினமுரசு வாரமலர் சந்தா விபரம்

ஒரு வருடத்திற்கு-தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)

ஆறு மாதங்களுக்கு-தபாற் செலவு உட்பட ரூபா 1130/= (26 வாரங்கள்)

மூன்று மாதங்களுக்கு-தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | அமெரிக்கா/ கனடா |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= (52 வாரங்கள்) US $ 38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) US $ 20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) US $ 11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O.BOX-1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

# வானில் இருந்து வந்தது யாருக்கு?

இந்தியாவின் நட்பு அலட்சியம் செய்யப்படக் கூடியதல்ல என்ற முடிவுக்கு புலிகள் வந்துள்ளனர் என்றுதான் தெரிகிறது.

இந்திய சஞ்சிகையான அவுட்லுக்கர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'இந்தியா நமது நண்பன்' என்று சொல்லியிருக்கிறார்.

இதே பாலசிங்கம்தான் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை தீவுத்திடலில் நடைபெற்ற கிட்டுவின் அஞ்சலிக் கூட்டத்தில் இந்தியா நண்பனாக நடித்து முதுகில் குத்திவிட்டது என்று முன்னர் கூறியிருந்தார்.

ராஜீவ் காந்தி விவகாரத்தை இந்தியா மறந்துவிடத் தயாராக இருந்தால், கிட்டுவின் விடயத்தையும் புலிகள் மறந்துவிட்டு இந்தியாவோடு கைகுலுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை புலிகளின் மனமாற்றம் கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் மாதிரித்தான்.

இந்தியப் படையோடு புலிகள் யுத்தம் நடத்தியதை ஒரு கெட்ட கனவாக இந்தியா எப்போதோ மறந்திருக்கும்.

அதுமட்டுமல்ல, இந்திய படைக்கு எதிராக புலிகள் தொடுத்த கெரில்லாப் போர் உத்திகளை இந்திய இராணுவ அதிகாரிகளும் பாராட்டியிருந்தனர்.

எனவே-இந்தியப் படையோடு யுத்தம் நடத்தியது மூலம் இந்தியாவுடன் நிரந்தர முறிவு புலிகளுக்கு ஏற்பட்டுவிடவில்லை.

இரு தரப்புமே நடந்தவை மறந்தவையாக இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்று சொல்லக்கூடிய தருணம் ஒன்று மீண்டும் உருவாகியும் இருக்கலாம்.

ஆனால், ராஜீவ் காந்தி படுகொலை சகலவற்றையும் உடைத்துப் போட்டுவிட்டது.

ராஜீவ் கொலையை மறைமுகமாக நியாயப்படுத்த புலிகள் மேற்கொண்ட கடுமையான இந்திய விரோத நிலைப்பாடும் எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியமாதிரி அமைந்தது.

இந்திய நட்பு முறிந்தமையால் ஏற்பட்ட விளைவுகளை புலிகள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் சேர்ந்தே அனுபவிக்கின்றனர்.

வடக்கில் ஒரு பிரதேசமே மக்கள் இல்லாத மயானபூமியாகியிருக்கிறது.

பல இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

உலகில் ஏதாவது ஒரு நாடு கரிசனையோடு கவனித்ததா என்றால், இல்லை என்றே பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

1987 இல் வடமராட்சியில் படைத்தரப்பு முன்னேறியபோது இந்தியாவின் விமானங்கள் வானில் வட்டமிட்டன. உணவுப் பொதிகளை மக்களுக்கு விநியோகித்தன.

இப்போது யாழ்ப்பாணம் முழுவதுமே மக்கள் இல்லாத மயானம் ஆகும்வரை மட்டுமல்ல, ஆனபின்னர்கூட எந்தவொரு நாடும் அனுதாபமாகப் பேசவில்லை.

15 வருடகாலத்திற்கு மேற்பட்ட தொடர்ச்சியான ஆயுத போராட்டம். புலிகளின் தரப்பில் மட்டும் இதுவரை ஏழாயிரம் பேருக்கு மேல் பலியாகியுள்ளனர்.

உலகமே வியக்கும் கரும்புலித் தாக்குதல்கள் பல நடந்தாகிவிட்டன.

இத்தனைக்குப் பின்னரும் உலக அரங்கில் ஒரு நாடு கூட புலிகள் பக்கம் நியாயமிருப்பதாகப் பேச முன்வரவில்லை.

புலிகளின் நடவடிக்கைகள் உலக அரங்கில் ஆச்சரியத்தை ஏற்படுத்திய அளவுக்கு, அனுதாபத்தை திரட்டத் தவறிவிட்டன.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட விதம் ஆச்சரியமானதுதான். ஆனால் அந்த ஆச்சரியம் அக்கொலையை நியாயப்படுத்தி விடாது.

அதனால் புலிகள் என்றால் பயங்கரமான ஒரு அமைப்பு. கொலைகளுக்கு அஞ்சமாட்டார்கள் என்ற கருத்துக்கள்தான் உலக அரங்கில் ஏற்பட்டுள்ளன.

ஒரு போராட்டத்திற்கு தேவையானது உலக அனுதாபமே தவிர, அச்சமூட்டும் தோற்றப்பாடல்ல என்பதை புலிகள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் தளப்பிரதேசத்தை வைத்துக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு தனியாட்சி நடத்திக்கொண்டிருந்தபோது புரியாத பல விஷயங்களை தற்போது புலிகள் புரிந்து கொள்ள முடியும்.

சர்வதேச நிலவரப்படி இலங்கைப் பிரச்சனையில் வெளிநாடுகள் தலையிட வேண்டுமானால் மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

(1) தமது நாட்டு நலன். (2) அனுதாபம். (3) தமது நாட்டிற்குள் ஏற்படும் தூண்டுதல்கள். அல்லது தலையிடச் செய்யும் நிர்ப்பந்தங்கள்.

முதல் இரண்டு விடயங்களும் சகல வெளிநாடுகளுக்கும் பொருந்தும்.

ஆனால் மூன்று காரணங்களும் ஒன்றாகப் பொருந்துவது இந்தியாவுக்குத்தான்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகள்தான் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பெரியதொரு பாதுகாப்பு அரணாக இருந்து வந்திருக்கிறது.

இந்திய அரசின் கவனத்தை இலங்கையின் இனப்பிரச்சனையில் கூடுதலாக திருப்பி விட்டதும் தமிழ்நாட்டு மக்களின் எழுச்சிகள்தான்.

தமிழ்நாட்டு மக்களது உணர்வுகளை இந்திய அரசு அத்தனை சுலபமாக தட்டிக் கழித்துவிட முடியாது.

ஏனைய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உள்ள பாரிய வித்தியாசம் அதுதான்.

அமெரிக்காவுக்கோ, அவுஸ்திரேலியாவுக்கோ அப்படியொரு நிர்ப்பந்தம் கிடையாது.

அவர்கள் விரும்பினால் தலையிடலாம். விரும்பாவிட்டால் பேசாமல் இருந்து வேடிக்கை பார்க்கலாம். யாரும் நிர்ப்பந்திக்கப் போவதில்லை.

அந்த நாடுகள் தலையிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு பாதகமான முடிவை எடுத்தால் கூட அதனால் அந்த நாடுகளின் உள்ளே பிரச்சனை ஏதும் ஏற்படாது.

இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்தபோது அதனைக் கண்டிக்க தமிழ்நாட்டில் ஆட்கள் இருந்தார்கள்.

இந்தியப் படையை திருப்பி அழைக்க வேண்டுமென்று கருணாநிதி உட்பட பல தலைவர்கள் குரல் எழுப்பினார்கள்.

இந்திய ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்தியப் படை விரைவாக வெளியேறியதற்கு கருணாநிதியின் முயற்சியும் ஒரு காரணம்.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்த வி.பி.சிங்கும் கருணாநிதியும் நல்ல நெருக்கத்தில் இருந்தனர். எனவே கருணாநிதி சொன்னதை நிறைவேற்றினார் வி.பி.சிங்.

ஆக, எப்படிப் பார்த்தாலும் இலங்கைப் பிரச்சனையில் வெளிநாட்டு தலையீடு என்று வரும் போது இலங்கைத் தமிழர்களுக்கு ஒப்பீட்டளவில் சாதகமானது இந்தியாவின் தலையீடுதான். இந்தியாவின் நட்புத்தான்.

ஏனெனில் இந்திய அரசுக்கு தமிழக மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் இருப்பதால், கேட்க ஆளில்லை என்ற கணக்கில் நடக்க முடியாது.

ஆனால், சர்வதேச அரங்கில் இருக்கக்கூடிய நாடுகளில் ஒப்பீட்டளவில் சிறந்தது எது? என்ற கணிப்பில் புலிகள் தவறு செய்துவிட்டனர்.

தமது தவறை காலம் கடந்தே அவர்கள் உணர்ந்திருக்கின்றனர். ஆனால் அந்தத் தவறால் இந்தியாவும், புலிகளும் கொடுத்துள்ள விலை அதிகம்.

தமிழக மக்களுக்கு பிரபாகரன் நன்றி தெரிவித்துள்ளார்.


கடந்த காலங்களில் இதைவிட பெரியளவில் தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தனர். போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அப்போதெல்லாம் புலிகளோ வேறு இயக்கங்களோ நன்றி சொன்னதில்லை.

இப்போதுதான் பிரபாகரன் நன்றி சொல்லியிருக்கிறார். சகல வழிகளிலும் தமிழக மக்களோடு நெருக்கமாக புலிகள் விரும்புகிறார்கள்.

தமிழ்நாட்டை விட்டால் உலகில் வேறெங்கும் இலங்கைத் தமிழருக்காக உணர்வு பூர்வமாகக் குரல் கொடுக்கக் கூடிய மக்கள் இல்லை என்பதை புலிகள் உணர்ந்துள்ள தருணம் இது.

உலக வரைபடத்தில் இந்தியா என்ற ஒரு நாடு இருப்பதையே மறந்துவிட்டு, சர்வதேச அரங்கில் தமது நண்பர்களை புலிகள் வலைபோட்டு தேடிக்கொண்டிருந்தனர்.



போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் இந்தியாவை ஓரம் கட்டிவிட்டு எங்கோ இருக்கும் சில நாடுகளுக்கு புலிகள் சிபாரிசு செய்தார்கள்.

அந்த நாடுகளில் ஒன்றுகூட புலிகளுக்காக மட்டுமல்ல, தமிழர்களுக்காகக்கூட பரிந்து பேச முன்வரவில்லை என்பதும் இந்த நெருக்கடியான தருணத்தில் கவனிக்க வேண்டிய விஷயம்தான்.

எப்படியோ இந்திய உறவு சம்பந்தப்பட்ட விடயத்தில் புலிகள் தமது கடும் நிலையை தளர்த்த முன்வந்துள்ளார்கள் என்று நம்பலாம்.

ஆனால், இந்தியா மறப்போம், மன்னிப்போம் என்ற கட்டத்திற்கு முன்வருமா என்பது சந்தேகம்தான்.

தமிழக மக்களின் மத்தியில் மீண்டும் இலங்கைத் தமிழர் ஆதரவு நிலையும், அலையும் எழுந்துள்ளன. ஆனாலும் அந்த அலையை புலிகளுக்கு சார்பானதாக மாற்ற முடியாமல், இந்திய புலனாய்வு நிறுவனங்கள் புத்திசாலித்தனமாக விளையாடுகின்றன.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவைக் கொல்ல பிரபாகரன் பெண் கரும்புலிகளை அனுப்பியிருக்கிறார் என்று ஒரு செய்தி வெளியானது.

அது திட்டமிட்டுக் கட்டப்பட்ட கதைதான் என்பதில் சந்தேகமில்லை.

தமிழக அரசியல் தலைவர்கள் புலிகளுக்கு சாதகமாக வாய்திறக்காமல் இருப்பதற்கு போடப்பட்ட புத்திசாலித்தனமான பூட்டுத்தான் அது.

எதிர்பார்த்தது போலவே தமிழக அரசியல் தலைவர்களும் புலிகளுக்கு சார்பாகப் பேசாமல், இலங்கைத் தமிழர்களுக்காக அனுதாபம் என்பதோடு நின்றுவிட்டார்கள்.

நரசிம்மராவை கொலை செய்ய கரும்புலி என்ற கட்டுக்கதை அடங்கிக் கொண்டிருக்க புதிய பூதம் ஒன்று கிளம்பியிருக்கிறது.

# பேச்சுக்கு முன் முற்றுகை!

இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் அன்டனோ விமானத்தில் இருந்து போடப்பட்ட ஆயுதங்கள் புலிகளுக்கு வந்தவையா? என்று சந்தேகம் எழுந்துள்ளது.

விமானம் மடக்கப்பட்டு விமானிகளிடம் விசாரணைகள் நடந்துள்ளன. இந்தியாவில் உள்ள இந்து தீவிரவாத அமைப்பு ஒன்றுக்கே ஆயுதங்கள் போடப்பட்டன என்று விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் கூறுவது ஒரு புறமிருக்க, ஆயுதப் பொதிகள் போடப்பட்ட சூழ்நிலை, போடப்பட்ட ஆயுதங்கள் என்பவற்றைப் பார்க்கும்போது புலிகளோடு தொடர்பு படுத்தக்கூடிய அம்சங்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

புலிகளுக்கும் அந்த சம்பவத்திற்கும் இடையிலுள்ள தொடர்பை நிராகரிக்கக்கூடிய காரணங்கள் பின்வருமாறு:

* மேற்கு வங்காளத்தில் ஆயுதப் பொதிகளை போடுவதைவிட, வடக்கில் வன்னிப் பகுதியில் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போயிருக்கலாம்.

* மேற்கு வங்காளத்தில் இருந்து கடல் வழியாக வடபகுதிக்கு ஆயுதங்களை கொண்டு வருவதைவிட, நேரடியாக கப்பல் மூலமாகவே ஆயுதங்களை புலிகள் தருவித்திருக்கலாம். இரண்டும் ஒரே விதமான சிரமம் தான்.

கப்பலை சர்வதேசக் கடல் பரப்பில் நிறுத்திவிட்டு, அதிவேக விசைப்படகுகளில் சென்று ஆயுதங்களை கடத்திவரும் வசதியும் புலிகளிடம் இருக்கிறது.

விமானத்திலிருந்து பொதிகளைப் போட்டு, அவற்றை தவறவிடாமல் சேகரித்து பின்னர் படகுகள் மூலம் கொண்டுவருவது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போன்ற காரியம்.

அவசரமாகத் தேவைப்பட்டதால் விமானத்தில் ஆயுதங்கள் அனுப்பப்பட்டதோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது.

ஆயுதப் பொதிகளில் இருந்த ஆயுத ரகங்கள் அந்த சந்தேகத்தையும் அடித்து விடுகின்றன.

புலிகளிடம் தாராளமாக இருக்கக்கூடிய தன்னியக்கத் துப்பாக்கிகள், ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர்கள் போன்ற ஆயுதங்கள் தான் பொதிகளில் இருந்தன.

புலிகளுக்கு இப்போது அவசியம் தேவைப்படுவது ஆட்டிலறி ரகப் பீரங்கிகள் போன்ற நீண்ட தூர தாக்கும் திறன் கொண்ட ஆயுதங்கள்தான்.

அவை உடனடியாகக் கிடைத்தால் படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கையில் புலிகள் பாரிய பதிலடியைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

ஆக- அவசரமாகத் தேவைப்படுவது கனரக ஆயுதங்கள்தான். பொதிகளில் வந்தவை அவ்வாறானவை அல்ல.

தவிர பாரமான கனரக ஆயுதங்களை பாரசூட் மூலமாக போடுவதும் சுலபமான காரியமல்ல.

எனவே-மேற்கு வங்காளத்தில் விழுந்த ஆயுதங்களை புலிகளோடு முடிச்சுப் போட்டு பார்ப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை.

ஆனால், மேற்கு வங்காளத்தில் விழுந்த ஆயுதங்களின் பின்னணியில் நிச்சயமாக ஒரு நாடு இருக்கிறது.

விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, ஆகக் குறைந்தது 20 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை வெகு அலட்சியமாக வீசிவிட்டுச் செல்லக்கூடிய வசதி தனி ஒரு இயக்கத்திற்கு இருக்க முடியாது.

ஆக, ஏதோ ஒரு நாடு பின்னணியில் இருக்கிறது. அதன் ஒரே நோக்கம் இந்தியாவுக்கு தலையிடி கொடுப்பதுதான்.

அங்குதான் மற்றொரு கோணத்தில் இந்தியா விழிப்பாக இருக்கும் அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு தலையிடி கொடுக்க விரும்பும் நாடு, இலங்கையில் புலிகளுக்கும் உதவ முன்வரலாம். இந்தியாவுக்கு எதிரான ஒரு இயக்கம் இலங்கையில் இருந்து கொண்டிருப்பதை அந்த நாடு விரும்பலாம்.

அதனால் எதிர்காலத்தில் வன்னிக் காட்டிலும் பொதிகள் போடப்படக்கூடும் என்று இந்தியா நினைக்கவே செய்யும்.

எனவே- தனது கடல் பரப்பிலும், வான்பரப்பிலும் இந்தியா இனிமேல் உஷாராகவே இருக்கும். கடும் கண்காணிப்பு செலுத்தப்படும்.

மேற்கு வங்காளத்தில் விழுந்த பொதிகள் யாருக்காக போடப்பட்டாலும் அதனால் புலிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சமீப எதிர்காலத்தில் வெளியிலிருந்து கடல் மார்க்கமாகவோ, வான் மார்க்கமாகவோ புலிகள் ஆயுதங்களை தருவிப்பதை இயலாததாக்கிவிட்டது.

அது மட்டுமல்லாமல் மேற்கு வங்காள ஆயுதப் பொதிகள் விவகாரம் தெளிவாகும்வரை தமிழக அரசியல் தலைவர்களும் புலிகளுக்கு ஆதரவாக பெரியளவில் பேச முடியாமல் போய்விட்டது.

மேலும், மேலும் வெளியுலக ஆதரவு வட்டத்தில் புலிகளுக்கு பாதகமான நிலைகள்தான் தற்போது காணப்படுகின்றன.

அதேவேளை இலங்கை அரசு வெளியுலகில் புத்திசாலித்தனமாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

புலிகளோடு போரைத் தவிர வேறு வழிகளில் பேசமுடியாது என்ற கருத்தை வெளியுலகில் ஏற்படுத்தியிருப்பதுதான் அரசுக்கு உள்ள பெரிய சாதகம். பெரிய பலம்.

அதனை வெட்டி ஓடுவதற்காக பேச்சுக்குத் தயார் என்று புலிகள் அறிவித்துள்ளார்கள்.

ஆனால் அதனை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாதவகையில், புறங்கையால் அலட்சியம் செய்யுமளவுக்கு அரசு தனது நிலையை பலப்படுத்திக் கொண்டுள்ளது.

சித்திரைக்கு முன்னர் புலிகளை முற்றுகையிட்டு ஒரு வழி பண்ணி விடலாம் என்று அரசு திட்டமிட்டுள்ளது.

அதற்கு முன்னர் புலிகளோடு பேசுவது தமது வியூகங்களை பலவீனமாக்கி விடும் என்று அரசு கருதுகிறது.

போரில் பெறும் வெற்றிகளில் 'ருசி கண்டுவிட்ட அரசு உடனே பேச்சுக்கு திரும்பும் என்று நம்புவதற்கு இடமில்லை.

ஆனால், போர்க்களம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டாது என்பதை அரசு உணரத் தவறுவதும் பாதகமாக முடியலாம்.

20 வருடகால புலிகள் இயக்க வளர்ச்சியை இரண்டு மாத கால யுத்த வெற்றி மூலம் அரசு கணிப்பிடுவது தவறாகலாம்.

---

## அதிரடி அய்யாத்துரை



கிழக்கில் கூட்டான கட்சிக்கு வெகுஜனப் பிரதிநிதிகளாக இருப்பவர்களில் இருவர் சிங்கங்கள். ஒன்று பழைய சிங்கம். இன்னொன்று புதிய சிங்கம். தனது வாக்காளர்கள் கூடுதலாய் உள்ள பகுதிக்குள் தலை நீட்டக்கூடாது. அங்குள்ள வாக்காளர்களுக்கு தன்னைக் கேட்காமல் எதுவும் செய்யக்கூடாது என்டு பழைய சிங்கம் உத்தரவு போட்டிருக்கிறாராம். விழா ஒன்றுக்கு புதிய சிங்கத்தை கூப்பிட்ட போனவர்கள் சிலர். அய்யய்யோ அது பழைய சிங்கத்தின் பகுதி நான் வரமாட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கோ என்டு சொல்லிப் போட்டாராம். கட்சி ஒண்டாக இருந்தாலும் வாக்கும் செல்வாக்கும் கைவிட்டு போக விடுவாரா பழைய சிங்கத்தார்? மாட்டார். விடமாட்டார்.

மலைப்பகுதி தனித்துவ தலைவருக்கு தனக்குப்பின் கட்சி எப்படிப்போகும் என்ட விஷயத்தில கடும் கவலையாம். 'சந்திர'மானவரை வெளியே விடாமல் உள்ளே கொண்டுவந்தால் என்னவென்டும் தனித்துவ தலைவர் யோசிச்சவராம். வெளியிலை இருப்பதை விட உள்ளே வந்தால் வாக்குகளும் உடையாது. போட்டியும் இருக்காது. ஒரு நிபந்தனைதான் இணைப்பு முயற்சிக்கு தடையாக இருக்குதாம். பேரனை பொதுச் செயலாளராக வைத்துக் கொண்டுதான் ஓடிப் போடப் பார்க்கிறாராம் தலைவர். 'சந்திர'மானவர் அதற்கு ஒருநாளும் ஒப்புக்கொள்ளமாட்டார்.

கிழக்கிலை வேட்டுக்கள் முழங்கி புதுவருசத்தை கொண்டாடினவையாம் சீருடையினர். திடீர் என்டு சத்தம் கேட்க சனம்தான் கொஞ்சம் அமளிப்பட்டு போச்சுதுகள். எப்படியோ வருசு ஆரம்பத்தையும் கொளுத்திக் கொண்டாடியாச்சு. ஆரம்ப வேட்டுச் சத்தம் வருஷ அந்தம் வரை கேட்காமல் இருந்தால் சரிதான். எனக்கென்டா டப்பு டப்பு சத்தங்கள் அவ்வளவு லேசாக நம்மைவிட்டுப் போகும் தெரியேல்லை.

தேவலுக்கு பொறுப்பான அதிகாரமுள்ளவரின் கருத்துக்களை அவரது பிரிவில் உள்ள சிலர் கேட்க மறுக்கினமாம். மேலிடத்தின் அதாவது சூப்பர் பவரின் நேரடியான நியமனத்தில் வந்தவர்கள்தான் கேட்க மறுக்கினமாம். தவலுக்குப் பொறுப்பானவர் வெளியே சிரித்துக் கொண்டிருந்தாலும் உள்ளே சின்ன புகைச்சல் இருக்கத் தான் செய்யிது. அவரது சிபாரிசில் அரச பத்திரிகை ஒன்றுக்கு துணையாசிரியராய் சென்றவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டாராம்.

ரெண்டு எழுத்தாரிடம் சிக்கிக் கொண்டு வாங்கிக்கட்டிய பலர் ஆசுப்பத்திரியிலை இருக்கினம். படகுகள் மூலம் நழுவப்பார்த்துப் பிடிபட்ட ஆட்களுக்கு நல்ல சாத்துப்படியாம். அவைதான் ஆசுபத்திரியிலை படுக்கினம்.

ஒரு 500 பேர்வரையான ஆட்கள் போய் ரெண்டு எழுத்தாரிடம் யாழ் செல்ல அனுமதி கேட்டவையாம். வெள்ளைக் கொடியோடு போகப் பார்கிறோம் என்டு சொல்லிவிருக்கினம். 'அப்படியோ?' என்டு கேட்டுப் போட்டு ரெண்டு எழுத்துப் பொறுப்பாளர் என்ன பதில் சொன்னவராம் தெரியுமோ? "ஒரு 500 பேரை இயக்கத்திற்கு எடுத்து தந்து போட்டு நீங்கள் போறது என்டால் போகலாம்" என்டாராம். அனுமதி கேட்க வந்தவை அவசரமாய் இடத்தை காலி பண்ணிப் போட்டினமாம்.

யாழ்ப்பாணத்தில் அதிகார தரப்பார் நடத்தும் விழாக்களில் ஒரு மதத்தில் இருந்து மட்டும் அதிகமானவர்கள் மேடையில் காணப்படுகினம். தொலைக்காட்சியிலை அதைப் பார்க்கும் சனத்துக்கு சந்தேகம் வரத் தானே செய்யும். ஏற்கனவே யாழ்ப்பாணத்திற்கு வேறு ஒரு பெயர் சொல்லிக் கொண்டிருக்கினம். யாழ்ப்பாணம் நல்ல பெயர்தானே. அதை மாற்றும் ஆசை ஏன் பாருங்கோ? தமிழ் சனத்தின் இதயத்தை வெல்ல முதல் பலா தங்கள் இதயங்களை சுத்தப் படுத்த வேண்டியிருக்கு. முதலில் அதைச் செய்ய வேணும்.

கனடாவிலை ரெண்டு எழுத்தாருக்கு மெல்ல மெல்ல நெருக்கடிகள் ஏற்படத் தொடங்குகுதாம். அங்கிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒண்டை விற்க வேண்டாம் என்டு ரெண்டு எழுத்தார் தடுத்தவையாம். கனடா புலனாய்வுத் துறையினர் குறிப்பிட்ட பத்திரிகை விநியோகத்திற்கு பாதுகாப்பு கொடுக்கினமாம். கைது செய்யப்பட்டாலும் ரெண்டு எழுத்து பிரமுகரையும் இதுவரை விடுதலை செய்யேல்லை. கனடாவிலை இப்படியெண்டால், பிரான்சிலை இரண்டு எழுத்தாருக்கு அதிகார தரப்பும் மறைமுக ஆதரவாம்.

புதுவருசத்துக்கு வெத்தலை போட்டவர்கள் உங்களில் எத்தனை பேர்? ஒரு நாட்டுப் பாடல் கேளுங்கோ:

"வாடா வெத்திலை வதங்க வெத்திலை
வாய்க்கு நல்லால்லே
நேத்து வெச்ச சாந்துப் பொட்டு
நெற்றிக்கு நல்லால்லே
குருவி கொத்தின அரளிப்பூவு
கொண்டைக்கு நல்லால்லே
மாமன் வந்து தோப்பிலே நிக்குது
மனசுக்கு நல்லால்லே."

பாடிப்பாருங்கோ. ஒரு நயம் தாவில் வரும்.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**அரசியல் தொடர்**
**அற்புதன் - எழுதுவது**

# "தமிழீழத்தைக் கைவிட்டால் தம்பிக்கும் வெடிதான்"

**இந்திய இராணுவம்**

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை 1983க்கு பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமும் கலைஞர் கருணாநிதியும் வலியுறுத்திக் கொண்டிருந்தனர்.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பும் கோரிக்கையை எம்.ஜி.ஆர். ஆதரிக்கவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனையைப் பொறுத்தவரை கருணாநிதியும், எம்.ஜி. ஆரும் ஏட்டிக்குப் போட்டியான நிலைப் பாட்டையே மேற்கொண்டு வந்தனர்.

இந்திய இராணுவத்தை அனுப்பும் கோரிக்கையிலும் அந்த நிலைப்பாடு தொடர்ந்தது.

ஈழப் போராளி அமைப்புக்களைப் பொறுத்தவரை இந்திய இராணுவம் தேவையில்லை என்ற கருத்தையே கொண்டிருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ், புலிகள் இயக்கம், புளொட் ஆகிய அமைப்புக்கள் இந்திய இராணும் நேரடியாகத் தலையிடத் தேவையில்லை; ஆயுத உதவியை மட்டும் இந்தியா வழங்கினால் போதுமானது என்று கூறிவந்தன.

பெங்களூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் கூறியது இது:

"இந்தியா இராணுவம் அனுப்பத் தேவையில்லை. எமது போராட்டத்தை ஆதரித்தால் போதுமானது. எம்மிடம் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தமிழீழ விடுதலையை நாமே பார்த்துக் கொள்வோம்."

புளொட் அமைப்பினால் "வங்கம் தந்த பாடம்" என்றொரு புத்தகமும் வெளியிடப்பட்டது.

இந்திய இராணுவம் பங்களாதேஷில் நடந்துகொண்ட முறைகளைப் பற்றி அதில் விபரிக்கப்பட்டிருந்தது.

பெண்களை பலாத்காரப்படுத்



தியமை, பங்களாதேஷில் இருந்து முற்போக்கு சக்திகளை கொன்று குவித்தமை போன்ற சம்பவங்கள் அவற்றில் முக்கியமாக குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்திய இராணுவம் தொடர்பாக கடும் விமர்சனத்தை முன்வைத்த ஒரே யொரு ஈழப் போராளி அமைப்பு அப்போது புளொட் அமைப்புத்தான்.

'வங்கம் தந்த பாடம்' என்னும் நூலை தயாரித்ததில் சந்ததியார், டொமினிக் போன்றவர்களுக்கு முக்கிய பங்கு இருந்தது.

பின்னர் சந்ததியார் புளொட் உட்பிரச்சனையால் கொல்லப்பட்டார்.

'வங்கம் தந்த பாடம்' நூலின் ஆயிரக்கணக்கான பிரதிகள் குழிவெட்டிப் புதைக்கப்பட்டன.

சந்ததியார், மற்றும் புளொட் அமைப்புக்குள் நடைபெற்ற உட்கொலைகள் பற்றி இந்திய புலனாய்வுப் பிரிவினர் அறிந்தே இருந்தனர்.

சந்ததியாரும், மற்றும் உட் பிரச்சனைகளில் சம்பந்தப்பட்டவர்களும் இந்திய எதிர்ப்பாளர்கள் என்றும், அதனால்தான் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றும் கூறிவிட்டார் உமா மகேஸ்வரன்.

அதனால்தான் 'வங்கம் தந்த பாடம்' மண்ணோடு மண்ணாக மறைக்கப்பட்டது.

**நம்ப நட**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் பத்மநாபா ஆரம்ப முதலே இந்தியா தொடர்பாக சந்தேகங்களை கொண்டிருந்தவர்.

இந்திய முதலாளித்துவ அரசுடன் நம்ப நட, நம்பி நடவாதே என்ற நிலைப்பாடே இருக்கவேண்டும் என்பதுதான் பத்மநாபாவின் உறுதியான கருத்தாக இருந்தது.

தற்போது இதனைச் சொல்லும் போது பலருக்கு ஆச்சரியம் ஏற்படலாம். பின்னாளில் இந்தியாவின் உற்ற நண்பனாக கருதப்பட்டவர் பத்மநாபா. அவரது 1985ம் ஆண்டு நிலைப்பாடு பற்றியே இப்போது குறிப்பிடுகிறேன்.

அதேபோல ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் இராணுவத் தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவும் இந்தியாவின் நேரடித் தலையீட்டை அப்போது விரும்பவில்லை.

**ரெலோ வரவேற்பு**

ஒரே ஒரு இயக்கம்தான் இந்திய இராணுவத்தின் தலையீட்டை விரும்பியது; வரவேற்றது.

அந்த இயக்கம்தான் ரெலோ. கருணாநிதியின் நிலைப்பாட்டை ஆதரித்ததோடு, இந்திய இராணுவம் வந்தால் தமக்குத்தான் நல்ல வாய்ப்பு என்றும் ரெலோ நம்பியிருந்தது.

ஒரு பேட்டியொன்றில் சிறீசபாரத் தினம் சொல்லியிருந்தது என்ன தெரியுமா?

**"நாங்கள் போர் வீரர்கள். எமது அரசியலை இந்தியா பார்த்துக் கொள்ளட்டும்."**

அதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்தியாவின் நேரடித் தலையீட்டை விரும்பியிருந்தது.

இந்தியா நேரடியாகத் தலையிட்டால் தமக்கு ஒரு முக்கிய பாத்திரம் கிடைக்கலாம் என்பதுதான் அந்த விருப்பத்தின் காரணமாக இருந்தது.

அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு பேட்டியில் சொன்னது இது:

**"நாங்கள் நோயாளிகள். இந்தியா முன்வைக்கும் தீர்வை நாம் ஏற்றுக் கொள்வோம்."**

அமுதரின் கருத்து புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

'வீரவேங்கை' பத்திரிகையில் கோவை மகேசன் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"அமிர்தலிங்கம் கூறியதுபோல சுதந்திரத்தை நேசிக்கும் எந்தத் தமிழனும் கூறமாட்டான். சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒட்டுப் போடும் எந்தத் தீர்வும் நீடித்து நிலைக்காது. சுதந்திர ஈழமே ஒரே வழி என்பதை இந்திய அரசுக்கு உணர்த்துவதே எமது ஒரே சிந்தனையும் செயலுமாக இருக்க வேண்டும்.

**பரவிய வதந்தி**

ரெலோ இயக்கம் யாழ்ப்பாணத்தில் பரவலான பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்த சுபாஸ் விடுதி, அசோகா விடுதி போன்றவற்றுக்கு சென்ற ரெலோ உறுப்பினர்கள் சொன்னது இது:

"அறைகள் தயாராக இருக்கட்டும். இன்னும் சில வாரங்களில் முக்கியமான ஆட்கள் வரப் போகிறார்கள்." அவர்கள் கூறியது இந்திய இராணுவ அதிகாரிகளை.

பொதுமக்களிடமும் 'இந்தியப்படை வரப்போகிறது' என்று ரெலோ உறுப்பினர்கள் ஜாடைமாடையாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

1985இன் இறுதியில் பரவிய பெரிய வதந்தியும் அதுதான்.

'இந்தியப் படை வந்தால் எங்கள் ஆட்சிதான்' என்று ரெலோ உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருந்ததும் ஏனைய இயக்க உறுப்பினர்களுக்கு வெறுப்பூட்டியது.

அதனையடுத்து யாழ்ப்பாணத்தில் இரவோடு இரவாக சுவரொட்டிகள் தோன்றின.

"இந்தியப் படை வந்தால் தமிழ் பெண்களின் மானம் போய்விடும்."

"வேண்டாம், வேண்டாம் இந்தியப் படை இங்கே வேண்டாம். வங்கத்தில் பல்லாயிரம் தேச பக்தர்களை படுகொலை செய்தது இந்தியப் படை."

"ஈழம் மற்றொரு பங்களாதேஷாக மாறவேண்டுமா? இந்தியப் படை இங்கே வரத்தான் வேண்டுமா?"

போன்ற வாசகங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன. சுவரொட்டிகளில் அதனை வெளியிட்டவர்கள்-தமிழ் மக்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் பெயரில் சுவரொட்டியை வெளியிட்டவர்கள் புலிகள். சுவரொட்டி வாசகங்களை தயாரித்தவர் திலீபன்.

**திலீபன் சொன்னது**

இந்தியப்படையின் வருகையால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி ஆராய யாழ்ப்பாணத்தில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தவர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்ப்பாணம் அத்தியடியில் இருந்த மக்கள் விடுதலைப்படை தலைமைக் காரியாலயத்தில் கலந்துரையாடல் நடந்தது.

புலிகள் அமைப்பின் சார்பில் திலீபன், ஈரோஸ் சார்பாக கைலாஸ், ஈ.பி.ஆர். எல்.எஃப். சார்பாக டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புளொட் அமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வேறொரு அவசர காரியம் இருந்தமையால் வரமுடியாது போய் விட்டதாக புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் மெண்டிஸ் பின்னர் அறிவித்திருந்தார்.

ரெலோ சார்பாக பொபியை அழைத்திருந்தும் அவர் கலந்து கொள்ளவில்லை.

இந்தியப் படை வந்தால் ஏற்படக்கூடிய நிலை தொடர்பாக ஈரோசும், ஈ.பி. ஆர்.எல்.எஃப். அமைப்பும் ஒரேவிதமான கருத்தைத் தெரிவித்தன.

புலிகளின் சார்பாக திலீபன் சொன்ன கருத்துத்தான் ஆச்சரியமானது.

"இந்தியப் படை அதிகாரிகளோடு பயிற்சி முகாமில் நான் பழகியிருக்கிறேன். அவர்கள் பண்பானவர்கள். இந்தியப் படை வந்தால் நம் மக்களைக் கொடுமைப்படுத்துவார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் தமிழீழத்தை உருவாக்கித் தருவார்களா என்பதுதான் சந்தேகம். அதனால்தான் இந்தியப்படை நேரடியாக வருவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை" என்றார் திலீபன்.

திலீபன் சொன்னதைக் கேட்ட ஈ.பி.ஆர். எல்.எஃப், ஈரோஸ் பிரதிநிதிகளுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது.

"இந்தியப் படை வந்தால் பெண்களை பாலியல் வதைக்கு உள்ளாக்கும் என்று சுவரொட்டி போட்டிருக்கிறீர்களே" என்று கேட்டார் டக்ளஸ் தேவானந்தா.


அதற்கு தீலிபன் சொன்ன பதில்: "அப்படியானால்தான் சனம் பயப்படும். வேறு விதமாகச் சொன்னால் சனத்துக்கு புரியாது. இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு என்றெல்லாம் எழுதினால் விளங்குமோ? அதுதான் அப்படிப் போஸ்டர் போட்டனாங்கள்" என்றார் திலீபன்.

அதே திலீபன்தான் பின்னர் இந்திய அமைதிப்படைக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து பலியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கிட்டுவின் உறுதி**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 1985ம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஈ.பி.ஆர். எல்.எஃப் அமைப்பும், புலிகள் அமைப்பினரும் நெருக்கமாகவே இருந்தனர்.

மாத்தையா தொடர்பாக கோபம் இருந்தாலும், கிட்டுவுடன் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி சந்தித்துப் பேசிக்கொண்டே இருந்தார்.



ஈழப் போராளி இயக்கத் தலைவர்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன்.
**இடமிருந்து வலமாக: பத்மநாபா(ஈ.பி.ஆர்.எல்.எஃப்), சறீசபாரத்தினம்(ரெலோ), மு.கருணாநிதி, பாலகுமார்(ஈரோஸ்).**

அக் காலகட்டத்தில் கிட்டுவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் வெளியே தெரியாத வகையில் மனக்கசப்புக்கள் உருவாகியிருந்தன.

யாழ்ப்பாண பத்திரிகைகள் மூலமும், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மூலமும் கிட்டு பிரபலமாகியிருந்தார்.

தனது மோட்டார் சைக்கிளில், இடுப்பில் பிஸ்டலோடு, முன்புறம் ஒரு குரங்குக் குட்டியோடு வலம் வரும் கிட்டு யாழ்ப்பாண மக்களுக்கும் சுவாரசியமான ஒருவராகவே தெரிந்தார்.

டக்ளஸ் தேவானந்தா தனது பாதுகாவலர்கள் சகிதம் 'பிக்கப்' வாகனம் ஒன்றில் வலம் வருவார். அவரது வாகனத்திலும் ஒரு குரங்குக் குட்டி பயணம் செய்யும்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பத்மநாபாவுக்கும் இடையில் அப்போது மனக்கசப்பு தோன்றியிருந்தது.

டக்ளஸ் தேவானந்தாவும், கிட்டுவும் பிரபலமானதும், அவர்களை மீறி யாழ்ப்பாணத்தில் அவர்களது தலைமைகளால் செயற்படமுடியாதளவுக்கு செல்வாக்குப் பெற்றிருந்ததும், இரு இயக்கங்களுக்கும் அவர்கள் இருவரையும் சர்ச்சைக்குரியவர்களாக்கியது.

கிட்டு ஒரு முறை உறுதியோடு சொன்ன கருத்து இதுதான்.

**"தமிழீழத்தைக் கைவிட்டுப் போட்டு தம்பி வந்தாலும் வெடிதான்."**

தம்பி என்றழைத்தது பிரபாவை. அப்போது தமிழ் நாட்டில் தங்கியிருந்தார் பிரபாகரன்.

**ரெலோவோடு பிரச்சனைகள்**

புலிகள் அமைப்பிற்கும் ரெலோவுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் எப்போதும் பிரச்சனைதான்.

கிட்டுவை 'மொட்டை' என்று அழைத்து கேலி செய்வார்கள் ரெலோ உறுப்பினர்கள். கிட்டு அதைக் கேட்டும் கேட்காதவர் போலச் சென்றுவிடுவார்.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிவர முற்படுவார்கள் படையினர்.

உடனே சகல இயக்கங்களும் விரைந்து சென்று பதிலடி கொடுப்பார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அடிக்கும் மோட்டார் ஷெல்லுக்கு கோட்டை இராணுவத்தினரிடம் நல்ல மரியாதை.

உடனடியாகப் பின்வாங்கி விடுவார்கள். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் மட்டுமே மோட்டார் ஷெல்கள் இருந்தன. சொந்தமாகத் தயாரிக்கப்பட்டவை.

புலிகள் அமைப்பினர் பதில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாதளவுக்கு தொல்லை கொடுப்பார்கள் ரெலோ அமைப்பினர்.

இராணுவத்தினரை நோக்கி புலிகள் அமைப்பினர் முன்னேறிச் சென்று விட்டால், ரெலோ பின்னால் நின்று சுட்டுப் பயம்காட்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் புலிகள் அமைப்பினரும், கிட்டுவும் காட்டிய சகிப்புத் தன்மை உண்மையில் மெச்சத்தக்கதுதான்.

ரெலோவைப் பொறுத்தவரை அதன் உறுப்பினர்கள் கட்டுப்பாடு விடயத்தில் மிக மோசமாக இருந்தனர்.

**மிரட்டும் பெயர்கள்**

பொறுப்பாளர்களுக்கு மற்றவர்களைப் பயமுறுத்தக் கூடிய பெயர்களாக வைத்துக் கொண்டார்கள்.

தோட்டுத்தில்லை, மொட்டை மாமா என்றெல்லாம் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன.

இயக்கங்கள் உருவாக முன்னர் வீதிக்கு வீதி நின்ற சண்டியர்களும் அப்படித்தான் பெயர்களை வைத்திருந்தார்கள்.

உதாரணமாகச் சில பெயர்கள்; கொட்டடிமணி, சுருள்வாள் சின்னத்தம்பி.

சண்டித்தனப்பாணியில் கட்டுப்பாடு இல்லாமல் செயற்பட்ட ஒரு அமைப்பாகத்தான் ரெலோ இயங்கிக் கொண்டிருந்தது.

ரெலோவுக்கு யாழ்ப்பாண பொறுப்பாளராக இருந்தவர் தாஸ்.

தனது உறுப்பினர்கள் சகிதம் கள்ளுத் தவறணைகளில் வாகனத்தை நிறுத்தி வயிறுமுட்டக் குடிப்பார் தாஸ்.


தாஸ் மீது விசுவாசம் கொண்ட ஒரு பெரிய அணியே ரெலோவுக்குள் இருந்தது.

அவர்கள் அனைவருமே தாஸின் ஊரவர்களாகவோ, அயலவர்களாகவே இருந்தார்கள்.

தாசுக்கு கிடைத்த மரியாதையை ஒரு பிரபல சண்டியனுக்கு முன்பிருந்த மரியாதையோடும் ஒப்பிடலாம்.

புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் பற்றி வரும் வாரம் சொல்கிறேன். (தொடர்ந்து வரும்)

## குறி தவறிய கரும்புலித் தாக்குதல்



புல்மோட்டைக் கடற்பரப்பில் 3.09.95 அன்று கடற் கரும்புலித் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

கடற் கரும்புலி மேஜர் நகுலன், கடற்கரும்புலி கண்ணாளன் ஆகியோர் வெடி மருந்து நிரப்பப்பட்ட படகொன்றில் விரைந்தனர்.

புல்மோட்டைக் கடற்பரப்பில் டோறா படகை குறிவைத்து நெருங்கும்போது கடற்படையினர் கண்டுவிட்டனர். உடனே தாக்குதல் நடத்தினர். கடற்கரும்புலிப் படகு வெடித்துச் சிதறியது. இரு கரும்புலிகளும் பலியானார்கள்.

மேஜர் கண்ணாளன் புலிகளது தயாரிப்பான 'உயிராயுதம்' படத்தில் நடித்தவர். ஒரு டோறாப் படகை தாக்கும் கரும்புலியாக நடித்திருந்தார்.



# அலசுவது-இராஜதந்திரி

# மக்களுக்காகவே பொலிஸாரே தவிர பொலிஸாருக்காக மக்களல்ல!

யாழ்ப்பாணத்தில் மீண்டும் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அங்கே சிவில் நிர்வாக நடவடிக்கைகளை விரிவுபடுத்தப் போவதாக, யாழ்குடாநாட்டின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டும், சிவில் நிர்வாகங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவற்றினால் உடனடியாகப் பயன் பெறும் வகையில் எவருமே யாழ்ப்பாணத்தில் இல்லை என்பது மட்டும் தற்போது தெளிவு.

யாழ்குடாநாட்டின் மக்கள் அனைவரும் தற்போது எல்.ரி.ரி.ஈ.யினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வருவதையும், இப்பிரதேசங்களில் எல்.ரி.ரி.ஈ.யினரின் பொலிஸ்காரர்கள் சேவையாற்றி வருவதையுமே வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் வடக்கே ஒருபுறம் அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளும், மறுபுறம் எல்.ரி.ரி.ஈ.யினரின் நிர்வாகமும் இடம் பெறுவதையே காணமுடிகின்றது.

இருந்த போதிலும் தற்போதைய சூழ்நிலையில் லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ள யாழ்குடாநாட்டுவாசிகள் தமது அத்தியாவசிய அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கத்தையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியதாகவுள்ளது.

அரிசி, சீனி, மா, மருந்து வகைகள், எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையுமே கப்பல் பார்த்து நின்ற கதையாகவே மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு புகையிரத எண்ணெய் வண்டிகளில் எரிபொருள் சென்றமையும், அந்த எரிபொருள்கள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை அண்டியிருந்த எண்ணெய்க்குதங்களில் நிரப்பப்பட்டமையும் இன்று ஏதோ கனவில் நடந்தவை போன்றே தென்படுகின்றன.

யாழ்ப்பாண மக்கள் லட்சக்கணக்கில் தற்போது இடம் பெயர்ந்துள்ளார்கள். இம்மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டுக் குடிபெயர்ந்து தற்போது இரண்டு மாதங்கள் பூர்த்தியாகின்றன.

இந்த இருமாதகாலங்களில் குடிபெயர்ந்த மக்களில் பலர் உணவு, மருந்துவகைகள் இன்றியே மரணத்தைத் தழுவியுள்ளனர். மேலும் பலர் உணவு, உறைவிடம் என்பன உரியவகையில் கிடைக்காது தொடர்ந்து சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

இடம் பெயர்ந்த மக்களில் பெரும் பாலானவர்கள் கிளிநொச்சி, தென்மராட்சிப் பகுதிகளிலேயே தஞ்சம் அடைந்துள்ளனர். இப்பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை அங்கிருந்து வரும் அரச அதிபர்கள் மூலமாகவே தெரிய முடிகின்றது.

பத்திரிகையாளர்கள் அப்பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்த்துவர தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தணிக்கை நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் இச்செய்தித் தணிக்கை நீக்கம் வடபகுதி செய்திகளைப் பொறுத்தவரை எவ்வித பயனுமற்றதாகவே இருக்கின்றது.

ஏனெனில் எந்தவொரு பத்திரிகையோ அல்லது வானொலி, தொலைக்காட்சி என்பனவோ யாழ்குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்களின் கதிபற்றி உண்மையான தகவல்களைத் திரட்ட அனுமதிக்கப்படாமையால் செய்திகள் வெளிவரமுடியாதுள்ளன.

கடந்த காலங்களில் யாழ்குடாநாட்டுக்கு அரசின் அனுமதியின்றித் தமது சொந்த விருப்பத்தின் பேரில் பத்திரிகையாளர்கள் பலர் தென்னிலங்கையிலிருந்து சென்று வந்தனர்.

ஆனால் அவ்வாறு சென்று வந்த சிங்களப் பத்திரிகையான 'ராவய'வின் செய்தியாளர்கள், மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் ஆகியோரும் வடபகுதி பற்றி உரிய தகவல்களைப் பிரசுரிக்காது இருக்கின்றனர்.

எனவே தற்போது 'பத்திரிகாதர்மம்' என்பது கூட பக்கச்சார்பானதாகவே இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் 1996ம் ஆண்டினுள் பிரவேசிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து வடக்கு-கிழக்கு பிரச்சனைத்தீர்வு தொடர்பாக நாட்டுமக்கள் நிறையவே எதிர்பார்த்திருக்கின்றனர்.

எனவே சந்திரிகா ஆட்சியாளர்களும் யாழ்குடாநாட்டில் இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்தியுள்ள இத்தருணத்தில், வடபகுதி மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கே முக்கியமளிக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

வடக்கே பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டிருப்பதை ஆட்சியாளர்கள் தமது ஆளுமையை விஸ்தரித்திருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

ஆனால் வடக்கே இன்று நிலைமைகள் இவ்வளவு தூரம் மோசமடைந்திருப்பதற்கு, பத்து வருடங்களுக்கு முன்னர் வடக்கே நிலவிய நிர்வாகச் சீர்கேடுகளும் முக்கியகாரணமாக அமைந்திருந்தன.



வடக்கே அனைத்துப் பாகங்களிலும் பொலிஸ் நிலையங்கள் காணப்பட்டிருந்தன. சிறந்த பொலிஸ் நிர்வாகிகளும் அங்கே சேவையாற்றியிருந்தனர்.

ஆனால் காலப்போக்கில் வடபகுதியில்

# வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு உரமூட்டிய பொலிஸ் அடாவடித்தனங்கள்



காணப்பட்ட பொலிஸ் நிர்வாகம் என்பது அன்றைய ஆட்சியாளர்களின் தவறான வழிநடத்தலின் கீழ் அத்துமீறல்களில் ஈடுபட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து கூப்பிடுதூரத்திலேயே யாழ்ப்பாணப் பொதுசன நூலகக் கட்டிடம் அமைந்துள்ளது.

இப்பொதுசனநூலகம் 1982ம் ஆண்டு எரிக்கப்பட்ட சம்பவத்தில் சிவில் உடையில் காணப்பட்ட பொலிஸ்காரர்களும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது நிரூபணமாகியிருந்தது.

இது தவிர வடக்கே பல்வேறு அடாவடித்தனங்களிலும் அன்று பொலிஸார் குதித்திருந்தனர். இதன் காரணமாகவே வடக்கே தீவிரவாதம் முளைவிட்ட காலங்களில் பொலிஸ்காரர்களும், பொலிஸ் நிலையங்களுமே தீவிரவாதிகளின் இலக்குகளாயின.

வடக்கே ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் முதல் தடவையாகத் தாக்கப்பட்டது. பின்னர் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களும் தாக்கப்பட்டு பொலிஸ்காரர்கள் பலரும் கொல்லப்பட்டிருந்தனர்.

அக்காலகட்டத்தில் வடக்கே இராணுவத்தினரின் பலம் இன்று போல அதிகரித்திருக்கவில்லை. அத்துடன் இராணுவ வாகனங்கள்கூட இன்று போல வடக்கே நடமாடித்திரியவில்லை.

பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டு சட்டம்-ஒழுங்கு நடவடிக்கைகள் ஆட்டங்காண ஆரம்பித்ததையடுத்தே இராணுவத்தினர் வடபகுதி நோக்கி பெருமளவில் நகரலானர்கள்.

நாளடைவில் யாழ் நகரின் கேந்திரப் பகுதிகளிலும் அவர்கள் முகாமிடத் தொடங்கினர்.

இந்நிலையில் வடக்கே சிவில் நிர்வாகம் சீர்குலைந்து இன்று அப்பிரதேசம் இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பதற்கு "வேலியே பயிரை மேயும்" பாணியில் அன்று பொலிஸ் நிர்வாகம் அமைந்திருந்ததே முக்கிய காரணமாகும்.

வடக்கே மாத்திரமல்ல; தென்னிலங்கையில்கூட பொலிஸ்சேவை மிகவும் மோசமானதொன்றாகவே விளங்கியிருந்தது. இதனை ஜனாதிபதி சந்திரிகாகூட ஒரு சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் உரை நிகழ்த்தியிருந்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதியின் இந்த உரை இடம் பெற்றிருந்தது.

பிரதிப் பாதுகாப்பமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தவும் ஜனாதிபதியையடுத்து பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் அன்று உரையாற்றியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா அன்று பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினார் என்பதை விட பொலிஸாரின் தவறான நடவடிக்கைகளைச் சாடினார் என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

பொலிஸாரின் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட ஒரு சாதாரண பிரஜை அவர்களைப் பார்த்து தாறுமாறாகத் தூற்றுவது போல மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி அன்று உரை நிகழ்த்தியிருந்தார். அவர் அன்று ஒரு கட்டத்தில் இப்படிக் கூறியிருந்தார்:- "நாட்டுமக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சிப்பீடத்தில் ஏற்றியிருப்பது வெறுமனே அரசியல் காரணங்களுக்காக மட்டுமல்ல, தமக்குப் பாதுகாப்பு வேண்டியுமே பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சிப்பீடத்தில் ஏற்றியுள்ளார்கள். கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பொலிஸ்சேவை என்பது ஓர் இருண்ட சேவையாகவே இருந்தது. பொலிஸார் தமது மனம் போனபோக்கில் அன்றைய அரசியல் வாதிகளின் விருப்பு வெறுப்புகளையே நிறைவேற்றி வந்தனர்.

அரசியல்வாதிகளின் வீட்டு நாய்களுக்கு இறைச்சியைச் சுமந்து செல்லுமளவுக்கு பொலிஸார் தம்மைத் தாழ்த்தியிருந்தனர். ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பதன் மூலம் அப்பாவி மக்களை ஆட்டிப்படைக்கலாம் என்று பொலிஸார் கருதியிருந்தனர்.

மக்கள் பொலிஸாரை மிகவும் வெறுத்தே இருந்தனர். அவர்களுக்கெதிராகப் பொங்கி எழுந்தனர். தூஷண வார்த்தைகளால் தூற்றி தமக்கு ஏற்பட்ட இன்னல்களுக்குப் பழிவாங்க வேண்டுமென மக்கள் விரும்பினர். ஆனால் பொலிஸ் சேவையை நாம் சீர் செய்வோம் அவர்களைக் கையாளும் பொறுப்பை எம்மிடம் விட்டு விடுங்கள் என்று பொதுமக்களுக்கு உறுதியளித்ததையடுத்தே மக்கள் பொறுமையடைந்துள்ளார்கள்" என்று ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது மறைந்த கணவர் விஜய குமாரதுங்காவும்கூட ஐ.தே.க. ஆட்சியில் பொலிஸாரின் விஷமத்தனங்களுக்குள்ளாகியிருந்தனர்.

எனவே இன்று ஜனாதிபதியாக-நிறைவேற்று அதிகாரங்களுடன் இருக்கும் சந்திரிகா, வடக்கே பொலிஸ் நிலையங்களைத் திறந்து சிவில் நிர்வாகத்தைச் சீர் செய்ய ஆரம்பித்துள்ள இத் தருணத்தில், கடந்த காலங்களில் அங்கு சிவில் நிர்வாகம், சட்டம்-ஒழுங்கு என்பன ஏன் சீர்குலைந்தன என்பதையும் தீர ஆராய வேண்டியது இன்றியமையாததாகின்றது.

மக்களுக்காகவே பொலிஸாரே தவிர, பொலிஸாருக்காக மக்கள் இல்லை. எனவே இன்று மக்களில்லாத யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்களை ஆரம்பித்திருக்கும் சந்திரிகா அரசு அவற்றை முழுமையாக இயங்கச் செய்வதற்கும், கூடவே அவற்றின் மீது மக்களின் விசுவாசத்தைப் பெறுவதற்கும் மேலும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற துன்பகரமான நிகழ்வுகள் காரணமாக தமது பாதுகாப்பைத் தாமே நிர்ணயிக்க வேண்டும் என்ற நிலைக்கே யாழ்ப்பாண மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்களை அரசு மீண்டும் திறந்துள்ளது.

இப் பொலிஸ் நிலையங்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னையின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு அமைவானதாக அப்பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகள், சுயகௌரவம், பாதுகாப்பு என்பனவற்றை உறுதிசெய்வதாக தமிழ் மக்களுக்காக, தமிழ்பேசும் பொலிஸாரைக் கொண்டவையாகவே அமைந்திருத்தல் வேண்டும்.


இல்லையேல் "பழைய குருடி கதவைத்திறவடி" என்பது போலவே யாழ்ப்பாணத்தில் மீண்டும் பொலிஸ் நிலையங்களைத் திறந்து வைத்த ●

மனித வெடிகுண்டு

# அருகில் வந்த மரணம்

## கார்லோஸ்

**எழுதுவது—ரசிகன்**




காா்லோஸை தீர்த்துக் கட்ட அனுமதி கேட்டுவிட்டு, நகம் கடித்துக் கொண்டு பதட்டமாக இருந்தான் ஃபிரான்ஸ் உளவாளி.

உள்ளே இரவு விடுதியில் பதட்டமே இல்லாமல், மரணம் தன்னை நோக்கி தயாராக இருப்பதை அறியாதவனாக அழகியின் மடியில் கிடந்தான் கார்லோஸ்.

தொலைபேசி சிணுங்கிற்று. ஃபிரான்ஸிலிருந்து மேலதிகாரி தனது உளவாளியோடு பேசினார்.

"வேண்டாம். கார்லோஸ் தங்கியுள்ள இரவு விடுதி ஒரு வி.ஐ.பிக்குச் சொந்தமானது. அல்ஜீரிய ஜனாதிபதியின் உறவினருக்கு உரிமையானது. அங்கு ஒரு கொலை நடந்தால் விஷயம் விபரீதமாகும். பொலிஸ் தீவிரமாகும். சுட்டது நாம் என்று தெரிந்தால், இருநாடுகளும் புன்னகைக்குப் பதிலாக கசப்பை முகங்களில் அணிய வேண்டியிருக்கும்."

"அல்ஜீரியாவில் அவனைத் தொடவே வேண்டாம் என்கிறீர்களா சேர்?"

"யார் அப்படிச் சொன்னது? குருவி சுடுவதுபோல தாரளமாகச் சுடலாம். வேறொரு இடம் பார்! நம்மில் சந்தேகம் வராதமாதிரி அந்த இனிய எதிரியை உன் பிஸ்டல் சாப்பிடவேண்டும். புரிகிறதா?"

"புரிகிறது."

"குட்!" டொக் என்று வைக்கப்பட்டது மறுமுனையில் ரிசீவர்.

அருகில் வந்து விலகிப்போனது மரணம் என்று தெரியாமல், அந்த அழகிக்கு தனது பாரத்தை உணர்த்திக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

எல்லாம் முடிந்து வெளியே வந்த போது நள்ளிரவு அமைதி தெருக்களில் நிரம்பியிருந்தது.

ஒரு டாக்ஸி பிடித்து ஏறியபோது, 'யாரோ கவனிக்கிறார்கள்' என்று உள்ளுணர்வு எச்சரித்தது. உடனடியாக திரும்பிப் பார்க்காமல், டாக்ஸியில் ஏறிய பின்னர் விழிகளை எறிந்ததில், இரவு விடுதியில் இருந்து ஓடி காருக்குள் ஏறும் நபர் சந்தேகத்துக்குரியவனாக தெரிந்தான்.

'நிச்சயமாக அவன் அல்ஜீரியாக் காரனல்ல. ஃபிரான்ஸ் அல்லது பிரிட்டன் உளவாளியாக இருக்கலாம். ஆகவே நான் மோப்பம் பிடிக்கப்பட்டுவிட்டேன்.'

டாக்ஸி போய்க் கொண்டிருந்தது. "சொல்லுமிடத்தில் நிறுத்து. இதுவரை வந்ததுக்கு தரவேண்டியது எவ்வளவு?" கேட்டுவிட்டு மேலதிகமாகவும் பணம் கொடுத்து, தெருவில் ஒரு திருப்பம் வந்தபோது, டாக்ஸியை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டான். இருளில் கரைந்து போனான்.

டாக்ஸியில் கார்லோஸ் இருப்பதாக நினைத்துக் கொண்டு ஃபிரான்ஸ் உளவாளிகளின் கார் பின் தொடர்ந்தது.

☎➡☎

"முட்டாள்!" என்றார் தொலைபேசியில் ஃபிரான்சிலிருந்து அந்த மேலதிகாரி. முட்டாள் எனப்பட்ட அந்த உளவாளி அல்ஜீரியாவில் ஒரு பொதுத் தொலைபேசி கூண்டில் முகம் வெளிறியபடி வசைகளை செவிகளில் வாங்கி சேகரித்துக் கொண்டிருந்தான்.

"போ. தேடு. அல்ஜீரியாவின் மூலை முடுக்கெல்லாம் தடவிப்பார். எங்காவது தட்டுப்படாமலா போகப் போகிறான். அவனது பிரதான பலவீனம் நமக்கு உதவும். புரிகிறதா? என்ன புரிகிறது? எது அவன் பலவீனம்?"

"பெண்கள்!"

"பரவாயில்லை, கொஞ்சம் சுயசிந்தனையை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாய். ஃபிரான்ஸ் உளவுத் துறைக்குத் தேவை முட்டாள்களல்ல! என்ன புரிகிறதா?"

"புரிகிறது."

"புரிந்தால் போதாது. கார்லோஸ் தப்பக்கூடாது. அல்ஜீரியாவில்தான் அவன் அடக்கம் செய்யப்படவேண்டும். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்வது உன் உத்தியோகத்திற்கு நல்லது?"

"என்ன சேர்?"

"உன்னைவிட எதிரி புத்திசாலி. தப்பி விடுவான்."

✂✖✂

தப்பிவிட்டான் கார்லோஸ். ஏடன் விமான நிலையத்தில் இறங்கிய கார்லோஸ் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

மற்றொரு மரணவலை ஏடன் நகரில் தனக்காகக் காத்திருப்பது தெரியாமல் உற்சாகமாக வெளியே வந்தான்.

தளபதி வாடி ஹாட்டாட்டின் ஆட்கள் விமான நிலையத்தின் வெளியே காத்திருந்தார்கள்.

தளபதி வாடி ஹாட்டாட் யேமன் நாட்டில்தான் அப்போது தங்கியிருந்தார்.

தான் புறப்படும் செய்தியை சூசகமான செய்திமூலம் வாடி ஹாட்டாட்டுக்கு தெரியப்படுத்தியிருந்தான் கார்லோஸ்.

வாடி ஹாட்டாட்டின் ஆட்களின் முகத்தில் வழக்கமான புன்னகை இல்லை என்பதை கார்லோஸ் கவனித்தான்.

வேன் ஒன்றில் அவனை அழைத்துப் போனார்கள். யாருமே சரியாகப் பேச வில்லை. ஒரு அந்நியன் போல நடத்தப் பட்டான்.

வீடொன்றில் தங்கவைக்கப்பட்டான்.

சகல வசதிகளும் இருந்தன. வெளியே கடும் பாதுகாப்பு இருந்தது. துப்பாக்கிகளோடு வாடி ஹாட்டாட்டின் ஆட்கள் காவலிருந்தார்கள்.

தனக்கு வீட்டுக்காவல் விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள கார்லோஸுக்கு அதிக நேரமாகவில்லை.

'மௌக்கார்பெல்லை - எனது பொறுப்பாளரை ஏன் கொல்ல வேண்டி ஏற்பட்டது' என்று வாடி ஹாட்டாட்டுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

எடுத்துச் சொன்னால் எல்லாம் புரியும். அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்று தெரியவில்லை. கார்லோஸ் பொறுமையிழந்து கொண்டிருந்த ஏழாவது நாள் வாடி ஹாட்டாட் அவனை அழைப்பித்தார்.

அவனை இருக்கக்கூடச் சொல்ல வில்லை. முகம் சிவந்திருந்தார். ஒரே வார்த்தையில் வெடித்தார்.

"ஏமாற்றிவிட்டாய்!"

கார்லோஸ் உடனே பதில் சொல்ல வில்லை-மௌனமாய் நின்றான்.

"மௌக்கார்பெல் பாலஸ்தீனத்துக்காக செய்த காரியங்களுக்கு நீ கொடுத்த பரிசு துரோகம். நீ சுட்டது மௌக்கார்பெல்லை. குத்தியது என் முதுகில்! பேசாதே உனக்கான தண்டனை உறுதி செய்யப்பட்டுவிட்டது. மரணம்!"

தான் சொன்னதைக் கேட்டும் கலக்கமோ, அச்சமோ இன்றி நேர்பார்வையாக பார்த்துக் கொண்டிருந்த கார்லோஸை பாதி வெறுப்போடும், மீதி வியப்போடும் ஏறிட்டார் வாடி ஹாட்டாட்.

"என்ன மௌனமாக இருக்கிறாய்? உன்மீது நான் எத்தனை நம்பிக்கை வைத்திருந்தேன் தெரியுமா?"

"தெரியும்!"

"தெரிந்துமா, துரோகம் செய்தாய்?"

"நான் செய்தது துரோகம் என்று தடித்த எழுத்துக்களில் உங்கள் மனதில் குறித்துக் கொண்டுவிட்டீர்கள். நான் விளக்கம் சொல்ல வாய்ப்புத் தந்தால் சில உண்மைகள் தெரியவரும்."

"சொல்."

கார்லோஸ் சொல்லத் தொடங்கினான்.

☆☆☆

ஈராக் நாட்டின் தலைநகர் பாக்தாத். அங்கு உதவி அதிபர் அலுவலகம். உதவி அதிபரின் அகலமான மேசையின் மீது கத்தரிக்கப்பட்ட பத்திரிகைச் செய்திகள்.

செய்திகளில் முழுக்க, முழுக்க கார்லோஸ். ஒவ்வொரு செய்தியையும் உன்னிப்பாக படித்துக் கொண்டிருந்த உதவி அதிபர் சதாம் ஹுஸைன் தனது அடர்த்தியான மீசைக்குள் ஒரு புன்னகைக்கு இடம் கொடுத்தார்.

தனியாக ஒரு ஃபைலில் கார்லோஸ் பற்றிய தகவல்கள் சதாம் ஹுஸைனின் உதவியாளரால் சேகரிக்கப்பட்டு தரப்பட்டிருந்தன.

சதாம் ஹுஸைன் ஒரு பட்டனை அழுத்தினார். அந்தரங்க செயலாளர் ஓடோடி வந்தார்.

"கார்லோஸ்தான் சரியான ஆள். இப்படியான ஒருவன்தான் எனக்கு உடனடித் தேவை. வாடி ஹாட்டாட்டை போனில் பிடிக்க முடியுமா?"

"முடியும்!"

"செய்யுங்கள்."

சதாம் ஹுஸைன் மனதில் திட்டம் விரிந்து தயாராக இருந்தது.

சவுதி அரேபியா, ஈரான் இரு நாடுகளும் தான் எண்ணெய் வியாபாரத்தில் ஈராக்குக்கு போட்டி.

"எண்ணெய் விலை ஏற்றப்பட வேண்டும்" என்று ஈராக் சொல்லும் போதெல்லாம், சவுதி அரேபியா மறுத்துக் கொண்டிருக்கிறது. ஈரானும் ஒத்து ஊதிக் கொண்டிருக்கிறது.

ஒரே வழிதான் இருக்கிறது. இரண்டு நாட்டு எண்ணெய்வள அமைச்சர்களையும் முடித்துவிட வேண்டும்.

ஈராக் இதில் சம்பந்தப்படுவது தெரியாமல் காரியம் கச்சிதமாக முடிய வேண்டும்.

முடிக்கக்கூடிய ஒரே ஆள், ஒரேயொரு ஆள் கார்லோஸ் மட்டும்தான்.

✶ ✓✶

காா்லோஸ் சொன்ன விளக்கத்தினால் வாடி ஹாட்டாட்டுக்கு மௌக்கார்பெல் மீது வெறுப்பு ஏற்படத் தொடங்கியது.

ஆனால், கார்லோஸ் தன்னிச்சையாக முடிவுசெய்து தண்டனை கொடுத்தது சரியல்ல என்று நினைத்தார் வாடி ஹாட்டாட்.

கார்லோஸ் மீண்டும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டான்.

சதாம் ஹுஸைனிடம் இருந்து தளபதி வாடி ஹாட்டாட்டுக்கு வந்த தொலைபேசி அழைப்பு கார்லோஸின் விதியை மாற்றி எழுதியது.

சதாம் ஹுஸைன் தொலைபேசியில் வாடி ஹாட்டாட்டுக்கு, "விஷயம் அவசியம். நேரில் பேச வேண்டும். உடனே வாருங்கள். கூடவே கார்லோஸும் வரட்டும்."

"கார்லோஸ்.."

"இந்தச் சந்திப்பின் நாயகனே அவன் தானே, ஏன் வேறு வேலையாவது கொடுத்துவிட்டீர்களா?"

"இல்லை.. ஆனால்.."

"யோசிக்க வேண்டாம். உங்கள் இயக்கத்திற்கு பணக் கஷ்டம் என்ற பேச்சே இருக்காது. வாருங்கள், நீங்களும், கார்லோஸும்."

அடுத்த சில நாட்களில் பயங்கரமான சதிவலை விரிந்தது.

வலை பின்னியது சதாம் ஹுஸைன். வலையோடு புறப்பட்டது கார்லோஸ்.

(தொடர்ந்து வரும்)

# உள்ளேயும் ஜாலிதான்

## ஒற்றன் ரவுண்டப்

சென்ற வாரம் கடற்கரைகளுக்கு சென்று வந்தது நான்தான் என்று எத்தனை பேர் ஊகித்தீர்கள். அதற்காகவே போன தடவை பெயர் போடவில்லை. சரியாக ஊகித்த புத்திசாலிகளுக்கு (ஐஸ்தான்) பாராட்டுக் கரகோசம், டப்-டப்-டப்.

இவ்வார ரவுண்டப்பில் சிக்கியவர் நான் விரல் சூப்பும் காலத்துக்கு முன் தோன்றிய நட்புக்கு அடையாளமான நண்பர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து எட்டு மாதங்கள் 3 நாட்கள். அதில் தேடுதலின் போது யாழ்ப்பாண அடையாள அட்டையின் உதவியால் பொலிஸ் நிலையங்கள் மூன்றுக்கு விஜயம் செய்து, அங்கு ரூம் வாடகையில்லாமல் தங்கும் பாக்கியம் பெற்றது மொத்தமாக 14 நாட்கள். (சரியான கணக்குப் புலி)

முன்பென்றால் சிறை மீண்ட தியாகிகள் பட்டியலில் சேர்ந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் நாலு கூட்டங்களில் வீர உரையாற்றலாம்.

என் இனிய தமிழ் மக்களே. சிறையாம் சிறை. பசியால் மெலிந்து பட்டினி கிடந்து (சிறைச்சாலையில் ஒரு வேளை கூட சாப்பிடாமல் இருக்கவிட மாட்டார்கள் என்பது வெளியே தெரியாது) பாழ்பட நேர்ந்தாலும் என் தமிழ் தாயை வழிபட மறுப்பேனா? (சிறையில் சிங்களம் கற்றுக் கொண்டு ஜெயில் அதிகாரிகளை தாஜா பண்ணியதும் யாருக்கும் தெரியாது)

இப்போது கொழும்பில் வடக்கு-கிழக்கு, மலையக இளைஞர்களில் அநேகமானோர் தியாகிகள்தான். அல்லது சிறை மீண்ட செம்மல்கள்தான்.

சிறை அனுபவம் எப்படி? நண்பர் முறைப்பார் என்று பார்தால் நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

"ஒரு பிரச்சைனயுமில்லை. காசு இருந்தால் லேசு"

"என்ன இப்படிச் சொல்லுகிறீர். அடி கிடி விழவில்லையோ?"

"தினமும் பிடிக்கும் எல்லோருக்கும் அடிப்பது என்றால் அதற்கென்று தனியாக ஒரு பிரிவை ஆரம்பிக்க வேண்டியிருக்குமல்லோ. மேலும் எனக்கேன் அடிக்கப் போகிறார்கள். நல்ல வெளிநாட்டு சப்பாத்து வாங்கிக் கொடு என்று கேட்டவருக்கு திருப்தியான நல்ல சப்பாத்து வாங்கிக் கொடுத்தனான் அல்லவோ!"

"என்ன விசாரித்தார்கள்?"

விசாரிக்க எங்கே நேரம்?

யாழ்பாண அடையாள அட்டை என்றால் குறைந்தது ரெண்டு நாள் உள்ளே வைத்தேயாக வேண்டும். உள்ளே இருக்கும் போது தேவையானதை வெளியில் இருந்து பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். அந்த விடயத்தில் உதவுவார்கள்."

"உற்சாக பானம்"

"அது இல்லாமலா? கிடைக்கும். இரவு முழுக்க ஜாலியாகப் பாடிக் கொண்டிருக்கலாம். ஒருநாள்தான் மாட்டுப் பட்டுப் போனோம்?"

"அதெப்படி மாட்டீனீர்கள்?"

"நிலையப் பொறுப்பாளர் நடு இரவில் வருவார் என்று யார் கண்டார்கள். திடீர் விஜயம் செய்ய, எங்கள் பாட்டுச் சத்தம் அவரை வரவேற்க, காவல் பணியில் இருந்தவர்களுக்கு விழுந்தது கிழி. நமக்கு விழுந்தது நாலு தட்டு."

"அடடே.. அத்தோடு நிறுத்திவிட்டீர்களாக்கும். மீதி நாட்கள் தண்ணியில்லாமல் வயிறு காய்ந்திருக்குமே?"

"உமக்கொன்றும் விஷய ஞானமே கிடையாதப்பா. அதற்குப் பின்னர் மாட்டிக் கொள்ளாமல் சென்றி அலேட்டாக இருந்தது. தண்ணி தாராளம். உள்ளே போயும் ஜாலியாக இருந்துவிட்டு வர வேண்டுமானால் இரண்டு விஷயம் பிரதானம் தெரியுமோ?"

"அதென்னப்பா இரண்டு விஷயம்?" ஆர்வமாய் கேட்டேன்.

"மொழி தெரியவேண்டும். சரளமாய் பேசிக் கொண்டு இருக்கலாம். பை கொஞ்சம் கனமாக இருத்தல் நன்று. மேலும் சில உப குணங்கள் தேவைப்படும்!"

"என்னது?"

"நாலு பேர் பார்த்துக் கொண்டிருக்க நம்பர் வன்னுக்கு போகக்கூடிய பக்குவம், நாலுமணத்தை சட்டென்று பழக்கப் படுத்திக் கொள்ளும் அநுபவம். நுளம்புக்கு குறட்டை விட்டு மிரட்டும் துணிச்சல், தப்பித் தவறி தடுப்புக்காவல் போட்டாலும் தாங்கும் உறுதி, மொத்தமாகச் சொன்னால்.." நாமே அவர் சொல்ல முன்னர் முடித்து வைத்தோம்.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்."

"அதேதான்!" என்றார் முகமெல்லாம் பல்லாக.

"நீர் ஒரு புலியேதான்" என்று சொல்ல நண்பர் பதறிப்போனார். "அதாவது அநுபவத்தில்" என்று விட்டு விடை பெற்றோம். நண்பரின் நிம்மதிப் பெருமூச்சு முதுகில் சுட்டது.

இந்த ரவுண்டப் தகவல்கள் புதியவர்கள் யாருக்காவது உபயோகமானால் நாலு பேருக்கு உதவியவன் என்று சித்திரகுப்தன் சிபாரிசு செய்து, சொர்க்கத்தில் எனக்கொரு இடம் கிடைக்கலாம்.

# ஹோமியோபதி என்றால் என்ன?

"ஹோமியோபதி மருத்துவ முறை 18ம் நூற்றாண்டில் டாக்டர் சாமுவேல் ஹானேமன் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த முறையின் மூலமாக கொஞ்சம், கொஞ்சமாக மருந்தின் அளவை அதிகரித்து உடலில் பொதுவான எதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்தி, உடலுக்கு பாதுகாப்பு திறனை கொடுப்பதுதான் அடிப்படையான விஷயம்.

குறிப்பிட்ட நோய்க்கு என்று தனியாக மருந்து கொடுத்தாலும் உடலின் பொதுவான எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதே முக்கிய நோக்கமாக இருக்கும்."

ஆங்கில மருத்துவ முறைகளை படித்து பயிற்சி பெற்றவர்கள் ஹோமியோபதி பயிற்சி பெறுவார்கள்.

ஹோமியோபதி மருந்துக்கள் செடி, கொடி மூலிகைகள், சில பிராணிகள் மூலம் கிடைக்கும் இரசாயனங்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாகும்.

இந்த மருந்தை கொடுத்தால் உடலில் சென்று புதிய உணர்வை ஏற்படுத்துகிறது. உடலில் உள்ள உயிரியல் மற்றும் இரசாயன சக்திகள் மாற்றமடைந்து மின்காந்த அலைகளை ஏற்படுத்துகின்றன. இப்படி மின்காந்த அலைகளை உருவாக்கித்தான் உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது ஹோமியோபதி.

நோயாளியின் குணம், உடற் கூறு என்று பல விஷயங்களை கவனித்து, குறிப்பிட்ட நோய் எதனால் வருகிறது என்று கண்டறிந்து மருந்து கொடுப்பார் ஹோமியோபதி டாக்டர்.

# விவாகரத்துக்கு விலை 78 கோடி



டயானா பி.பி.சிக்கு பேட்டி கொடுத்தாலும் கொடுத்தார், எலிசபெத் ராணிக்கு பொத்துக் கொண்டு வந்துவிட்டது கோபம்.

இத்தனைக்கும் டயானா வேறு ஆண்களுடன் பழகும் விஷயம் ராணிக்கு தெரியாமல் இருக்கவில்லை.

காமிலா என்ற பெண்ணுடன் சார்ள்ஸ் சுற்றுவதும் ராணிக்கு நன்றாகத் தெரியும்.

இப்போது பிரச்சனை டயானா ஒரு பக்கமும், சார்ள்ஸ் ஒரு பக்கமும் சுற்றிக் கொண்டிருப்பதல்ல.

டயானா இரகசியத்தை பகிரங்கமாகச் சொல்லித் தொலைத்ததுதான் பிரச்சனை.

ஜேம்ஸ் ஹெவிட் என்னும் குதிரையேற்ற பயிற்சியாளர் தனது பலவீனத்தை பயன்படுத்தி உடல் உறவுவரை வந்துவிட்டார் என்று டயானா சொன்னதால் அரண்மனையின் மானமே காற்றில் பறந்துவிட்டதாக அப்செட்டாகிவிட்டார் மகாராணி.

வந்த கோபத்தில் டயானாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். சாள்ஸ்ஸை விவாகரத்து செய்துவிடச் சொல்கிறது ராணியின் கடிதம்.

விவாகரத்துக்கு தயார் என்று சார்ள்ஸும் அறிவித்துவிட்டார். டயானா மௌனமாக இருக்கிறார். தனது சட்டத்தரணியுடன் கலந்து பேசிவிட்டுத்தான் முடிவை சொல்லப் போகிறார். டயானாவின் சட்டத்தரணி புதுவருட விடுமுறையில் போய் இருக்கிறார்.


விவாகரத்துக்கு டயானா தலையசைத்தால் உடனடியாக சுளையாக 78 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும்.

அதுதவிர இளவரசர் சார்ள்ஸுக்கு ஆண்டுதோறும் பிரிட்டிஷ் அரசு 10 1/2 கோடி ரூபா செலவுக்கு கொடுத்து வருகிறது.

அதில் மூன்றில் ஒரு பகுதியும் வருடம் தோறும் டயானாவுக்குப் போகும்.

சார்ள்ஸ் டயானாவை விவாகரத்து செய்யலாம். வேறு யாரையும் மறுமணம் செய்து கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் பிரிட்டிஷ் மன்னராக முடியாது. மன்னராகும் சொகுசை இழக்கவும் சார்ள்ஸ் தயாராக இல்லை. (பின்னே சும்மாவா வருடம் 10 1/2 கோடி மற்றும் சலுகைகள், மன்னரானால் மேலும் உயரும்.)

எப்படியோ பிரிட்டிஷ் அரச குடும்பத்து சரசங்கள்தான் இன்று உலகப் பத்திரிகைகளுக்கு சுவாரசியமான சங்கதி.



## ஒரு கோப்பையிலே குடியிருப்பு

ஒரு கிண்ணத்தை ஏந்திக்கொண்டு பல எண்ணத்தில் நீந்துவதற்கு மனிதனால் மட்டும்தான் முடியுமா என்ன? படத்தில் பாருங்கள், என்ன ஜாலியாக குரங்கார் குடியரசராகிக் கொண்டிருக்கிறார்!

பிரித்தானியாவில் மதுபான விளம்பரங்களுக்கு போஸ் கொடுப்பது தான் குரங்காரின் தொழில். கை நிறைய சம்பாத்தியம். பணம் எஜமானிடம் போய்ச் சேர்ந்தாலும் அதில் பாதியை செலவு செய்து குரங்காரை மனம் நோகாமல் வைத்திருக்கிறார்கள். மதுபான விளம்பரங்களுக்கு ஒய்யாரமாகப் போஸ் கொடுக்கும் போது உற்சாக பானத்தை உண்மையாகவே ஒரு பிடி பிடித்துவிடுகிறாராம் குரங்கார். கலாட்டா தாங்கமுடியாதாம்.

# தகவல் பெட்டி

## முகம் அழகா—முடி அழகா

சிக்காக்கோவில் 29 வயது (அப்படித் தெரியவேயில்லை முகத்தில்) பெவெர்லிக்கு முடி அலங்காரத்தில் அலாதிப் பிரியம். பைத்தியம் என்று வேண்டுமானாலும் சொல்லலாம்.

பல விதமாக முடி அலங்காரம் செய்து புகைப்படம் எடுத்து முடியழகிப் போட்டிகளுக்கு அனுப்பிவைத்தார். மூன்று வருட முயற்சியின் பின்னர் தலைமுடிகளை கம்பிபோல ஆக்கி, முடியை தியாகம் செய்து அடர்த்தி குறைத்து அலங்காரம் செய்தார். கை மேல் பலன். முடியழகிப் போட்டியில் வெற்றி தேடிவந்தது. தலை முடியைப் பாருங்கள் மின்சார கம்பிகளைப் போலத் தெரிகிறதல்லவா. அழகியும் மின்சாரம்தான்.



## பயிற்சியால் பதுமாகும்

வில் வளைப்பது மாதிரி தன் கால்களை வளைத்திருப்பவர் வூடி ஹறெல்சன். இவர் ஒரு ஹொலிவூட் நடிகர், எப்போதும் உடலை இளமையாகவும் மற்றும் சுறு சுறுப்பாகவும், மற்றும் ஜிலு ஜிலுப்பாகவும் வைத்திருக்க யோகாசனம் செய்வார் வூடி ஹறெல்சன். பயிற்சியால் பதமான உடம்பு சொல்வது கேட்கும். வளைந்து, நெளிந்து ஒத்துழைக்கும். முடியுமானால் நீங்களும் முயற்சித்துப் பார்க்கலாமே. (எங்காவது கறக் முறக் சத்தம் கேட்டால் நாம் பொறுப்பல்ல)





## உடலில் 70 ஆயிரம்

விசேஷமான ஆடையாக இருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறீர்களா? தப்பு. அண்ணரை மூடியிருப்பது ஆடையல்ல, தேனீ. தேனீக்கள். பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல இந்த இளைஞரின் உடலில் மொய்த்துள்ள தேனீக்களின் மொத்த எண்ணிக்கையைச் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். மொத்தம் 70 ஆயிரம் தேனீக்கள். எடை 9கிலோ. உலக சாதனைக்காகத்தான் இந்த இனிப்பான அல்லது துடிப்பான, அல்லது கடிப்பான முயற்சி. இளைஞரின் பெயர் மேக்ஸ் பெக். அமெரிக்காவைச் சேர்ந்தவர். (இவன்தான்(டா) பூவரசன்.)

## கொல்லப்படமுன் எண்ணப்படுகிறார்கள்

சித்திரவதைக்குப் பெயர் போனவன் ஹிட்லர். ஹிட்லர் காலத்திய சித்திரவதை முகாம்கள் மனித வரலாற்றில் மறக்க முடியாத மனித வதை முகாம்கள். ஆயிரமாயிரமாயிரமாய் யூத மக்கள் சுட்டுத் தள்ளப்பட்ட நிகழ்சிகள் நம்பவே முடியாத பயங்கர உண்மைகள். ஹிட்லர் காலக் கொடுமையை விளக்க பல சினிமாப்படங்கள் வந்து விட்டன. ஆனால் இங்கு பிரசுரமாகி இருக்கும் படம் உண்மையானது. யூதர்களை ஆடு மாடுகள் போல பிடித்துவந்து தலைகளை எண்ணிக்கணக்கு எடுக்கிறார்கள். எண்ணப்படுவது தலைகள் மட்டுமல்ல தங்கள் வாழ்நாளும்தான் என்று தெரிந்த மக்கள் எப்படித் துடித்துப் போயிருப்பார்கள். உலகப் புகழ் பெற்ற புகைப்படங்களில் ஒன்று இது.



# சினி விசிட்

## பயப்படுகிறார் பாரதிராஜா

பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்க படு வேகமாக வளர்ந்துவரும் படம் தமிழ்செல்வன். விஜயகாந்தை ஓஹோவென புகழ்கிறார் பாரதிராஜா.

"எந்த விதமான சினிமா பின்னணியும் இல்லாமல் தன்னுடைய சொந்த முயற்சியால் சினிமா உலகில் புகுந்து இடம்பிடித்தவர் விஜயகாந்த். ஒவ்வொரு ஹீரோவுக்கும் குறைந்தது ஏதாவது ஒரு இயக்குநரின் நிழலாவது கிடைத்திருக்கும். ஆனால் இந்த மதுரை வீரனுக்கு அப்படி ஒரு நிழல் கிடைக்காமல், தன்னந் தனியாக நின்று வெற்றி வீரனாகியிருக்கிறார்.

நான் நடிக்க அழைத்த போது உடனடியாக அவர் ஒத்துக் கொண்டது என்மேல் உள்ள மரியாதையால் இருக்கலாம். விஜயகாந்த் இன்று வரை கதை கேட்கவே இல்லை. இந்த மனிதனுக்காக 'தமிழ் செல்வன்' படத்தை வெற்றிப் படமாக்க வேண்டுமே என்ற பயம் எனக்குள் வந்து விட்டது" என்கிறார் பாரதிராஜா.

## கொடுமையிலும் கொடுமை

வர் ராகு சண்டியர் (பிரேம்-குஷ்பு) 'டியர் சன் மருது' (ரகுமான்-சௌந்தர்யா) இரண்டும் திரைக்கு வந்து விட்டன. முறை மாப்பிள்ளை படத்தின் ஓட்டம் சரியாக இல்லை. அதனால் செந்தில் பெண்வேசமிட்டு கவுண்டமணியோடு ஆடிப்பாடும் பாடல் காட்சி ஒன்றை மூன்று வாரங்களின் பின்னர் இணைத்துள்ளார்கள். செந்திலைப் பார்த்து 'இடைமழகி நீதான்' என்று கவுண்டமணி பாடு வதுதான் கொடுமையிலும் கொடுமை.

## சி னி

*'தொட்டாச்சிணுங்கி' படத்தில் நாகேந்திர பிரசாத்திற்கு ஜோடியாக அறிமுகமானவர் தேவயானி. தற்போது பவித்திரன் இயக்கத்தில் 'கல்லூரிவாசல்' படத்தில் நடித்து வரும் இவர் விஜய்க்கு ஜோடியாக 'காதல்மிகு மானவன்' படத்தில் நடிக்கவுள்ளார்.

*'ஜென்டில்மேன்' படத்தில் இடம்பெற்ற 'சிக்கு புக்கு...' பாடலைப் பாடியவர் சுரேஷ்பீட்டர். இவர் பாடிய தனிப் பாடல்களை 'மின்னல்' என்ற பெயரில் கேசட்டாக வெளியிட்டார். அண்மையில் 'ஓவியம்' என்ற கேசட்டையும் வெளியிட்டுள்ளார்.

*பாரதிராஜாவின் உதவியாளர் ஜெயப்பிரகாஷ் இயக்கும் 'சாதிசனம்' படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார் ஒவியா. கேரளாவில் பல தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துள்ள இவரின் நிஜப் பெயர் பெஸ்சி வர்கீஸ்.

*தெலுங்கில் அறிமுகமாகி தமிழில் பல படங்களில் நடித்து வரும் வினிதா, முதல் முறையாக கன்னடப் படமொன்றில் நாயகியாக நடித்து வருகிறார். இதில் கன்னட சூப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தன் கதாநாயகனாக நடிக்கிறார்.

*அரவிந்தசாமி-பிரபுதேவா நடிக்க ஏவி.எம். தயாரிக்கும் படத்திற்கு பிலிம் சேம்பரில் 'மின்சாரக்காதல்', 'மின்சாரக் கனவு' என இரு பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. பின்னர்தான் இயக்குநர் ராஜீவ்மேனனால் 'மின்சாரக்கனவு' என்ற பெயர் தெரிவு செய்யப்பட்டது.

*தெலுங்குப் படவுலகின் சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படம் 'ரிக்ஷா ஓடு'. கோடி ராமகிருஷ்ணா இயக்கும் இப்படத்தில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக நக்மா நடிக்கிறார்.

*'ரசிகனில்' பம்பாய் குட்டி...பாடலையும், 'விஷ்ணு' வில் 'தொட்டா பெட்டா...' என்ற பாடலையும் பாடியுள்ள விஜய், தற்போது நடித்து வரும் 'கோயமுத்தூர் மாப்ளே' படத்தில் 'மைக்கல் ஜாக்சன் போல...' என்ற பாடலை சாகுல் ஹமீதுடன் சேர்ந்து பாடியுள்ளார்.

*தற்போது 'காதல்தேசம்','சக்தி' ஆகிய இரண்டு படங்களையும் ஒரே நேரத்தில் தயாரித்து வருகிறார் கே.டி.குஞ்சுமோன். வினீத்-யுவராணி ஜோடியாக நடிக்கும் 'சக்தி' படத்தில் முக்கிய பாத்திரத்தில் யானை ஒன்றும் நடிக்கிறது.

*'ஆலயம்' என்ற பெயரில் படங்களைத் தயாரித்து வரும் மணிரத்னம், விரைவில் மணிரத்னம் கோர்ப்பரேஷன் என்ற பெயரில் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்கவிருக்கிறார்.

*நாகிரெட்டியார் தயாரிக்கும் 'மீண்டும் சாவித்திரி' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட ரகுவரன், இப்போது அந்தப் படத்திலிருந்து விலகிக் கொண்டு விட்டார். தற்போது அந்த வேடத்தில் 'நிழல்கள்'ரவி நடித்து வருகிறார்.


சிரஞ்சீவி
படம்-சிப்பாயி (கன்னடம்)

## காதோடு சொல்லுகிறோம்

இக்னய நடிகை புலம்புகிறாராம். முன்றெழுத்து நாயகனுடன் வயதான வேடத்தில் நடிப்பதை அறிந்து அதேபோல நடிக்க அழைப்புக்கள் வருகிறதாம். "நான் இன்னும் இளமையாக இருப்பது உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா?" என்று புலம்புகிறார். அதெப்படி தெரியாமல் போகும்?

இளம் நாயகன்கள் ஹீரோவாக நடிக்கும் படங்களில் மட்டுமே நடிப்பேன் என்று நிபந்தனை போடுகிறாராம் பம்பாய் நாயகியான 'மனி'யான நடிகை. இளம் ஹீரோக்களுடன் நடிக்கும்போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறதாம்? அப்படியுங்களா?

'பூஜா' நடிகை படபட என்று துப்பாக்கி வெடிப்பது போல பேசக்கூடியவர். தமிழில் மட்டும் பேசமாட்டார். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. அவருக்கு தமிழ் தெரியாது. மாலையானதும் அவருக்கு கண்கள் செருகிக் கொள்ளுமாம். உபயம் உற்சாக பானம். அந்த நேரம் பார்த்து யாராவது மாட்டிக்கொண்டால் செல்லமாக ஆங்கிலக் கெட்டவார்த்தைகளால் திட்டுவாராம்.

பதினாறு வயது நாயகி தேவிக்கு சுறுசுறுப்பாக மாப்பிள்ளை தேடுகிறார்கள். சுதந்திரத்தில் தலையிடாதவராக இருந்தால் ஓகே என்று ஒரேயொரு நிபந்தனை போட்டுள்ளாராம் தேவி.

## சரத்குமார் போர்க்கொடி

"1991இல் ஜெயலலிதா ஆட்சியைக் கவிழ்க்க சதியா, அனுமதியோம்" என்று சொன்னவர் யார்? ஜெயலலிதாவை அழைத்து படத்தொடக்க விழா நடத்தியவர் யார்? தனது படத்தில் ஜெயலலிதா படங்களை காட்டியவர் யார்? ஜெயலலிதாவின் செல்லப் பிள்ளை நடிகர் என்று அழைக்கப்பட்டவர் யார்? எல்லாக் கேள்விக்கும் ஒரே பதில் சரத்குமார்! ஆனால் அதே சரத்குமார் இப்போது ரஜினியின் பக்கம் சாய்ந்து விட்டார். ரஜினியை சந்தித்து ஒரு மணிநேரம் தனியாக உரையாடியிருக்கிறார்.


படம்-இசைப்பயணம்

முகப்பில் பிரபுதேவா

## கல்லூரி மாணவிகளைக் கவரும் நாயகன்?

இந்தியா முழுக்கப் பிரபலமான தமிழ்பட இளம் ஹீரோக்கள் இன்றைய தேதியில் பிரபுதேவாவும், அரவிந்தசாமியும்தான்.

சென்னையிலும் பம்பாயிலும் கல்லூரி மாணவிகள் மத்தியில் பிரபல ஹிந்தி சினிமா இதழ் ஒன்று கருத்துக் கணிப்பு நடத்தியிருக்கிறது.

ஒரே ஒரு கேள்விதான்? உங்களுக்கு யாரைப்பிடிக்கும்? பிரபுதேவாவையா? அரவிந்தசாமியையா?

1300 மாணவிகளிடம் அந்த 'உபயோகமான' கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

640 மாணவிகள் பிரபு தேவாதான் 95ம் ஆண்டின் இளம் ஹீரோ என்று அடித்துச் சொல்லி விட்டார்கள். (கடந்த ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணிப்பு)

"அப்படியென்ன இருக்கிறது பிரபுதேவாவிடம்?" பதிலாக சொல்லப்பட்டவற்றில் சுவாரசியமான சங்கதிகள் பின்வருமாறு.

"காதலனில் நக்மாவுடன் பிரபுதேவா அடித்த கூத்து பிடித்திருக்கிறது. என்னமாய் வளைந்து கொடுக்கிறது அந்த உடம்பு."

"தீக்குச்சிமாதிரி இருக்கிறார். மூளையில் நிறைய புதுப்புது யோசனைகள் வைத்திருக்கிறார்." "துச்சி உடம்பு, சின்னத்தாடி. வேகம், வேகம், ஐ லைக் தட் ஸ்பீட்."

சென்னையிலும், பம்பாயிலும் கல்லூரி மாணவிகளின் நோட்டுப் புத்தகங்களில் பிரபு தேவா ஒளிந்திருக்கிறார். வீட்டிலே தெரிந்தால் ஏகவாசகளாம்.


"ஒரு காலத்தில் கமலுக்கு இருந்தமாதிரியான வரவேற்பு இது. ஆனால் நிரந்தரமாக நீடிக்குமா என்பது சந்தேகம் தான்." என்று சொல்கிறார்கள் சினிமா உலக விமர்சகர்கள்.

ஆட்டமும், பாட்டமும் மட்டுமேயென்றால் ஒரு கட்டத்தின் பின்னர் சலித்துப் போகலாம். அரவிந்தசாமிக்கு அவரது இயல்பான நடிப்பு உத்தரவாதமாக இருக்கிறது. பிரபுதேவா ஆட்டத்தை மட்டுமே தனது பலமாக நம்பியிருக்கிறார். நடிப்பிலும் கவனம் செலுத்தினால் 96 இலும் சாதனை படைக்கலாம் என்கிறார்கள்.

96 இல், 'லவ் பேர்ட்ஸ்' மிஸ்டர் ரோமியோ, மின்சாரக் கனவு, போன்ற படங்களில் ஒன்று காதலன் அளவுக்கு ஓடினால் தான் பிரபு தேவாவுக்கு மார்க்கெட் சூடு இருக்கும்.

அரவிந்தசாமியைப் பொறுத்தவரை அவரது ரசிகர்களும், ரசிகைகளும் அவரிடமிருந்து அமர்க்களமான ஹிட் படங்களை எதிர்பார்ப்பதில்லை. அதனால் வசூலில் சுமாரான படங்களை அவர் தந்தாலும் பாதிப்பிருக்காது.

பிரபுதேவாவுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலே போய்விட்டது ஊதியம். அதனால் சூப்பர் ஹிட் படங்களை வருடத்திற்கு இரண்டாவது கொடுத்தாக வேண்டும்.


அஜித் குமார்-சுவாதி
படம்-வான்மதி

## ரஜினிக்கு ஒரு பாடல்

'தொட்டால் சிணுங்கி' வெளியாகி மூன்று வாரத்தை தொட்டுவிட்டது. சுமாராக ஓடிக்கொண்டிருக்கிறது. பெண்களை உயர்வாகச் சித்தரிக்கும் படம் என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள். கதாநாயகன் நாகேந்திர பிரசாத் (பிரபுதேவாவின் சகோதரர்) படத்தில் நாயகன் பாடும் பாடல் ஒன்று, ஒரே ரஜினி பஜனை. வாலி எழுதியிருக்கிறார்.

தம்மோட தலைவரு
எந்நாளும் சூப்பர் ஸ்டாரு.
தங்கத் தலைவா நீ ஆணையிடு
தட்டாது தமிழ்நாடு அட
இன்றும் என்றும் எங்கள் மூச்சு
துணைநிற்கும் அண்ணன்
எங்கள் பாட்ஷா!
யாரு தவறு செய்தாலும்
தட்டிக்கேட்க துணிகிற
நம்மோட தலைவரு.

பள்ளி செல்லும் பிள்ளைக்கூட்டம்
உங்கள் பேரைச் சொல்லிப் பார்க்கும்
பாசம் கொண்ட ...
அத்தனையும் உங்க...

உங்கள் பேரைச் ...

உங்கள் பாதை ...
வஞ்சமில்லை, பஞ்ச...

நெஞ்சத்திலே வஞ்ச...
எட்டுத்திக்கிலும் அண்...
இட்ட கட்டளை கேட்...
ஊரு நிக்குது.

## ...ங்கள் தொடுக்கும் கேள்வி

## கூந்தலால் பறி போன வாய்ப்பு

மலையாளப் படவுலகில் பிரபலமாக இருப்பவர் ஆனி. இரண்டு தமிழ் பட வாய்ப்புகள் அவரைத் தேடிச் சென்றன. நடிக்க மறுத்து விட்டார் ஆனி. நடிப்பதானால் நீண்ட கூந்தலுடன்தான் நடிப்பது என்ற முடிவில் இருக்கிறார். அந்த இரண்டு படங்களிலும் 'கிராப்' வைத்துக்கொண்டு நடிக்கச் சொன்னார்களாம். அதுதான் மறுத்து விட்டார்.

## மின்சாரக் கனவில் சிவாஜி

அரவிந்தசாமி-பிரபுதேவா-கஜோல் நடிக்கும் படம் 'மின்சாரக் கனவு' என்பது தெரிந்த செய்தி.

இது ஏ.வி.எம். பட நிறுவனத்தின் பொன்விழா வெளியீடாக இருப்பதால் சிவாஜியையும் ஹேமமாலினியையும் நடிக்க வைக்க அணுகியிருக்கிறார்கள்.

சிவாஜியின் முதல் படமான 'பராசக்தி' ஏ.வி.எம். தயாரிப்புதான். அதனால் தமது பொன்விழாப் படத்தில் சிவாஜியை நடிக்க வைக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

திட்டம் சரியாக அமைந்தால் பிரபுதேவாவுடனும், அரவிந்தசாமியுடனும், சிவாஜி ஹேமமாலினி ஜோடியும் சேர்ந்து மின்சாரத்தின் பவரை அதிகமாக்கிவிடுவார்கள்.

இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லை.



## மனிஷாவோடு பிரசாந்த் தயாராகிறது 'புலித்தேவன்'

பிரசாந்தின் அப்பா தியாகராஜன் மகனை வெற்றி நாயகனாக்கும் முயற்சியில் தளரவேயில்லை. 'படகோட்டிபாபு' என்று சொந்தமாக ஒரு படம் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டது. தற்காலிகமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. இரகசியமாக படப்பிடிப்பு நடத்தப்படுவதாக தியாகராஜன் சொல்கிறார். அதில் உண்மையில்லை என்று தகவல்.

தற்போது தியாகராஜன் தயாரிக்கும் புதிய படம் 'புலித்தேவன்'.

60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு வீரனைப் பற்றிய நீண்மைக்கதை. புலித்தேவனாக நடிப்பவர் பிரசாந்த். அவருக்கு ஜோடியாக நடிக்கப் போகிறார் மனிஷா கொய்ராலா. பிரசாந்தின் முறைப்பெண்ணாக சங்கீதா நடிக்கிறார். (சங்கீதா இல்லாத புதிய படமே இல்லையா?)

பெரியண்ணன் என்னும் பாத்திரத்தில் பயங்கரமான வில்லனாக நடிக்கிறார் மன்சூரலிகான். பொன்னம்பலம், மலேசியா சத்யராஜ், விஜயகுமார், சரிதா, கவுண்டமணி, செந்தில், ஆர்.சுந்தர்ராஜன், சாருஹாசன், ரோகிணி, வடிவுக்கரசி என்று ஒரு நட்சத்திர பட்டாளமே நடிக்கிறது.

கதை, வசனம் தாமரை மணாளன். ஆர்.கே.செல்வமணியிடம் உதவியாளராக இருந்த விகவுதமன் முதன் முதலாக இயக்கும் படம் இதுதான். இசை: இளையராஜா. பொங்கல் தினத்தன்று படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

அப்பா தியாகராஜனுக்கு 'மலையூர் மம்பட்டியான்' படம் கிடைத்ததுபோல, மகன் பிரசாந்துக்கு 'புலித்தேவன்' அமையுமா? பார்க்கலாம்.

## ரங்கீலா 125


இந்திப்படமான 'ரங்கீலா' தமிழ்நாட்டில் சென்னையில் மட்டும் மூன்று திரையரங்குகளில் 125 நாட்களை தொட்டுவிட்டது. இப்போதும் அரங்கு நிறைந்த காட்சிகள்தான். அதேபோல ஷாருக்கான்-கஜோல் நடித்துள்ள 'தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே' என்னும் படம் சென்னையில் 75 நாட்களை இரு திரையரங்குகளில் தாண்டிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் பல தமிழ் படங்கள் 50 நாளை எட்டவே மூச்சு வாங்குகின்றன.

## ...தியில் மேக்கப்★

...ந்தவுடன் தவறாக நினைக்க வேண்டாம்.
...ாக சென்னையில் உள்ள நட்சத்திர விடுதி
...து மேக்கப் நடக்கிறதாம். வயதானவர் வேடத்திற்காக
...ல் நண்பகல் 12 மணிவரை மேக்கப் நடக்கிறது. நான்கு மணி
...க்கப்புடன் இருக்க முடியும். இல்லையென்றால் முகம் பாதிக்கப்படலாம்.
...து ஒப்பனை நிபுணர் ஒருவர் வந்திருக்கிறார். வயதான வேடத்தில் நடிக்கும்
...தான் மேக்கப் போடுகிறார்.

## ...ம் என்றால் என்ன?

...ம் என்ன? ஆபாசம் என்றால் என்ன? இயக்குநர்
... சொல்வதைக் கேளுங்கள்.
...ில் ஒரு நடிகை பாவாடையை கணுக்
...



## கன்னடத்தில் சிரஞ்சீவி

சிரஞ்சீவி கன்னடத்தில் நடிக்கும் படம் ஒன்று தயாராகிவருகிறது. கன்னட நடிகர் ரவிச்சந்திரன் படத்தை தயாரிக்கிறார். 'சிப்பாயி' என்று படத்திற்கு பெயர் சூட்டியுள்ளனர்.

ரவிச்சந்திரன் தமிழிலும் வெளியான 'நாட்டுக்கு ஒரு நல்லவன்' படத்தை தயாரித்து தோடு ரஜினியோடும் அதில் நடித்திருந்தவர்.

## சத்தியம் பண்ணுகிறார் சங்கவி

இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாருக்கும் சங்கவிக்கும் இடையில் நெருக்கம் அதிகம் என்று ஒரு கிசுகிசு. உண்மையா சங்கவி?

"சத்தியமாக அப்படி ஒரு தொடர்பும் கிடையாது. யாரோ கிளப்பிவிட்ட புரளி அது. அவர் படங்களில் நடித்தேன். அதனால் பழக்கம். ரவிக்குமார் நல்ல மனிதர். நானும் அவரும் எப்போதாவது சந்திப்பது வழக்கம்தான். ஆனால் நீங்கள் நினைப்பது மாதிரி அப்படியொன்றும் அர்த்தமல்ல." நாங்கள் அப்படி என்னதான் நினைத்துவிட்டோம்?

## ஹாலிவுட் நியூஸ்

கொஞ்சம் விஞ்ஞானம், கொஞ்சம் வன்முறை, கொஞ்சம் அழகான பெண்கள், கொஞ்சம் கற்பனைச் சாதனைகள் ... சேர்ந்தால் ஒரு ஜேம்ஸ்பாண்ட் படம்.

...க வெளியாகியுள்ள ஜேம்ஸ்பாண்ட் படம் 'கோல்டன் ஐ' கதா... பிராஸ்னன். இவர் ஜேம்ஸ் பாண்ட் பட ரசிகர்களுக்கு புதியவர். ...காட்சி தொடர்களில் நடித்துள்ளார். 'கோல்டன் ஐ' படத்தில் ...ந்து நாட்டின் மாடல் அழகி இசபெல்லா கதாநாயகியாக ...ள்ளார். பிராஸ்னன் அயர்லாந்துக்காரர்.

... ஆண்டுக்குப் பின்னர் வெளியாகும் ஜேம்ஸ் பாண்ட் படம் 'கோல்டன் ஐ' ...துவரை 16 ஜேம்ஸ் பாண்ட் படங்கள் வெளியாகியுள்ளன. ...த்தாக ஆராயிரம் கோடி ரூபா வசூலாகியுள்ளது.

'கோல்டன் ஐ' வெற்றி பெறுவதைப் பொறுத்துத்தான் ஜேம்ஸ்பாண்ட் ...களின் எதிர்காலமும் பிராஸ்னனின் எதிர்காலமும் தீர்மானிக்கப்படப் ...கின்றன.

## கலெக்டராகிறார் ஜெயராம்

ஜெயராம்-ரஞ்சிதா ஜோடியாக நடிக்கும் படம் 'மிஸ்டர் தேவராஜ்' கடமை தவறாத கலெக்டராக நடிக்கிறார் ஜெயராம்.

ரெட்டிக்காரு, ரெட்டிக்காரு, சின்னப் பொண்ணு பார்த்தா கெட்டிக்காரரு.... என்ற பாடலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. கவுண்டமணி, செந்தில், பெரியார்தாசன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம் ராசி அழகப்பன். இசை, தேவா. பாடல்கள், வைரமுத்து.





"பௌர்ணமி நேரம்
–பாவை ஒருத்தி
மின்னல் போல
–முன்னால் போனாள்.
பின்னல் கண்டு–
பின்னால் சென்றேன்.
பெண்ணே ஊருக்கு
–புதுசோ என்றேன்
காலில் உள்ளது
–புதுசு என்றாள்.
ஓ.... மேலே கேட்காதே."
கவிஞர் வைரமுத்து

# தாய்ப் பாலுக்கு உண்டோ நிகர்?



'தாயிற் சிறந்ததோர் கோவிலுமில்லை: தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது போல், தாய்ப்பாலைக் காட்டிலும் சிறந்த உணவு வேறு இல்லை எனலாம். குழந்தைகளுக்கு உணவு, பாசம், பாதுகாப்பு இவை அனைத்தும் இன்றியமையாததாகும். தாய்ப்பாலானது இவை அனைத்தையும் கொடுத்து, புது வாழ்வைப் பொலிவுடன் துலங்கச் செய்யும்.

★ குழந்தை பெற்ற தாய் சிறிது நேரம் ஓய்வெடுத்து, பிறகு குழந்தைக்குத் தாய்ப்பாலூட்ட வேண்டும். இவ்வாறு குழந்தை பிறந்த ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்குள் பால் கொடுப்பதன் மூலம் தாய்ப்பால் உற்பத்தியை அதிகப்படுத்தலாம்.

★ பால் கொடுக்கும் போது உட்கார்ந்து கொண்டு மடியில் குழந்தையை வைத்து, கைகளால் தலையைச் சொகுசாகவும், பாதுகாப்பாகவும் அணைத்துக் கொடுப்பது நல்லது. ஒவ்வொரு முறையும் இரு மார்புகளில் இருந்தும் பால் கொடுக்க வேண்டும்.

★ குழந்தை பாலுக்காக அழும் போதெல்லாம் பால் கொடுக்க வேண்டும். மணியைப் பார்த்துப் பால் கொடுப்பது நல்லதல்ல. குழந்தை போதுமான அளவு குடித்தவுடன் தூங்கி விடும். அல்லது இறுகப் பிடித்திருந்த கைகளைத் திறந்து விரல்களை நீட்டும், சிரிக்கும். தொடர்ந்து குடிப்பதை நிறுத்தி விடும். அதற்குமேல் கட்டாயப்படுத்திப் பால் கொடுக்கக்கூடாது.

★ முதல் மூன்று, நான்கு நாட்களுக்கு பாலின் அளவு குறைவாகவே இருக்கும். ஆனால் குழந்தையின் தேவைக்கு இது போதுமானது. இந்தப் பால், வியாதிகளைத் தடுக்கும் திறன் கொண்டது. இதனைச் 'சீம்பால்' என்று சொல்வார்கள். இந்தச் 'சீம்பால்', பிறந்த குழந்தைகளைப் பல கிருமிகளிலிருந்து பாதுகாக்கவல்லது. இதனை வீணாக்கி விட்டு, இத்தருணத்தில் குழந்தைக்குச் சீனித்தண்ணீர் போன்றவற்றைக் கொடுப்பது மிகவும் தவறு.

★ அநேக தாய்மார்கள் தன் பால் பற்றவில்லை என்று நினைத்துப் பயந்து, புட்டிப்பால் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். தாய்ப்பாலின் அளவு குழந்தை குடிக்கக் குடிக்க முதல் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கும். இந்த நேரத்தில் தாய்க்குத் தன்னம்பிக்கையும், தைரியமும், பொறுமையும் அவசியம்.

★ பொதுவாக முதல் குழந்தை பெற்ற தாய்மார்கள் தனக்குப் பால் போதுமானதாக இல்லை, அதனால் தான் குழந்தை அழுது கொண்டே இருக்கிறது என்று நினைப்பார்கள். குழந்தைகள் பல காரணங்களினால் அழுவார்கள். சில வாரங்களில் குழந்தை எதற்காக அழுகிறது என்பது புரியும். அதாவது எது பசிக்கான அழுகை, எது ஈரமான தால் அழுகை, எது தூக்கச் சொல்லி அழுகை என்று வித்தியாசம் புரிந்து விடும். அது புரியும்வரை அடிக்கடி மன தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் பால் குடிக்க விடுங்கள்.

# இதயக் கோப்பை

அப்துல் ரகுமான்



மனித வாழ்வில் இன்பம் அதிகமா? துன்பம் அதிகமா? என்று கேட்டால் துன்பம்தான் அதிகம்.

இந்த உலகம் முக்காற் பங்கு தண்ணீரால் ஆனது.

மனித வாழ்க்கையும் முக்காற் பங்கு கண்ணீரால் ஆனது.

இன்பங்களை எண்ணிச் சொல்லி விடலாம். ஆனால் துன்பங்களின் வகைக்கோ கணக்கே இல்லை.

எத்தனை வகையான துயரங்கள் மனிதனுக்கு?

அத்தனையையும் அவன் தாங்கிக் கொண்டுதானே வாழ்ந்து கொண்டிருக்கிறான்!

மனித இதயம் அதிசயமான ஆற்றல் உடையது. அது எத்தகைய துயரத்தையும் தாங்கிக் கொள்கிறது.

துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இதயத்திற்கு இல்லையென்றால் முதல் துயரத்திலேயே எல்லா மனிதரும் இறந்து போயிருப்பார்கள்.

இன்று உலகில் மனிதனே இருந்திருக்க மாட்டான்.

கவிஞர் ஜிகர் துயரத்தை மதுக்கடை என்கிறார்.

அந்த மதுக்கடையில் எப்போதும் மது தீர்வதே இல்லை. பஞ்சமில்லாமல் கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

மனித இதயத்தைக் கோப்பை என்கிறார் ஜிகர்.

இதயக் கோப்பை அதிசயமானது. அதில் எவ்வளவு ஊற்றினாலும் ஏற்றுக் கொள்கிறது. நிரம்பி வழிவதே இல்லை.

காலம் துயர மதுவை ஊற்றிக் கொண்டே இருக்கிறது. இதயக் கோப்பையும் ஏற்றுக் கொண்டே இருக்கிறது.

சிந்திக்க வேண்டிய உவமை!

இதயக் கோப்பை துயர மதுவை ஊற்றுவதற்காகவே படைக்கப்பட்டதா?

அப்படியென்றால் இன்பம்?

துயர மதுவின் போதைதான் இன்பம் என்பதோ?

**துயரமெனும் மதுக்கடையில்**
**மதுவுக்கோ பஞ்சமில்லை**
**இதயமெனும் கோப்பையோ**
**நிரம்பிக் கொண்டே இருக்கிறது!**

# நறுமணம் சேரும் நரையும் விலகும்

விதவிதமான முடியலங்காரங்களால் பெண்கள் தம் தோற்றத்தை மிக அழகாகக் காட்டுகிறார்கள். இத்தகைய கூந்தல் மாதத்திற்கு அரை பங்கு வளர்ச்சியைக் காண்கிறது. குறிப்பிட்ட அளவு வளர்ச்சியை அடைந்ததும் அவை வளரத் தொடங்குவதில்லை. சரிவிகித உணவு ஒன்றினால்தான் அதனை வளமாகவும், பலமாகவும் வைத்திருக்க முடியும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புரொட்டீன், விட்டமின் பி.12, விட்டமின் சி மற்றும் இரும்புச் சத்து ஆகியவை தலைமுடிக்கு ஊட்டந்தரும் சத்துக்கள். ஈரல், சிறுநீரகம், முட்டை, ரொட்டி ஆகியவற்றில் விட்டமின் பி.12 சத்து அதிகமாயுள்ளது. வெண்டைக்காய், காரட், பச்சை காய்கறிகளை முடிந்த அளவு உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாலிலும் கூந்தலுக்கு தேவையான உயிர் சத்து அதிக அளவில் உள்ளது.

நரையால் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் தலைமுடியின் மயிர்க்கால்களில் உயிர்ச்சத்துக்கள் இல்லாமல் போவதாகும். எனவே அச்சத்துக்களை ஊட்டக்கூடிய வெண்ணையை அடிக்கடி உபயோகிக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறையாவது கூந்தலில் சிறிதளவு வெண்ணையைத் தடவிக் கொண்டு குளிக்கும் பழக்கத்தைக் கையாண்டால் தலை முடி நரைப்பது தானாக நிற்கும்.

இரவு படுக்கும் முன் சிறிதளவு வெதுவெதுப்பான விளக்கெண்ணையைத் தலையில் தடவிக் கொள்ள வேண்டும். காலையில் எழுந்ததும் தலைக்கு சீயக்காய் போட்டுக் குளிக்க வேண்டும். இந்த சிகிச்சை தலை நரையைப் போக்கச் சிறந்த முறையாகும்.

நிறையத் தலைமுடி உடையவர்கள் உயர்ந்த அத்தர்களில், ஒன்றிரண்டு சொட்டுக்களை எடுத்து தலையில் தேய்த்துக் கொள்ளலாம்.

தலைமுடியிலிருந்து கிளம்பும் வியர்வை துர்நாற்றத்தை இது போக்கும். சிலருக்கு பொடுகு வந்து தொல்லையைத் தந்து கொண்டிருக்கும். இவர்கள் உபயோகிக்கும் சீப்பை அடுத்தவர்கள் உபயோகிக்கக்கூடாது. பொடுகு மற்றவர்களுக்குச் சுலபமாக பரவக் கூடியது.

முட்டையின் வெள்ளைக் கருவை நன்றாக நுரை பொங்க அடித்து எலுமிச்சம் பழச்சாற்றோடு கலக்க வேண்டும். குளிப்பதற்கு நேரத்திற்கு முன் இக்கலவையை மண்டையோட்டில் நன்கு படும்படி தேய்க்க வேண்டும். ஊற வைத்து ஒரு மணிநேரம் கழித்துச் சீயக்காய் போட்டுக் குளிக்க வேண்டும். இச்சிகிச்சையால் பொடுகு உதிரும்.

பொடுகுகளுக்கு எலுமிச்சம் பழச்சாறும் ஒரு நல்ல மருந்து. எலுமிச்சம் பழச்சாற்றை எடுத்து மயிர்க்கால்களில் படும்படியாக நன்றாக தேய்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்து சீயக்காய் தேய்த்து குளிக்க வேண்டும். இப்படித்

## சிறந்த கூந்தலுக்கு உருப்படியான யோசனை



## லேடீஸ் ஸ்பெஷல்

தொடர்ந்து செய்து வந்தால் தலையில் பொடுகும் வராது. தலைமுடியும் பளபளப்பாய் இருக்கும்.

தினமும் தலைமுடியைத் தண்ணீரால் கழுவ வேண்டும். தலைக்கு தேங்காய் எண்ணையையும், நல்லெண்ணையையும் உபயோகிப்பது நல்லது. குளிக்கும் போது தலைக்கு சோப்பு உபயோகிக்கக் கூடாது.

வாரத்தில் இரண்டு முறைகள் இரவு படுக்கும்போது தலையில் சிறிதளவு விளக்கெண்ணெய் தடவி நன்றாகப் பரவலாகத் தேய்த்து மறுநாள் காலையில் தலைக்கு குளித்து வர வேண்டும். இச்சிகிச்சையால் தலை முடி மினுமினுப்போடும், மிருதுவாகவும் இருக்கும்.

ஷாம்புவை உபயோகிப்பவர்களும் விளக்கெண்ணெய் உபயோகிக்கலாம். தலைக்கு குளிப்பதற்கு முந்தின நாள் இரவோ அல்லது குளிப்பதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவோ தலையில், விளக்கெண்ணெய் தடவி நன்றாக மசாஜ் செய்து ஊற வைத்துக் குளிக்க வேண்டும்.

ஷாம்புவை உபயோகித்துக் குளித்தாலும் கடைசியாக தலையில் ஊற்றிக் குளிக்கும். தண்ணீரில் சிறிது வினிகரையோஅல்லது எலுமிச்சம் பழச்சாற்றையோ கலந்து குளித்து வருவது நல்லது.

# பளபளப்பூட்டும் பாதாம் பருப்பு

பாதாம் பருப்பு இரண்டை எடுத்து இரவில் நீரில் ஊற வைத்துக் காலையில் நன்றாக மை போல் அரைக்கவும். பிறகு ஒரு புளியங்கொட்டை அளவு பாலாடை, ஒரு சிட்டிகை மஞ்சள்பொடி, 2 சிட்டிகை கடலைமாவு, ஒரு தேக்கரண்டி தக்காளிச் சாறு, ஒரு தேக்கரண்டி தேன் எல்லாவற்றையும் பசைபோல் கலக்கவும். முகத்தைக் கழுவித் துடைத்த பிறகு இதை முகம் முழுவதும் சமமாக, பரவலாகப் பூசி அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விடவும். இதனால் முகத்தில் ஏற்படும் கரும்புள்ளி, எண்ணெய் வடிதல் போன்றன நீங்கி, முகத்திற்குப் பொலிவு உண்டாகும்.

துளசி இலையை அரைத்து சிறிது மஞ்சள் சேர்த்து, தேங்காய் எண்ணெயுடன் குழைத்து பருக்கள் மீது தடவி, அரைமணி நேரம் கழித்துப் பயத்தம் பருப்பு மாகலந்த நீரினால் முகம் கழுவி வந்தால் முகப்பரு நீங்குவதுடன் கரும்புள்ளிகளும் மறைந்துவிடும்.



வெந்தயத்தைச் சுத்தம் செய்து மாவாக்கி வைத்துக் கொள்ளவும். இதனைத் தினந்தோறும் முகத்தில் பவுடர்போல் பூசி வந்தால் முகப்பருக்கள் நீங்கும். தோல் வழுவழுப்பாகி வனப்பும் பெறும்.

# சின்ன மீன்குட்டி

கராத்தே தெரியும். குங்பூ தெரியும். நீச்சலில் சாதனை புரியவும் தெரியும். இதெல்லாம் தெரிந்த டைனிக்கு 12 வயது தான்.

தமிழ் நாட்டில் சென்னையில் குடியிருக்கும் டைனியின் அப்பா இராணுவத்தில் மருத்துவ அதிகாரி.

குற்றாலீஸ்வரன் என்னும் சிறுவன் நீச்சலில் சாதனை புரிய பயிற்சி கொடுத்த வீரபத்ரன்தான் டைனிக்கும் பயிற்சி கொடுத்தார்.

எட்டுவயதில் நீந்தத் தொடங்கிய டைனி இதுவரை செய்துள்ள சாதனைகள்:

நீல் தீவிலிருந்து போர்ட் பிளேர்வரை 33 கிலோ மீட்டரை 12 மணி நேரத்தில் நீந்தி சாதனை படைத்தாள். பாக்கு நீரிணையில் தலைமன்னார் முதல் தனுஷ் கோடிவரை 11 மணி நேரத்தில் நீந்தி சாதனை படைத்தாள்.

சுவிற்ஸர்லாந்தில் சூரிச் ஓடையில் 25.5 கிலோ மீட்டர் தூரத்தை 10 மணிநேரத்தில் நீந்திக் கடந்துள்ளார். மொத்தம் 8 தடவைகள் சர்வதேச நீர்ப்பரப்புக்களில் இந்த மீன் குட்டி நீச்சல் அடித்திருக்கிறது.

விரைவில் கின்னஸ் புத்தகத்தில் டைனியின் பெயர் இடம்பெறவுள்ளது.

அடுத்த சாதனைகளுக்கு தயாராகி வருகிறாள் டைனி.



# வீட்டு மருத்துவம்

★ தேனில் 75 சதவீதம் சீனி, 18 சதவீதம் தண்ணீர், சிறிய அளவில் கல்சியம், இரும்புச் சத்து, மக்னீசியம், பொட்டாசியம், சோடியம், சல்பர், புரதம் போன்ற சத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

★ தண்ணீரோடு சேர்ந்த தேன் மலமிளக்கியாகச் செயற்படுகிறது.

★ பாலில் தேன் கலந்து பருகினால் தேகவனப்புக் கூடும். எடையும் குறையும்.

★ ஒரு கப் சூடான பாலில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால் தொண்டை உபாதைக்கு நல்லது.

★ இரத்தச் சோகை, சிறுநீரகப் பிரச்சனைகள், இரத்த ஓட்டம் சரியில்லாது இருப்பவர்களுக்குப் பெரிதும் தேன் உதவுகிறது.

★ சுண்ணாம்பால் தேனைக் குழைத்துப் பற்றுப் போட்டால் வீக்கமும் வலியும் குறையும்.

# வீட்டுக் குறிப்புகள்

★ பழச்சாறு அல்லது ஜாம் செய்வதற்குப் பழங்களைக் கஷ்டப்பட்டு உரிக்காமல் வெந்நீரில் ஐந்து நிமிடம் போட்டு வைத்தால் போதும். தோலை சுலபமாக உரித்து விடலாம்.

★ கீரைகளை ஈரத்துணியில் சுற்றி வைத்தால் வாடாமல் இருக்கும்.

★ காய்கறிகளைத் தனித்தனி பிளாஸ்டிக் தட்டுக்களில் போட்டு வைத்தால் அழுகாமல் இருக்கும்.

★ வீட்டில் சுவர்களில் ஏதாவது படங்களை ஒட்ட வேண்டுமானால் பற்பசை கொண்டு ஒட்டுங்கள். படத்தை அகற்றும்போது சுவரில் எந்த அடையாளமும் தெரியாது.

★ இட்லி பஞ்சு போல் இருக்க அரிசியுடன் சிறிது வெந்தயம் சேர்த்துக் கொள்ளவும். இட்லி மிருதுவாக இருக்கும்.

★ ஊறுகாய் கெடாமல் இருக்க உப்பு நிறைய போட்டு வைக்கவும். நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## சைனீஸ் சிக்கன் ஃப்ரை

| | |
|---|---|
| கோழி | - 1 |
| அஜினோமோட்டோ உப்பு | - 1/2 தேக்கரண்டி |
| சோயா சோஸ் | - 1 கப் |
| வினாகிரி | - 1/2 கப் |
| பெரிய வெங்காயம் | -2 |
| மிளகுத்தூள் | - 1 தேக்கரண்டி |
| சோயா மாவு | - 3 மேசைக்கரண்டி |
| கோதுமை மாவு | - 2 மேசைக்கரண்டி |
| உப்பு, மஞ்சள் | - அளவாக |
| மாஜரின் | - அளவாக. |

செய்முறை–

கோழியைச் சிறு துண்டுகளாக நறுக்கி, அரைத்த வெங்காயம், மிளகுத்தூள், சோயா சோஸ், வினாகிரி, அஜினோமோட்டோ உப்பு, மஞ்சள், உப்பு, சேர்த்து அரைமணி நேரம் ஊற வைத்து, அடுப்பில் அரை வேக்காடு வேக வைக்கவும், பின் சோயா மாவையும், கோதுமை மாவையும் ஒன்றாகத் தண்ணீர் சேர்த்துக் கரைத்து வெந்த துண்டுகளை எடுத்து மாவில் தோய்த்து வாணலியில், கொதிக்கும் மாஜரின் அல்லது டால்டாவில் போட்டு பொரித்து சிவந்ததும் எடுத்துப் பரிமாறவும்.

# அமீர் சொகைலின் விருப்பங்கள்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 1983 இல் இந்தியா உலகக் கோப்பையை வென்றது.

அதன்பின்னர் 1992 இல் உலகக் கோப்பையை பாகிஸ்தான் கைப்பற்றியது. இங்கிலாந்து அணியை வென்றது மூலமாக உலகக் கோப்பை பாகிஸ்தானுக்கு கிடைத்தது.

பாகிஸ்தான் கோப்பை வெல்லக் காரணமாக இருந்தது அந்த அணியின் கூட்டு முயற்சிதான்.

அதில் 30 வயது நிரம்பிய அமீர் சொகைலின் பங்கு மிக முக்கியமானது. அமீர் சொகைலின் விருப்பு வெறுப்புக்களை அறிய வேண்டாமா? அறியலாமே!

**கிரிக்கெட்டில் சிறந்த நாள்** – உலகக் கோப்பை போட்டிக்காக தெரிவுசெய்யப்பட்ட நாள்.

**மோசமானநாள் (1992)** – நியூசிலாந்துக்கு எதிராக ஹாமில்டனில் நடந்த போட்டி.

**பிடித்தமான கிரிக்கெட் ஹீரோ** – வாசிம், ஹசன் ராஜா.

**உலகப் போட்டிகளில் பிடித்தமான வீரர்கள்.**– மார்டின் குரோவ், ஆலன் போர்டர். ஜாவிட் மியான்டட்.

**எதிர்கால இளம் வீரர்கள்** – சச்சின் டெண்டுல்கர். பாஸித் அலி, இன்ஸமாம் உல் ஹக்.

**பிடித்தமான மைதானம்** – பெர்த் ஒவல்

**பிடிக்காத மைதானம்** – கண்டி.

**சிறந்த பொழுது போக்கு** – சினிமா, இசை, சுற்றுலா பற்றிய புத்தகங்கள்.

**தொலைக்காட்சியில் பிடித்த நிகழ்ச்சி**– தொலைக்காட்சியே பார்ப்பது கிடையாது.



**சிறந்த சினிமா** - சென்ட் ஒப் எவுமன்.

**பிடித்த இசை** - சோல் மியூசிக்.

**பிடித்தமான வாகனம்** – ஹோண்டா சிவிக்.

**பானத்தில் பிடித்தது** – புரூட் கோக் டெயில்,

**எதிர்காலத்திட்டம்** – தொழிலதிபராக ஆசை.

இப்படியெல்லாம் தனது விருப்பங்களை சொல்லும் அமீர் சொகைல் பாகிஸ்தான் மீண்டும் உலகக் கோப்பையைக் கைப்பற்றும் என்று உறுதியாக நம்புகிறார்.

துவக்க ஆட்டக்காரரான அமீர் சொகைலின் ஆட்டம் இரசிகர்களை அதிகம் ஏமாற்றுவதில்லை.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 20

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

## வராமற் போனவள்!

நீ சந்திக்க வராத
அந்தக் கறுப்பு அந்திகளில்...
மனசு சோம்பலாய்-
வெறுமையோடு முனகும்.

ஆயினும் வழமை போல்...
உன் சின்னத் தெருவில்-
அந்தக் கிறவல் சிவப்பு
மௌனமாய் என்னோடு-
சிரித்துக் கொள்ளும்!
யாராரோ வருவர்...
யாராரோ போவர்...
ஆனாலும் நீ
வரவே மாட்டாய்...!

மனசு சோம்பலாய்-
வெறுமையோடு முனகும்

வீதியிலிருந்தே...
என் விழிகள்
பார்வையை
உன்-
வீட்டிற்குள் எறியும்!
காகம் குந்திய
குரோட்டன் அசைவில்-
மனசு உந்தன்
வரவு தேடும்!

ஒரு நேர்த்தியான-
கவிதைக்கென
தவமிருக்கும் இரவுகளாய்...
காதலி!
உனக்காக காத்திருக்கும்
அந்த-
அவஸ்தைகளில்
என் உயிர் உமியும்!

விழிகள் நோக...
நெஞ்சு கடுக்கும்!
காத்து... காத்து...
அந்தி கரையும்!
ஆயினும்-
ஒரு மூட நம்பிக்கையில்
இன்னும்
மூளை-
உன் வரவு நோக்க...
"போ...போ..." என்று
உன் முற்றத்து மாமரம்-
பச்சிலை அசைக்கும்!

திரும்பிப் போக-
திரும்பும் போது...,
இருளும் நாயும்
தெருவைப் பிடிக்கும்...!
அப்போதும்-
உன் சின்னத் தெருவின்
அந்த கிறவல் சிவப்பு-
மௌனமாய் என்னோடு
சிரித்துக் கொள்ளும்!

அட்டாளைச் சேனை
யூயெல் மப்றூக்.

## தேன் கிண்ணம்



### காதலி தேவை !

படித்து விட்டு வீட்டிலிருக்கின்ற,
வாட்ட சாட்டமான
வாலிபரொருவர்,
காலையும் மாலையும்,
வீதி வீதியாக
'காதலி' தேடிக்கொண்டிருக்கிறார்!
**
அண்ணர்,
ஐந்தாறு பெண்களைக்
காதலித்த அனுபவமுள்ளவர்;
உண்மையாகக் காதலிப்பார்.
**
கடற்கரைக்கு கூட்டிப் போவார்;
கடலையும் சுண்டலும்
வாங்கித் தருவார்.
**
பிறந்தநாள், பண்டிகையென்றால்
பரிசுப் பொருளும் தருவார்.
தனக்கு-வீட்டில்
வரன் பார்க்குமட்டும்
கண்கலங்கவிடாமல் காதலிப்பார்.

நீங்கள்-
சொல்லும் ஒழுங்கைக்கு
கதைக்க வர வேண்டும்.
அடுத்தவருக்குத் தெரியாமல்
பார்த்துக் கொள்ள வேண்டும்.
**
பிறகொரு நாளில்-
தங்கச்சி என்றாலும்
"ரென்ச"னாகக் கூடாது.
கடிதத்தைக் காட்டி
பயமுறுத்தக் கூடாது.
**
அழகு மட்டும் இருந்தால் போதும்;
வய தெல்லை கிடையாது.
விருப்பமென்றால்
பத்திரம் அனுப்ப வேண்டாம்;
வீட்டு வாசலில் நின்று
புன்னகைத்தால் போதும்.
**
அண்ணனில்லாத நங்கையர்க்கு
முன்னுரிமை வழங்கப்படும்...!

அ. டக்ளஸ் ஜெயு சேகரன், வவுனியா.

## ராக்கனவு



ஒளியை விழுங்கி
சப்தத்தைக் குடித்து
விசவரூபம் எடுத்திருந்தது-
அந்த இரவு!

எங்கும் அவிழ்த்து விடப்பட்டதாய்
மயான அமைதி..!

அசைய மறுத்த
மரங்கள் எல்லாம்-
மரத்துப் போய்நின்றன.

காற்று இருப்பதாக
எந்தஅடையாளமும் இருக்கவில்லை...
அப்படியானால்-
நான் சுவாசிப்பது...?

பூமி சுற்றுவதாகவும்
தெரியவில்லை..
ஆனால்..என் நினைவுகள்
அவளின் மௌனத்
திரையைக்
கிழித்து
நீந்திக் கொண்டிருந்தன.

நான்
தூங்கி விழித்தேன்...!

அந்த இரவு
செத்துப் போனது..!
சூரியச் சுடலை
எரிந்த கொண்டிருந்தது.

நான்
சென்ற இரவின்
கானாக்களை-
சேமிப்பில் இட்டு வைத்தேன்..!

சிபி. எம்ஜஎம். நகீம்,
பொத்துவில். 2.

## இமைகள்



நீக்ரோ-
இரட்டையர்கள்
இவர்கள்தான்!
விழிக்கோட்டையின்
நுழைவாயிற்-
காவலர்கள்...!

●–●

உள்ளிருந்து
வருவோரை
அனுமதிப்பார்கள்!
வெளியாரை
உட்செல்ல
விடமாட்டார்கள்!
தப்பித்துப் போனாலும்
தள்ளி விடுவார்கள்...!

●–●

ஒற்றுமைக்கு
உதாரண
புருசர்கள்...!

●–●

தூங்கும் போது
ஒருவரை ஒருவர்
கட்டிப்பிடித்துக் கொண்டு
தூங்குவார்கள்!
எழுந்து விட்டால்
அடிக்கடி
முத்தமிட்டுக்-
கொள்வார்கள்....!

●–●

என் காதலி
என்னோடு
சிரிக்க மறந்து
போய் விட்டால் மட்டும்-
அன்றிர வெல்லாம்
ஒட்டிக் கொள்ளவே
உடன்பட மாட்டார்கள்...!

●–●

சுய நலமில்லாமல்
என்-
நலத்திற்காகவே
வாழும்
நல்லவர்கள்!
என்றாலும்
கன்னியரைக்கண்டால்
சும்மா-
இருக்க மாட்டார்கள்...!
ஒட்டிப் பிரிவார்கள்...
என் கன்னத்தை
வீங்கவைப்பார்கள்..!

மீராவோடை- எஸ். நளீம்

## பாராமல் போவேனா?

ரோஜாவின் கற்பத்தில்
புறப்பட்டு வந்தவளே!
தென் பொதிகை சந்தனமே!
காவியத்தின் பேரழகைக்
கவி பாடாதிருப்பேனோ?

வையகமே இடிந்தாலும்
வானே நகர்ந்தாலும்
கிளியே உன் பொன்னுடலம்
தீண்டாமல் போவேனோ?

வெளியே இடி விழுந்து
வீதி எரிந்தாலும்
கிளியே ஒரு பார்வை
பாராமல் போவேனோ?

எதேனும் நோய் வந்து
ஊனை உருக்கி
உயிரில் விளக்கேற்றினாலும்
கிளியே! காணாத கேசங்கள்
காணாமல் போவேனோ?

ஒருநாள் ஒரு பொழுது
உன்மடியில் நானிருந்து
திருநாள் காணாமல்
செத் தொழிந்து போவேனோ?

காமத்தின் உச்சத்தில்
மோட்ச நிலை காணாமல்
சாகப் பிறந்தவன் போல்
பட்டென்று போவேனோ?

கண்ணாடியை களட்டி விட்டு
கன்னத்தில் முத்தமிட்டு
காலகதி மறக்காமல்
கண்மூடிப் போவேனோ?

வைகாசி மாதத்தில்
வைர விரல் தடவி
தளிர்தடவி மலர்தடவி
அங்கத்தில் அத்வைதம்
அடையாமல் போவேனோ?

"ஜித்தாவிலிருந்து அட்டாளைச்சேனை தாஹா."

## ஸ்நேகிதிக்கு!

நிலவுப்பெண்ணே
உன்னை
சுவாசிப்பேனேதவிர
நினைப்பதில்லை-
நீ தும்மி
உன் விழிகளால்
நீர் வரும் என்பதனால்.!
என்னவளே
அதிகமாக அழுது விடாதே
கண்ணீரும்-
என்னைப் போல
நீண்டு விடும்.!

★★

காதலைப்படைத்த
கடவுள்
கண்ணீரை ஊற்றி
வளர்த் திருக்கிறான்!

★★

விழுதுகளில்
ஆலமரம்
பிறப்பதில்லையே!




நீ
என் உயிரின் ஆணிவேரின்
அடிவயிற்றில்
ஒட்டிக் கொண்டாய்
மரம் இறந்தாலும்
வேர் இறப்பதில்லையே.!

★★

திருமணம்-
இங்கு நடாத்தப்படும்
போலியும் சம்பிரதாயமும்!

★★

நீ மௌனமாவதை
தாங்காத விழிகள்
நீ-
மரண மாவதை
தாங்காதம்மா-!
ஸ்னேகிதி-
கடைசியாக உன்னை
சந்தித்த நான்-
உடைந்து போன
என் இதயத்துண்டுகளையும்
சிதைந்து போன
என் கனவுகளையும்
மெதுவாக அப்பிக்கொண்டு
வந்து விட்டேன்.



மு.அ. தஸ்ரீப், அக்கரைப்பற்று.

## மா(தே)ற்றிக் கொள்வேன்



உன்னில்
நேயம்
கொண்டதால்
காயம்
கொண்ட
என்
இதயத்திற்கு
இருப்புக்கதவும்
போட்டு
இறுக்கமாய்
ஓர்
பூட்டும்மாட்டி
'இதயமே
இனி
திறவாதே'
என்றாலும்
எல்லாவற்றையும்
தகர்த்தெறிந்துவிட்டு,
உன்
நினைவுகள்
மட்டும்
எப்படி
வெளியே
குதித்துவிடுகிறது?

வானில்
சுற்றும்
பருந்தைப்போல்
என்னுள்
வட்டமிட்டுக்
கொண்டே
இருக்கும்
உன்
நினைவுகளை
மட்டும்
என்னால்
கொன்று
போடவே
முடியவில்லையே!

நீ
சுட்டெரித்த
வார்த்தைகளும்
வார்த்தைக்
கற்களால்
என்னை
வதைத்தெடுத்த
ஞாபகங்களும்
வந்து வந்து
என்னை
தகர்க்கிறதே!

யாரோடோ
வாழப்
போவதாய்
ஓலை
வரைந்திருந்தாய்!
காலம்
தாழ்த்தாதே....
வாழ்ந்து விடு..!

உன்னையே
நீ
மாற்றிக்
கொண்டபோது,
என்னையே
நான்
தேற்றிக்
கொள்வதில்
என்ன தப்பு...?
தேறிவிடுவேன்.




செல்வி. சுப்ரமணிம் வாணீஸ்வரி,
அப்பர்கலஹா.

## "படிகள்"

ஒரே
தரிப்பிடங்களில்
இறங்கி
நான் முன்னே
சென்றாலும்
என்
நினைவுகள்
பின்னால் வரும்...
உன் மீதுதான்!

என்-
கால்கள்
விதைத்த
சுவடுகளை
நீ,
பின்தொடர்ந்து
வந்தாலும்....
நடந்து வருவது
என்
இதயத்தில்தான்!



ஹெந்தளை நவா.

---



தோழனே,
முகங்களைத் தேடு
மிதித்துப் போட்டு
மிதியடிகளை
துடைக்க வேண்டும்.

சதையைத் தறித்து
சாமிக்கு போட வேண்டும்.
இறந்த புறாவின்
தோலால்

துப்பாக்கியைத் துடைத்து
தயாராக வேண்டும்.

விடிவின் விலாசம்
கொலைக் களத்தில் தீரான்
சூரியனின் சுட்டெரிப்பில்
வெட்டின் வெதுவெதுப்பில்
துப்பாக்கித் துளைப்பில்
சோகமாய்ச் சாகலாம்.
சாந்திக்கு அங்காவது

சத்திரம்
இருக்கிறதா...என்று
பார்க்கலாம்.

புறப்படு!
சாவு தாமதமானால்
என்றாவது ஒரு நாள்
பிறக்கும்
மனிதாபிமானம்
பிறக்காமலே
போகலாம்.

எரிந்த பிணங்கள்
எம்மைப் பார்த்து
சிரிப்பதைப் பார்
போலியாகச் சிரி
போதும்.
உள்ளுக்குள் அழு
உடைந்து போ!

## ரணங்கள்!

இறந்து போனால்
எல்லாம் சரி
புறப்படு.
புலர்வை எம்
ஆவிகள் பார்க்கட்டும்.



அம்தரவல்ல நிலாவாசன்.

## தொடரும் யுத்தத்தால்.....!

பச்சயம் இல்லாத
தேசம் ஒன்று
நிச்சயம்
எச்சமாகப் போகிறது...!

★★★

நித்திலத்திலும்
ஒரு
நீண்ட "சகாரா"
சாகரமாகும்...!

★★★

கந்தகக்-
காற்றில்
கலவரப்பட்ட
கந்தல் சுவாசமே
சுவாதீனமாய்
மிஞ்சும்...!

★★★

அமாவாசைகளோடே
அமரத்துவ
நிஷ்டையில்
நிஷ்டூரமாகும்...
நிலவு!

★★★

கண்ணீர் விட
வெள்ளத்துக்கு
மட்டுமே....
அவகாசமிருக்கும்...!

பாணகமுவ-எஸ்-முஸ்தாக்,
குருநாகல்.

---

## இந்த வாரம் உங்கள் பலன்

(07.01.96 முதல் 13.01.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | -சூரியன், புதன், வியாழன். |
| மகரம் | -வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | -சனி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |

★ சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்ச்சி, வீண்குறை கேட்டல். | பகல் 12 மணி |
| வியாழன்-அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- பொருள் பேறு, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- கரியானுகூலம், பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனப்பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் நிலை மந்தம், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- வீண்முயற்சி, உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- வெளியிட வாழக்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்முயற்சி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| புதன்- காரியானுகூலம், தொழில் பேறு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண்முயற்சி, அற்ப இலாபம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தூர இடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- பயனுள்ள செயல், அற்ப சுகம். | காலை 6 மணி |
| வியாழன்- வீண் சந்தேகம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம்,. | பி.ப. 2 மணி |
| வியாழன்- முதிய முயற்சி, அற்ப சுகம். | காலை 6 மணி |
| வெள்ளி- கௌரவம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| சனி- உறவினர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 1 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, அதிகாரவிருத்தி. | பகல் 12 மணி |
| வியாழன்-வெளியிடவாழ்க்கை, உயர்ந்தநட்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- மனக்கலக்கம், பயனற்றசெயல். | காலை 7 மணி |
| சனி- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பி.பகல் 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- துயர்நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன் - புதிய முயற்சி, மனப்போராட்டம். | பகல் 2 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம் , பெரியோர் சகாயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில்மந்தம், பணச்செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிடப்பயணம், கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில்சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- வீண்முயற்சி, அந்நியர்தொல்லை. | பகல் 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- துயர்நீங்கும், வீண்குறைகேட்டல். | பகல் 12 மணி |
| வியாழன்-இனசனநன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9


### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக் கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி -பொருள் விரயம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| சனி- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1





## வர்ண ஜாலம்

நீலா நீலா இங்கே வா
நீல வானை எட்டிப் பார்!
தூறல் போடும் வானமதில்
தோன்றும் வான வில்லைப் பார்!

பச்சை மஞ்சள் கரு நீலம்
சேர்ந்து சிவந்த மஞ்சள் பார்!
சிவப்பு நீல நிறங்களுடன்
சேர்ந்து விளங்கும் ஊதா பார்!

எழுவான் கதிரோன் வெள்ளொளியில்
ஏழு நிறங்கள் தெரியுது பார்!
ஏழு நிறங்கள் என்ன வென்று
சொல்வேன் அதனைக் கேட்டுப் பார்!

படித்த பாடம் வகுப்பறையில்
சொல்லும் உண்மை இங்கே பார்!
வர்ண ஜாலம் காட்டு மந்த
விந்தை அழகை நேரில் பார்!

மிருதுபாஷினி - பதுளை.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்!
– சுப்பிரமணிய பாரதியார்.

## மூதாட்டியின் பிரார்த்தனை

### பாப்பா முரசு சிறுகதை



சதுரகிரி மன்னன் சுந்தரேசன் மிகப்பெரிய கொடுங்கோலன். நாட்டு மக்களுக்கு அதிகமான வரி விதித்தான். சிறு குற்றம் செய்தாலும் பெரிய தண்டனை விதித்தான். இப்படிப் பல வழிகளிலும் அவன் மக்களைக் கொடுமைப்படுத்தினான். இதனால் மக்கள் அளவில்லாத துன்பம் அடைந்தனர். சுந்தரேசனை சிறு குழந்தை கூட வெறுத்தது.

மக்கள் ஆலயங்களுக்குச் சென்றால், 'இந்தக் கொடுங்கோல் மன்னன் விரைவில் இறக்க வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து விட்டுத்தான் மற்ற வழிபாடுகளைத் தொடர்வார்கள். அந்த அளவிற்கு சுந்தரேசன் கொடுங்கோலனாய் இருந்தான்.

இந்த நாடே தன்னை வெறுப்பதை சுந்தரேசன் உணர்ந்தான். ஆனால் அது பற்றி அவன் பெரியதாக எதையும் எடுத்துக் கொள்வதில்லை.

சதுரகிரியில் ஒரு மூதாட்டியும் இருந்தாள். ஆனால் அவள் ஆலயங்களுக்குச் சென்று முதல் வழிபாடாக, "கடவுளே! நான் இறக்கும் வரை இந்த மன்னன் உயிருடன் இருந்து, நாட்டை ஆள வேண்டும். அதுவரை அவன் உடல் நலத்தோடு இருக்க அருள்புரி!" என்று வேண்டுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

மூதாட்டியின் இந்தப் பிரார்த்தனை விஷயம் எப்படியோ ஒரு நாள் மன்னன் சுந்தரேசனின் காதுகளுக்கு எட்டியது.

அவன் பெரிதும் வியந்தான்.

'இந்த நாடே என்னை துஷ்டன் என்றும், கொலைகாரன் என்றும், விரைவில் இவன் சாகவேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் போது, அந்த மூதாட்டி மட்டும் ஏன் நான் உடல் நலத்தோடு பலகாலம் ஆட்சி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறாள்?' என்றும் நினைத்துப் பெரிதும் ஆச்சரியப்பட்டான்.

அந்த மூதாட்டியை வரவழைத்து அவள் பிரார்த்தனையின் காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினான் மன்னன் சுந்தரேசன்.

சேவகன் ஒருவனை அனுப்பி அந்த மூதாட்டியை அரண்மனைக்கு வரவழைத்து அவளது பிரார்த்தனைக்கான காரணத்தைக் கேட்டான்.

அதற்கு அந்த மூதாட்டி,

"மன்னா! நான் சிறுமியாக இருந்தபோது உன் தாத்தா இந்த நாட்டை ஆண்டார். அவர் மிகப்பெரிய கொடுங்கோலர். அவரது கொடுங்கோன்மையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதை இப்போது நினைத்தாலும் என் உடம்பே நடுங்குகிறது.

அவருக்குப் பின் உன் தந்தை நாட்டை ஆண்டார். அவரோ கொடுங்கோன்மையில் உன் தாத்தாவையும் மிஞ்சி விட்டார். அதனால் உன் தந்தையை விட உன் தாத்தாவே மேல் என்று நாடே எண்ணியது. உன் தந்தை இறந்து போக வேண்டும் என்று இந்த நாடே பிரார்த்தனை செய்தது. ஒரு வழியாக அவரும் இறந்தார்.

அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த நீ, கொடுங்கோன்மையில் உன் தாத்தாவையும், அப்பாவையும் மிஞ்சி விட்டாய். உனக்கு அடுத்து இந்த நாட்டை உனது மகன் ஆள வருவான். அப்பொழுது அவன் உனது பரம்பரையையே தூக்கிச் சாப்பிடும் அளவிற்குக் கொடுங்கோலனாய் இருப்பான். அவனை விட நீ மேல் அல்லவா? அதனால் தான் நீ நீண்ட காலம் உயிருடன் இருந்து ஆட்சி செய்ய வேண்டும் என்று கடவுளிடம் தினமும் பிரார்த்திக்கிறேன். இதுதான் எனது பிரார்த்தனையின் இரகசியம்," என்றாள்.

இந்தப் பிரார்த்தனையின் விளக்கத்தைக் கேட்ட மன்னன் சுந்தரேசன் மிகவும் மனம் ஒடிந்து போனான். வம்சம் வம்சமாக எத்தனை பாவச் செயல்களைச் செய்து வருகிறோம் என்று எண்ணி மிகவும் வெட்கப்பட்டான்.

அந்த மூதாட்டியை நிமிர்ந்து பார்க்கவே அவனால் முடியவில்லை. அன்றிலிருந்து தனது கொடுங்கோன்மையை விட்டொழித்து, நாட்டில் சுபீட்சத்தை மலரச் செய்து தனது பாவத்தைக் கழுவினான் மன்னன் சுந்தரேசன்.

## வாரம் ஒரு நாடு

### கென்யா



**தலைநகர்** – நைரோபி
**பரப்பு** – 582642 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை** – 2.61 கோடி
**மொழி** – கிஸ்வாகிலி, ஆங்கிலம், கிகுயு
**எழுத்தறிவு** – 50%
**சமயம்** – பழங்குடி, கிறிஸ்தவம், இஸ்லாம்
**நாணயம்** – ஷில்லிங்
**தனி நபர் வருமானம்** – 380 டொலர்.

**வரலாறு:**
பிரிட்டனிடமிருந்து 1963 இல் சுதந்திரம் பெற்றது. 1964 இல் குடியரசானது. 150 பேர் கொண்ட சட்டசபை இருக்கிறது.

**பொருளாதாரம்:**
பலவிதமான விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சோளம், கோதுமை, உருளைக் கிழங்கு, கோப்பி, தேயிலை போன்றவை முக்கியமானவை. தங்கச் சுரங்கங்கள் அதிகமாக உள்ளன. வாகனங்கள், மற்றும் இரசாயனப் பொருட்கள் சார்ந்த தொழிற்சாலைகள் வளர்ந்து வருகின்றன. உலகின் அதிக மக்கள் தொகைப் பெருக்கம் (4%) கொண்ட நாடு இது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.01.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 123
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## விடுகதைகளும் விடைகளும்

1. அப்பனுக்கு முன்னே அவையில் நிற்பான்-அவன் யார்?
2. பூமிக்குள்ளே பொன் விரலாள்-அவள் யார்?
3. தவறு செய்யாவிட்டாலும் தலையைப் பிடிக்கிறான் அவன் யார்?
4. ஓடும் என்பார்கள், அது ஓடாது-அது என்ன?
5. மூடி திறந்ததும் மூக்கைத் துளைக்குது-அது என்ன?
6. சிறு துளி பெருவெள்ளம்-அது என்ன?
7. குப்பை பெருக்கும் சொந்தக்காரக் கூட்டம்-அது என்ன?
8. நெய்யாதது; ஆனால் தையாமல் தீராது-அது என்ன?
9. பூக்காமல் பிறந்த காய், பொரிக்காமல் தீராத காய்-என்ன காய்?
10. தந்தைக்கோ அடி தமையனுக்கோ ப்டி-அவை என்ன?

### விடைகள்

1. விநாயகர் 2. மஞ்சள்
3. சவரத்தொழிலாளி 4. கடிகாரம்
5. பலாப்பழம் 6. தீபம்
7. கோழி 8. புத்தகம்
9. பொரி விளாங்காய் 10. வைக்கோல், நெல்

தொகுப்பு: ஏ. அகல்யா, நுவரெலியா.

## சகாரா பாலைவனம்

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள சகாரா பாலைவனம் என்பது உங்களுக்குத் தெரியும். சகாரா பாலைவனத்தைப் பற்றி இன்னும் சில செய்திகள் இதோ:



இந்தப் பாலைவனம் ஒன்பது மில்லியன் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு உள்ளது. சகாராவுக்கு அடுத்த இடங்களில் இருக்கும் ஒன்பது பெரிய பாலைவனங்களை ஒன்று சேர்த்தால், எவ்வளவு பரப்பளவு வருமோ அது மொத்தத்தையும் இந்தப் பாலைவனமே பெற்றுவிடும்.

இந்தப் பாலைவனத்தின் பெரும்பாலான பகுதிகளில், வறண்ட பாறைகளும், சரளைக் கற்களும் நிறைந்துள்ளன. மீதமுள்ள இடங்களில் மணல் நிறைந்துள்ளது. சில இடங்களில் இந்த மணல் 180 மீட்டர் உயரத்திற்குக் குவிந்து குன்று போல காட்சி அளிக்கிறது.

ஆபிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, டுனீசியா, லிபியா, சூடான், நைஜீரியா, சாட், மாலி, மௌரிஷியானியா ஆகியவை எல்லாம் சகாரா பாலைவனத்தைச் சூழ்ந்திருக்கும் நாடுகளாகும். எகிப்து நாட்டின் 75 சதவீத பகுதி இந்தப் பாலைவனத்தில் தான் உள்ளது.

உண்மையிலேயே இது பிரமாண்டமான ஒரு பாலைவனம் தானே!

## ஒரு வரிச் செய்திகள்

* ஒட்டகச் சிவிங்கி எந்த ஒலியும் எழுப்பாது.
* சுண்டெலிக்கு வியர்ப்பதே இல்லை.
* பூனைக்கு இனிப்புச் சுவை தெரியாது.
* மீன்கள் சாகும் வரை வளர்ச்சியடையும்.
* யானை ஒரே இடத்தில் தொடர்ந்து எட்டு மணித்தியாலங்கள் நிற்கும்.
* ஒட்டகம் பதினைந்து மணித்தியாலங்கள் தொடர்ந்து நடக்கும்.
* முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூங்கும்.
* வெட்டுக்கிளி நாட்கணக்கில் பறக்கக்கூடியது.
* 'கிரீப்' எனப்படும் பறவை நீரின் மேற்பரப்பிலேயே கூடு கட்டுகிறது.
* அனெப்லஸ் என்ற மீனுக்கு நான்கு கண்கள்.
* எலி, முயல் போன்ற விலங்குகளுக்குப் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும்.
* அந்தமான் ஆறுதீவுகளும், நிக்கோபர் 19 தீவுகளும் கொண்டவை.
* விம்பிள்டன் பந்தயம் 1887ல் முதலில் தொடங்கப்பட்டது.

## ஐ.நா.தகவல்கள்



யுனெஸ்கோ (UNESCO), யுனிசெப் (UNICEF) அமைப்புக்கள் கல்வியைப் பரப்பவும், குழந்தைகள் நல்வாழ்வுக்குமாகவும் ஐ.நா.வினால் 1946ல் துவக்கப்பட்டவை.

அடக்கு முறையை எந்த வடிவத்திலும் எதிர்த்தும், மனித உரிமைகளைப் பாதுகாத்தும் உலகப் பிரகடனம் ஒன்றை ஐ.நா. 1948ல் வெளியிட்டது.

* * *

1950ல் ஆண்டு பாதுகாப்பு கவுன்ஸிலில் இருந்து சோவியத் நாடு வெளிநடப்புச் செய்தபோது, அமெரிக்கா தலைமையில் கொரியாவுக்கு ஒரு படை அனுப்ப ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியது.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 121

பரிசுக்குரியவர்:
ஏ.எச். ஹாரிஷ்
நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம்.

பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| பொ. சுதாகரன்<br>மட்/மகாஜன கல்லூரி மட்டக்களப்பு. | ச. சிவமலர்<br>கலைமகள் தமிழ் வித்தியாலயம், நுனுகலை. |
| நவரெத்தினம் மௌலீசன்<br>மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு. | த. சஞ்சீவன்,<br>சிவன் வீதி, திருக்கோணமலை. |
| ஆ. அசோக்<br>சரஸ்வதி வித்தியாலயம், பதுளை. | செல்வி. சி. வினோதினி<br>சென். ஜோன்ஸ் மகா வித். கொழும்பு-15. |
| பாத்திமா ரிஸ்னா இப்றாஹீம்.<br>அஸ்ஹர் மத்திய கல்லூரி, அக்குறணை. | எம்.எம்.எம். அநீஸ்<br>ஸாதாத் மகா வித்தியாலயம், கொடபிடிய. |
| ஏ.சி. முகம்மது ரிஸ்வீன்<br>தில்லையடி முஸ்லிம் வித்தியாலயம், புத்தளம். | தே. அமலதாசன்<br>திரு இருதய நாதர் ஆலயம், கல்முனை. |

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

# விலை உயர்ந்தது

## 17

**பட்டுக்கோட்டை பிரபாகர்**




**"ஏன்** வந்தோம் பரத்? எனக்குப் புரியலை" என்றாள்.

"ஏன்ம்மா இப்படிக் கேக்கறே? அந்த சரவணகுமாரை..."

"புது தேசம், புது அமைப்பு, புது மனுஷங்க. உல்லாசம் தான் மனசுக்கு வருதேயொழிய தீவிரம் வரல்லையே...? இவ்ளோ பெரிய சிடில என்ன இலக்கில இறங்கப் போறோம்? அவன் எந்த சிடிலதான் இருக்கானான்னே தெரியாது நமக்கு."

"எதுவுமே முதல்ல பிரமிப்புதான் சுசி, முதல் காதல், முதல் முத்தம், முதல்..."

"சரி, சரி, போதும். என்ன செய்யப் போறோம்?"

"நத்திங், தனியா எந்த வழிமுறைகளிலேயும் இறங்கறதா இல்லை சுசி."

"பின்னே?"

"நியூட்டனுக்கு நாம் பார்ட்னர்ஸ். அவ்வளவுதான்."

"கவர்னருக்கு ஆலோசகர்கள் மாதிரியா?"

"ஆமாம், நமக்குத் தோணும் ஐடியாவைச் சொல்லப் போறோம். தட்ஸ் ஆல். இந்த தேசத்தில் தனியா சாதிக்கிற காரியம் எல்லாம் இம்ப்பாஸிபிள். வி நீட் எ நெட்வொர்க் கோவாப்பரேஷன். நமக்குத் தெரிஞ்ச தகவல்கள் இந்தக் கேஸ்ல என்னென்ன, சொல்லு?"

"பார்க்கர் ஸ்மித், ஆனின்னு ரெண்டு பேர் மெட்ராஸ் வந்தாங்க. அங்கே நம்ம ஆட்கள் யாரோ உதவி செஞ்சாங்க. பாஸ்போர்ட்ல ஃபோர்ஜரி செஞ்சி சரவண குமாரை தத்துப் பிள்ளை கணேசன்னு இங்கே கடத்திட்டு வந்துட்டாங்க. கொடுத்த விலாசம் மாறிப்போச்சு. கொடுத்த போன் நம்பர் மாறிப்போச்சு. இப்போ அவங்க எங்கே? தெரியாது. சரவணகுமாரை எதுக்குக் கடத்தி வந்தாங்க? தெரியாது."

"அதுகூட ஓரளவு என்னால யூகிக்க முடியுது சுசி. சரவணகுமார் ஒரு எக்ஸ்ட்ராடினரி பையன். ஃபோட்டோகிராஃபிக் மெமரி உள்ளவன். அவனை பல முக்கிய காரியங்கள்ல பயன்படுத்திக்க முடியும். பார்க்கர் ஸ்மித் யாருன்னு தெரிஞ்சா நம்ம யூகம் இன்னும் ஊர்ஜிதம் ஆகும். யாருக்காகக் கடத்தினார்? ஓரளவு விபரங்களோட அந்த ஆஃபீஸர் வருவார்ன்னு நம்புறேன்."

"சரி, அவர் வர்றவரைக்கும்....?"

"நான் ஷேவ் பண்ணிக்கிறேன். நீ டி.வி.பாரு."

"இந்த ஹோட்டலைச் சுத்திப் பார்த்துட்டு வந்துடறேன்."

"சீக்கிரம் வந்துடு."

சுசிலா வெளியேறியதும், பரத் க்ரீம் தடவி ஷேவ் செய்து கொண்டான். பெட்டி திறந்து உடை மாற்றிக் கொண்டான். வைக்கப்பட்டிருந்த அன்றைய 'வாஷிங்டன் போஸ்ட்' பேப்பரைப் புரட்டினான். ஹோட்டலைப் பற்றிய விபரங்கள் அடங்கின கார்டைப் பார்த்தான்.

அரை மணி கழித்து சங்கீதமாக ஒலித்த அழைப்பு மணியை முதலில் என்னவோ என்று அலட்சியப்படுத்தி, இரண்டாவது தடவையில் விழிப்படைந்து சென்று பீப்ஹோல் வழியாகப் பார்த்துத் திறக்க...

முழு சூட்டில் இருந்த அந்த ஒல்லியான மனிதர் எதேஷ்டமாக மூக்கு வைத்துக் கொண்டு, குளோஸாக கட் செய்திருந்த தலையில் பாலிதீன் தொப்பி வைத்துக் கொண்டு, பிடிவாதமாகப் புன்னகையைப் பூட்டி வைத்துக் கொண்டு, "மிஸ்டர் நியூட்டன் இருக்கிறாரா?" என்றார் ஆங்கிலத்தில்.

"இருக்கிறார். நீங்கள்?"

சடார் என்று நிஜாரில் கை விட்டு எடுத்து முகத்துக்கு முன் விரித்துக் காட்டி, அதைப் படித்து முடிப்பதற்குள் மூடி வைத்துக் கொண்டு, "ஃப்ரான்ஸிஸ் கென்னடி ஃப்ரம் இந்தியன் எம்பஸி" என்றார்.

"கமின் சார், ஐ ம் பரத். லா மேன். மிஸ்டர் நியூட்டன் உடன் வந்திருப்பவன். அமருங்கள்." நியூட்டனின் கதவைத் தட்டி, அவர் எழுந்து வந்து தன் அடையாள அட்டை காட்டிய பின்தான் சிரித்தார்.

"நானும் இந்தியன் தான். பதினேழு வருடங்களாக இங்கே இருக்கிறேன்."

கொஞ்சம் விரிவாக அறிமுகங்கள் ஆன பிற்பாடு, அங்கே சுசியை இன்னும் காணோம் என்று பரத் கவலைப்பட்ட பிற்பாடு அவர் சொன்னார்:

"மிஸ்டர் நியூட்டன், பார்க்கர் ஸ்மித், ஆனி என்று இரண்டு அமெரிக்கர்களின் முகவரிகள் கொடுத்தார்கள். அவர்கள் அந்த முகவரிகளில் இருக்கிறார்களா என்று போலீஸ் உதவி இல்லாமல் ரகசியமாக விசாரிக்க சொன்னார்கள். அதன்படி விசாரித்து அந்த விலாசங்கள் சமீபத்தில் காலி செய்யப்பட்டிருக்கின்றன; புது விலாசங்கள் அறியப்பட முடியவில்லை என்றும் தகவல் கொடுத்தோம். அவர்கள் இருவரும் யார், என்ன என்கிற விபரங்களையும் ரகசியமாகப் போலீஸ் உதவி இல்லாமல் விசாரிக்கச் சொல்லியும், சென்னையிலிருந்து வரும் உங்களைச் சந்தித்து உதவும் படியும் கேட்டுக் கொண்டார்கள், உங்கள் சென்னை போலீஸ். காரணம் தான் புரியவில்லை."

"மிஸ்டர் ஃப்ரான்சிஸ், சரவணகுமார் என்னும் ஒரு அற்புதமான பிறவி மேதைச் சிறுவன். அவர்களால் கடத்தி இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறான். போலீஸ் மூலம் விசாரணையில் ஈடுபட்டால் அவர்கள் விழித்துக் கொண்டு தப்பிக்கவோ, அல்லது அவனைக் கொன்றுவிடவோ வாய்ப்பிருந்ததால், கழுவித் தள்ளின மொசைக் தரையில் நடப்பதைப் போல ஜாக்கிரதையாக செயல்பட வேண்டியிருந்தது. இப்போது அவர்களைப் பற்றிச் சொல்லுங்கள்."

ஃப்ரான்ஸிஸ் கென்னடி சிகரெட்பற்ற வைத்துக் கொண்டு முதல் புகை ஊதிவிட்டு, "பார்க்கர் ஸ்மித் சி.ஐ.ஏவில் இருந்து ஓய்வு பெற்றவர். அவர் மனைவி ரெய்ஸா. ஓய்வு பெற்று ஒரு மாதம், பத்து நாட்கள் தான் ஆகிறது. இதற்கு மேல் ஆழமாக இன்னும் போகவில்லை."

"சரி, ஆனி?"

"மிஸ் ஆனி, நியுயார்க் பத்திரிகையில் ரிப்போர்ட்டராக இருக்கிறாள். குடும்பம் இல்லை. இரண்டு முறை விவாகரத்து செய்தவள். 'லெக்ஸிங்டன் அவென்யுவில்' அந்த விலாசத்தில் நபர் இல்லை. பத்திரிகையைத் தொடர்பு கொண்டபோது தங்கள் ரிப்போர்ட்டர்களின் முகவரிகள் கொடுப்பதற்கில்லை என்று கூறிவிட்டார்கள். விஷயத்தின் முக்கியத்துவம் எங்களுக்குத் தெரிந்திருந்தால் என்னை சரியாய் அறிமுகப்படுத்திக் கொண்டே விசாரித்திருப்பேன். இப்போது காரில் வந்திருக்கிறேன். என்ன செய்யலாம், சொல்லுங்கள். போலீசிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டால் இரண்டு மணி நேரங்களில் உங்கள் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி விடுவார்கள்."

"எங்களுக்கு அவர்கள் முக்கியமில்லை. அவர்கள் தப்பு செய்ததற்கு தண்டனை அடையா விட்டால் கூட கவலையில்லை. சரவணகுமார் சேதமில்லாமல் வேண்டும். அதிரடியாய் இறங்கும் போதும் அவனை ஏதாவது செய்து விடலாம். அதான் எங்கள் தயக்கமே" என்றான் பரத்.

"ஓக்கே, என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம்?"

"சி.ஐ.ஏக்கு சென்று உங்களை பார்க்கர் ஸ்மித்தின் பழைய நண்பர் என்று அவர் ஓய்வு பெற்றதை அறியாதவராகக் காட்டிக் கொண்டு விசாரிக்கலாம். அவரின் எந்த நண்பரைக் கேட்டால் தெரியும் என்று நண்பர்களின் விலாசங்கள் சேகரிக்கலாம்" என்றார் நியூட்டன்.

"நல்ல யோசனை. அதைவிட எனக்கென்னவோ அந்த பத்திரிகைப் பெண்ணைக் கண்டுபிடித்து, கார்னர் செய்து, கேட்கிற முறையில் கேள்வி கேட்டால்...சரியாய் வரும் என்று நினைக்கிறேன்" என்றான் பரத்.

அழைப்புச் சத்தம் ஒலித்து, திறக்கப் பட்டதும் சுசிலாவும், அந்த இந்தியப் பையனும் உள்ளே வந்தனர். அவன் மெனெக்கெட்டு தலையைக் கலைத்து வைத்திருந்தான். கம்கட்டு முடிகள் தெரிய கையில்லாத ஒரு பனியன் போட்டிருந்தான். ஜீன்சில் வெளுக்க, வெளுக்க இன்பமடைந்திருந்தான்.

"பரத், இவர் பட்டாபி. சதுர்வேதி புள்ளை. பப்புன்னு கூப்புடுவாங்களாம். ரிஸப்ஷன்ல நம்ம ரூமை விசாரிச்சிட்டிருந்தார். நாங்கதாம்ப்பான்னு அறிமுகப்படுத்திக் கிட்டேன். ஹோட்டல் பூரா சேர்ந்தே சுத்தினோம். ஸ்டீம் பாத் எல்லாம் இருக்கு. ப்யூட்டி பார்லர்ல..." என்று கென்னடியைப் பார்த்து நிறுத்தினாள்.

அறிமுகங்கள். ஹலோ, ஹலோ, ஹாய்.

"என்ன பேசிக் கொண்டிருந்தோம்?" என்றார் நியூட்டன். "பார்க்கர் ஸ்மித்தின் நண்பர்களை விசாரிப்பது, ஆனியை தீவிரமாகத் தேடுவது என்று பேசினோம்" என்றார் கென்னடி.

"நியூட்டன் சார், நீங்க ரெண்டு பேரும் பார்க்கரைப் பத்தி விசாரிங்க. நாங்க இந்தப் பையனை அழைச்சுக்கிட்டு 'நியுயார்க்கர்' பத்திரிகை ஆஃபீஸ் போயி... தகிடுதத்தம் பண்ணிப் பார்க்கறோம்."

பத்து நிமிட விவாதத்திற்குப் பின் அந்த முடிவு ஏற்கப்பட்டது. போக இரண்டரை மணி நேரம் வர இரண்டரை மணி நேரம், அங்கே இரண்டு மணி நேரம். எனவே எப்படியும் இரவு பத்து மணிக்குள் திரும்பி விடலாம் என்று கணக்கெல்லாம் போட்டுக் கொண்டு கென்னடியும், நியூட்டனும் புறப்பட்டுச் சென்றார்கள்.

"பட்டாபி, நீ என்ன செய்றே?" என்றான் பரத்.

"மெடிக்கல் பண்றேன் அங்கிள்."

"அங்கிளா? சும்மா பரத்ன்னே கூப்புடு."

"ஆமாம், சும்மா என்னையும் சுசின்னே கூப்புடு, பப்பு தலவாரிக்கக் கூடாதாப்பா?"

"நேரமில்லையாம். நீ வாரி விடு. பட்டாபி, உனக்கு...?"

"என்னமோ மாதிரி இருக்கு சார். கால் மி பப்பு"

"சரி பப்பு. உனக்கு நியுயார்க்கர் பத்திரிகை ஆஃபீஸ் தெரியுமா?"

"தெரியும்."

"நேரா இப்ப அங்க போறோம்." என்று எழுந்தான் பரத்.

"இந்த ட்ரெஸ்ஸோடயா? நோ. ஒரே ஒரு நிமிஷம்!"

என்று அறைக்குள் போன சுசிலா திரும்பி வந்தாள் **'BLACK & WHITE'** 'பனியனில். இதில் ப்ளாக் பொடி எழுத்துக்களிலும், வொய்ட் பெரிய எழுத்துக்களிலும் இருந்தன.

**மே**டிஸன் ஸ்ட்ரீட்டில் இருந்த புதிய விலாசத்தில், பார்க்கர் ஸ்மித் மென்த்தால் சிகரெட் பிடித்துக் கொண்டு, நடு நடுவே வாட்சைப் பார்த்துக் கொண்டு காத்திருந்தார். ரெய்ஸா கணப்பு அருகில் அமர்ந்து நாவல் படித்துக் கொண்டிருந்தாள்.

சரியாக ஆறு மணி ஆனபோது.....

டெலிபோன் கிக், கிக் என்றது. எடுக்காமல் அதையே பார்த்துக் கொண்டு எத்தனை முறை ஒலிக்கிறது என்று எண்ண ஆரம்பித்தார். ஆறு முறை ஒலித்துவிட்டு அது நின்றதும் அவசரமாக எழுந்தார்.

"இதோ வருகிறேன் ரெய்ஸா" என்றவர் ஜன்னல் வழியாக மழை பெய்வதைப் பார்த்து, ரெய்ன் கோட் அணிந்து கொண்டு புறப்பட்டார்.

"உங்கள் நடவடிக்கைகள் புரியவில்லை. இரண்டு, மூன்று நாட்களாக போன் ஒலித்தால் எடுப்பதில்லை. எண்ணுகிறீர்கள். நின்று விடுகிறது. சில சமயம் புறப்படுகிறீர்கள்."

"வந்து சொல்கிறேன்."

லிஃப்டில் இறங்கி வந்து, சாலையில் நடந்து, பப்ளிக் டெலிபோன் ஸ்டாண்டை தெருமுனையில் அடைந்து, உள்ளிருந்தவர் வரும்வரை காத்திருந்து, பிறகு உள்ளே செல்வதற்கு முன் தன்னை யாராவது தொடர்கிறார்களா என்று பார்த்து விட்டுச் சாத்திக் கொண்டார்.

**LIBERTY** மற்றும் **IN GOD WE TRUST** என்று பொறித்த செண்ட் டைம் காயினைப் பயன்படுத்தி, "ஹலோ, சொல்." என்றார்.

"சார், என் மனைவிக்கு அபார்ஷன் ஆகியிருக்கிறது. செய்தி வந்தது. போய்ப் பார்க்கப் பிரியப் படுகிறேன்."

"ஸ்ட்ரிக்ட்லி நோ. அந்தப் பையனை விட்டு ஒரு அங்குலம் கூட அப்படி, இப்படி நீ நகரக் கூடாது. எவ்வளவு பெரிய பொறுப்பான காரியத்தை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். இன்னும் நான்கே நாட்கள். பொறுத்துக் கொள் வெஸ்லி. உன் மனைவியைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாதே. நான் போய்ப் பார்க்கிறேன். எந்த ஹாஸ்பிடல்?"

"மவுண்ட் சினாய். அங்கு..."

"அதெல்லாம் நான் விசாரித்துக் கொள்கிறேன். பையன் எப்படி இருக்கிறான்?"

"துப்பாக்கி முனையில் ஒழுங்காகச் சாப்பிடுகிறான். அழுகிறான். நீங்கள் சொன்னபடி மற்றும் காலைக் கடன்களின் நேரம் தவிர அவனை உறக்கத்தில் ஆழ்த்தி விடுகிறேன்."

"வெரிகுட். நாளை இதே நேரம் நானே பேசுகிறேன்." பார்க்கர் ஸ்மித் வெளிப்பட்டு தன் வீட்டிற்கு வந்து, ரெய்ஸாவை தனியறைக்கு அழைத்து வந்து கதவைச் சாத்தி, எலெக்ட்ரானிக் கருவியால் அந்த அறையில் ஒட்டுக் கேட்கும் கருவிகள் ஏதாவது பொருத்தப்பட்டுள்ளதா என்று சோதித்துப் பார்த்து திருப்தியடைந்த பிறகு சொன்னார்:

"ரெய்ஸா, அந்த போன் மணி ஒலிப்பது எனக்கும், வெஸ்லிக்கும் இடையே உள்ள சங்கேத உடன்பாடு. அதை ஐந்து முறை ஒலிக்க வைத்து தொடர்பை நிறுத்தி விட்டான் என்றால், பிரச்சனை எதுவும் இல்லை என்று அர்த்தம். ஆறு முறை ஒலித்தால் என்னோடு பேச விரும்புகிறான் என்று அர்த்தம். இப்போது நான் போய் பப்ளிக் கால் பேசிவிட்டு வந்து விட்டேன்."

"என்ன பிரச்சனையாம்?"

"அவன் மனைவிக்கு மவுண்ட் சினாய் ஹாஸ்பிடலில் அபார்ஷன் ஆகிப் படுத்து இருக்கிறாளாம். நீ கவலைப் படாதே என்று வந்து விட்டேன். நான் போவது கூட எனக்கு உசிதமாகப் படவில்லை. காலையில் நீ போய்ப் பார்த்து விட்டு வா ரெய்ஸா."

"அதெல்லாம் சரி, பேசினபடி ஜோ அண்ட் ஜோவிடம் ஒப்படைக்காமல் இதெல்லாம் என்ன விபரீத விளையாட்டுக்கள்? எனக்குப் பதட்டமாக இருக்கிறது."


"உன் கணவனுக்கு விபரீதம் என்பது ஐஸ்கிரீம். இது இன்றைக்குத்தான் உனக்குத் தெரியுமா ரெய்ஸா? ஜோ அண்ட் ஜோவிடம் நான் நடிக்க வேண்டிய கடைசி காட்சி ஒன்று பாக்கி உள்ளது. நான் வெஸ்லியைப் பார்த்துப் பிடித்து விட்டதாகவும், ஆனால் சரவணகுமார் இறந்து போய்விட்டதாகவும் ஒரு கடைசி காட்சி. அதைத் தத்ரூபமாக அமைக்கத்தான் இந்தத் தாமதம். ஜோ அண்ட் ஜோவை நம்ப வைத்த பிறகு சி.ஐ.ஏவை தொடர்பு கொண்டு ரகசியமாக பையனை ஒப்படைக்கப் போகிறேன். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு நான் எதுவும் செய்யத் தயார்."

"இதை நேரடியாக ஜோ அண்ட் ஜோவிடம் பேசி முடிவு செய்து கொள்ளக் கூடாதா?"


"எந்த மடையன் ஒப்புக் கொள்வான்? அப்படியே ஒப்புக் கொண்டாலும் என்னை ரகசியமாகத் தீர்த்துக் கட்ட முடிவு செய்து விடுவார்கள்."

*(தொடர்ந்து வரும்)*


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஜி.சேகர்
வயது: 28
முகவரி: மிஷன் வீதி, அக்கரைப்பற்று-08.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.




பெயர்: எம். ரிஸ்வான்
வயது: 23
முகவரி: 58/1, புளுகொஹதென்னை, அக்குறணை-06.
பொழுது போக்கு: வழமையானவை.




பெயர்: ஏ. ராஜா
வயது: 25
முகவரி: P.O.BOX-60429, AL-KHOR, DOHA-QATAR.
பொழுது போக்கு: பேனாநட்பு, கதைப்புத்தகம், டி.வி.



பெயர்: சேத்தி சல்மா
முகவரி: AREA-08, STREET-07, HOUSE,-01, AL-ANDALUS, KUWAIT.
பொழுது போக்கு: டி.வி., பத்திரிகை.



பெயர்: கே. சந்திரன்
வயது: 24
முகவரி: நெலுவ தோட்டம், பண்டாரவளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: முகம்மது அஷ்ரப்
வயது: 43
முகவரி: போஸ்ட்: குண்டூர்-676320, வழி: தய்யால மலப்புரம், கேரளா, இந்தியா.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். சிவா
வயது: 20
முகவரி: 1, புறாக் சைட் பஸார், ஆல்கரனோயா, நுவரெலியா
பொழுது போக்கு: சினிமா, தொலைக்காட்சி.

பெயர்: முஹமட் அமீர்
வயது: 18
முகவரி: 30, 15ம் ஒழுங்கை, வான் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: என். சத்தியராஜன்
வயது: 25
முகவரி: 3400, EGLINTON AVE EAST, APT-1112, SCARBOROUGH, ONTARIO, M1J-2H8, CANADA.
பொழுது போக்கு: டி.வி., கிரிக்கெட், புத்தகம்.

பெயர்: எம். ஜாபீர்
வயது: 24
முகவரி: P.O.BOX-1597, JEDDAH-21441, K.S.A.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல்.

பெயர்: எஸ். மோகன்
வயது: 19
முகவரி: 14/92, முதலாம் மாடி, பேஸ்லைன் வீதி, பொரளை.
பொழுது போக்கு: வழைமையானவை.

பெயர்: முஹமட் லாபீர்
வயது: 18
முகவரி: 763/ஏ, கே.கே. ரோட், சாய்ந்தமருது-17.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், டி.வி.

# தாய்

## மக்சிம் கார்க்கி

### 58

"இவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பது எரிச்சலாயிருக்கிறது" என்றான் இக்நாத். "இவன் பேச்சை ஒரு தடவை கேட்டுவிட்டாலே அதை மறக்க முடியாது; மறக்க முடியாத அதே விஷயத்தையே அவன் திருப்பித் திருப்பித் தினம் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறானே."

"ஆனால், இந்த ஒரே விஷயத்தில் சகல விஷயங்களுமே, வாழ்கை முழுவதுமே அடங்கிப் பொதிந்திருக்கிறது!" என்று சோகத்தோடு கூறினான் ரீபின். "அதைப் புரிந்து கொள்ளத்தான் வேண்டும். நானும் இந்தக் கதையை எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். இருந் தாலும் கூட, எனக்குச் சமயங்களில் சில சந்தேகங்கள் கூடத் தோன்றுவதுண்டு. பணக்காரர்களையும் ஏழைகளையும்,- எல்லோரையுமே ஒரு மாதிரியாகவே எண்ணிப் பார்ப்பதற்கும், மனிதனது தீய குணங்களையும் முட்டாள்தனங்களையும் நம்ப விரும்பாதிருப்பதற்கும் சில சந்தர்ப் பங்கள் ஏற்படக்கூடும். பணக்காரர்கள் கூடத் தம்மை மறந்து செல்ல முடியும்! சிலர் பசியால் குருடாகிப் போகிறார்கள்; சிலர் தங்கத்தால் குருடாகிப் போகிறார்கள். அது தான் சங்கதி! 'ஓ மனிதர்களே, சோதரர்களே! உதறியெழுந்து வாருங்கள், தன்னலம் கருதாது நேர்மையோடு சிந்தியுங்கள்' என்று நினைக்கத் தோன்றும்."

அந்த நோயாளி அசைந்து கொடுத்தான், கண்களைத் திறந்தான், பிறகு தரையில் படுத்துவிட்டான். யாகவ் வாய் பேசாது எழுந்திருந்து வீட்டிற்குள் சென்று ஒரு கம்பளிக் கோட்டைக் கொண்டு வந்து அந்த நோயாளியைப் போர்த்தி மூடினான்; மீண்டும் சோபியாவுக்கு அருகில் சென்று உட்கார்ந்து கொண்டான்.

குதூகலம் நிறைந்து கும்மாளியிடும் நெருப்பு தன்னைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த கரிய உருவங்களை ஒளிரச் செய்தது. நெருப்பின் இரைச்சலோடும், வெடிக்கும் சத்தத்தோடும், அந்த மனிதர்களின் குரல்களும் சேர்ந்து கலந்து ஒலித்துக் கொண்டிருந்தன.

உயிர் வாழும் உரிமைக்காகச் சகல தேசத்திலுமுள்ள மக்கள் அனைவரும் நடத்துகின்ற போராட்டங்களைப் பற்றியும், ஜெர்மனி தேசத்தில் நடைபெற்ற விவசாயிகளின் எழுச்சிகளைப் பற்றியும், அயர்லாந்து நாட்டு மக்களின் பஞ்ச நிலையைப் பற்றியும், இடைவிடாது அடிக்கடி நடத்தப் படும் பிரெஞ்சுத் தொழிலாளர்களின் சுதந்திரப் போராட்டங்களைப் பற்றியும் சோபியா அவர்களுக்கு எடுத்துச் சொன் னாள்.

இருள் திரை படிந்து கவிந்த அந்தத் தோப்பு வெளியிலே, மரங்கள் அடர்ந்து செறிந்த அந்த வெட்டவெளியிலே, இருண்ட வானமே மேல் முகடாக விளங்கும் அந்த அத்துவானப் பிரதேசத்தில், நெருப்பால் ஒளிபெற்று, வியப்பும் வெறுப்பும் நிறைந்த நிழலுருவங்கள் சூழ்ந்த அந்த இடத்திலே உண்டு கொழுத்து உறங்கும் பேராசைக்காரர்களின் உலகை அசைத்து ஆட்டி உலுப்பிய சம்பவங்களைப் பற்றிய விவரங்கள் உயிர்பெற்று ஒலித்தன. சத்தியத்துக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்ட வீரர்களின் திருநாமங்கள் உச்சரிக்கப்பட்டன; போராட்டங்களால் களைத்து, போராட்டங்களால் ரத்தம் சிந்தித் தோய்ந்த ஒவ்வொரு நாட்டு மக்களும் வரிசை வரிசையாக அங்கு வந்து சென்றார்கள்.

அந்தப் பெண்ணின் அடங்கிய குரல் மெதுவாக ஒலித்தது. கடந்த காலத்தின் எதிரொலிபோன்ற அந்தக் குரல் அவர்களது நம்பிக்கைகளைக் கிளறிவிட்டது; தீர்மானங்களைத் தூண்டிவிட்டது. பிற தேசங்களிலுள்ள தங்கள் சகோதரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்டவாறே அந்த மனிதர்கள் அசையாது வாய்பேசாது உட்கார்ந்திருந்தனர். உலகத்தின் சகல மக்களும் எந்த ஒரு புனித லட்சியத்துக்காகப் போராடுகிறார்களோ, அந்த லட்சியம்-சுதந்திரத்துக்காக நடைபெறும் இடையறாத முடிவற்ற போராட்டம்- அவர்களுக்கு வரவரத் தெளிவாகியது. அந்தப் பெண்ணின் மெலிந்த வெளுத்த முகத்தைப் பார்க்கப் பார்க்க அந்தப் போராட்டமும் போராட்ட லட்சியமும் அவர்களுக்குப் புரிந்து வரலாயின. அவர்கள் தங்களது சொந்த எண்ணங்களையும், விருப்பங்களையும், தம்மால் அறிய முடியாத வேற்று இன மக்களிடம் கண்டார்கள். அந்த மனிதர்களிமிருந்து தங்களை ஒரு கரிய ரத்தம் தோய்ந்த கடந்த காலத்தின் இருள்படிந்த திரைபிரித்து நிற்பதாகவும் கண்டார்கள்; தங்களது மனத்தாலும் இதயத்தாலும் அவர்கள் இந்தப் பரந்த உலகம் முழுமையோடும் தோடர்பு கொண்டார்கள். ஒரு புதிய ஒளி நிறைந்த் ஆனந்த வாழ்க்கைக்காக, தங்களது ரத்தத்தையே சிந்தி அர்ப்பணித்து, உலகத்திலே சத்தியத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற உறுதியான கொள்கைக்காக, வெகுகாலமாக ஒன்றுபட்டு நின்று, அந்த லட்சியத்தின் வெற்றிக்காக சகலவிதமான பெருந்துன்பங்களையும் தாங்கிச் சகித்து நின்ற பல்வேறு நாட்டு மக்களினத்திலும் அவர்கள் தங்கள் தோழர் களைக் கண்டார்கள். சகல மக்கள் மீதும் உளப்பூர்வமாகத் தோன்றும் ஒரு புதிய பந்தபாச உணர்ச்சி சுடர்விட்டு எழுந்தது; உலகத்துக்கே ஒரு புதிய இதயம்- எல்லா வற்றையும் ஒன்றாக இணைக்க வேண்டும், எல்லா வற்றையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற தீராத ஆவலுணர்ச்சியால் துடிதுடிக்கும் ஒரு புதிய இதயம் பிறந்துவிட்டது!

"சர்வ தேசங்களிலுமுள்ள சகல தொழிலாளர்களும் நிமிர்ந்து நின்று, 'போதும் போதும்! இது போன்ற வாழ்க்கை இனி எமக்குத் தேவையில்லை' என்று கோஷித்து விம்மும் காலம் ஒரு நாள் வரத்தான் போகிறது!" என்று நிச்சய தீர்க்கத்தோடு கூறினாள் சோபியா. "தங்களது பேராசையின் பலத்தைத் தவிர, வேறு எந்தவிதமான நிஜ பலத்தையும் பெற்றிராத இன்றைய உலகின் 'பலசாலிகள்' அன்றைய தினதில் அழிக்கப் படுவார்கள். இந்த உலகம் அவர்களது காலடியைவிட்டு நழுவி மறையும். அவர்களுக்குத் தப்பிப் பிழைப்பதற்கு எந்த உதவியும், எந்த மார்க்கமும் இருக்கவே இருக்காது!"

"அவ்வாறு நேரப்போவது உறுதி!" என்று தலை தாழ்த்திச் சொன்னான் ரீபின். "நாம் மட்டும் நம்மிடமுள்ள சகலவற்றையும், நம்மையுமே கொடுக்க, தியாகம் செய்யத் தயாராயிருந்தால், நம்மால் செய்ய முடியாத காரியம் எதுவுமே இருக்க முடியாது!"

தாய் தன் புருவங்களை உயர்த்தி, உதடுகளிலே வியப்பு நிறைந்த ஆனந்தப் புன்னகை தவழ, அந்தப் பேச்சைக் கேட்டாள். இயற்கைக்கு முற்றும் பொருந்தாதது போலத் தோன்றிய சோபியாவின் குணம்-எதையுமே அளவுக்கு மீறிய அநாயாசத்தோடு வெடுக்கென்று தூக்கியெறிந்து வெட்டிப் பேசுவதாகத் தோன்றிய அவளது குணம்-அவள் கூறிய ஆர்வமிக்க, தங்கு தடையற்ற கதையின் போக்கிலே அழிந்து மறைந்து போய்விட்டது என்பதைத் தாய் கண்டு கொண்டாள். அன்றைய இரவின் அமைதியும், நெருப்பின் விளையாட்டும், சோபியாவின் முகமும் அவளுக்குப் பிடித்துப்போய்விட்டன; ஆனால் அவளுக்கு மிகவும் பிடித்துப் போன விஷயம், அந்த முஜீக்குகள் அனைவரும் காட்டிய பரிபூரண மான ஈடுபாட்டு உணர்ச்சிதான்!



அவர்கள் அசைவற்று உட்கார்ந்திருந்தார்கள். சர்வதே சங்களோடும் தங்களை இணைத்துப் பிணைக்கும் பட்டுக் கயிறு போன்ற அந்தக் கதை இடையிலே அறுந்து விடக் கூடாதே என்ற பயமும் அந்த இடை யறாத கதையின் போக்குத் தடைபட்டு நின்றுவிடக் கூடாதே என்ற அங்கலாய்ப்புமே அவர்களை அப்படி அசையாதிருக்கச் செய்தன. இடையில் மட்டும் அவர்களில் யாராவது ஒருவன் எழுந்திருந்து அரவமே இல்லாமல் ஒரு விறகுக்கட்டையை எடுத்து நெருப்பில் மெதுவாகப் போடுவான். உடனே தீப்பொறிகள் தெறித்துச் சிதறும்; புகைச் சுழல் மண்டியெழும்பும். உடனே அவன் தன் கைகளை வீசி அந்தத் தீப்பொறிகளை விலக்குவான்; அந்தப் பெண்கள் பக்கமாகப் புகை மண்டாதபடி விசிறி விடுவான்.

இடையிலே யாகவ் எழுந்திருந்து அமைதியாகச் சொன்னான்:

"கொஞ்ச நேரம் பேச்சை நிறுத்திவையுங்கள்".

இப்படிக் கூறிவிட்டு அவன் வீட்டுக்குள்ளே ஓடிப்போய் சில துணி மணிகளைக் கொண்டு வந்தான்; பிறகு அவனும் இக்நாத்துமாக, அந்தத் துணிகளைத் தங்கள் விருந்தாளிகளின் தோள்மீதும், கால் மீதும் போர்த்தி மூடினார்கள். பிறகு சோபியா மீண்டும் பேசத்தொடங்கினாள். தங்களது வெற்றி தினத்தைப் பற்றிய நினைவுச் சித்திரத்தை வருணித்தாள்; தமது சொந்த பலத்தின்மீது அவர்கள் நம்பிக்கை விசுவாசம் கொள்ளும்படி தூண்டிவிட்டாள்; உண்டு கொழுத்து மதர்த்துப்போன உதவாக்கரை மனிதர்களின் முட்டாள்தனமான நப்பாசைகளையெல்லாம் பூர்த்தி செய்து வைப்பதற்காக, தங்களது உழைப்பையும் வாழ்வையும் விழலுக்கு இறைத்துக் கொண்டிருக்கும் உலக மக்களோடு, 'இவர்களும் ஒன்று கலந்து ஏகத்தன்மை பெற வேண்டும் என்ற அந்தரங்க உணர்ச்சியைக் கிளறித் தூண்டிவிட்டாள். சோபியாவின் வார்த்தைகளால் தாய் உணர்ச்சி வசப்பட்டு விடவில்லை. ஆனால், அவள் சொல்லிய விவரங்களால் அவர்கள் அனைவரது உள்ளத்திலும் எழும்பிய ஆழ்ந்த உணர்ச்சி தாயின் உள்ளத்திலும் நிறைவைப் பொழிந்தது; அன்றாட உழைப்பினால் அடிமைப் பட்டுத் தலையிட்டுக் கிடக்கும் மக்களுக்கு நேர்மையான சிந்தனையையும், சத்தியத் தையும், அன்பையும் பரிசாகக் கொண்டு வந்து தரவேண்டும் என்ற காரணத்துக் காக, தங்களது வாழ்க்கையையே துயரத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாக்கி அர்ப்பணித்தவர்களின்மீது ஒரு மனப்பூர்வமான நன்றியுணர்ச்சி அவள் உள்ளத்திலே நிரம்பி நின்றது.

"கடவுள் அவர்களுக்கு அருள் செய்யட்டும்" என்று தன் கண்களை மூடித்தனக்குள்ளாகச் சிந்தித்துக் கொண்டாள் தாய்.

அருணோதயப் பொழுதில்தான் களைத்த ஓய்ந்துபோன சோபியா தன் பேச்சை நிறுத்தினாள்; நிறுத்திவிட்டு, தன்னைச் சுற்றி சிந்தனையும் பிரகாச மும் தேன்றும் முகங்களோடு இருப்பவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

"நாம் புறப்படுவதற்கு நேரமாகி விட்டது" என்றாள் தாய்.

"ஆமாம்" என்றாள் சோபியா.

அந்த இளைஞர்களில் ஒருவன் உரத்துப் பெருமூச்செறிந்தான்.

"நீங்கள் போவது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது" என்று வழக்கத்துக்கு மாறான மெல்லிய குரலில் சொன்னான் ரீபின்; "நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள். அது ஒரு பெரிய விஷயம்-மக்களுக்கு ஒருமையுணர்ச்சியை ஊட்டுவது பெரிய விஷயம்! லட்சோப லட்சமான மக்களும் நாம் என்ன விரும்புகிறோமோ, அதையே விரும்புகிறார்கள் என்பதை அறிய நேரும்போது, அந்த உணர்ச்சி நம் இதயத்தில் அன்புணர்ச்சியைப் பெருக்குகிறது. அன்புணர்ச்சியே ஒரு மாபெரும் சக்திதான்!"

"ஆமாம். நீ அன்பு செய். அவன் உன் கழுத்தை வெட்டட்டும்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே எழுந்தான் எபீம். "சரி, மிகயீல் மாமா, யார் கண்ணிலும்படுவதற்கு முன்பே இவர்கள் போய் விடுவதுதான் நல்லது. அப்புறம் நாம் இந்தப் பிரசுரங்களைப் பரப்பிவிடத் தொடங்கியவுடனேயே அதிகாரிகள் இவற்றைக் கொண்டு வந்தவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிக்க முனைவார்கள். 'இங்கே வந்தார்களே, அந்த இரு யாத்திரிகர்கள், ஞாபகமிருக்கிறதா?' என்று பிறகு யாராவது கண்டவர்கள் சொல்லித் தொலைக்கப் போகிறார்கள்...."

"அம்மா, நீ எடுத்துக்கொண்ட சிரமத்துக்கு நன்றி" என்றான் ரீபின். "உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குப் பாவெலைப் பற்றியே ஞாபகம் வருகிறது; நீ எவ்வளவு நல்ல சேவை செய்கிறாய்!"

இப்போது ரீபின் சாந்த குணத்தோடு இருந்தான்; மனம் விட்டுப் புன்னகை புரிந்தான். காற்று குளிர்ந்து வீசியது. இருந்தாலும், அவன் கோட்டுக்கூடப் போடாமல், சட்டையைக்கூடப் பொத்தானிட்டு மூடாமல், திறந்த மார்போடு நின்றான். அவனது பெரிய தோற்றத்தைப் பார்த்தவாறே தாய் அன்போடு கூறினாள்:

"நீ உன் உடம்பில் ஏதாவது போர்த்திக் கொள். ஒரே குளிராயிருக்கிறது."

"என் நெஞ்சுக்குள்ளே நெருப்பு எரிகிறதே" என்றான் அவன். அந்த மூன்று இளைஞர்களும் நெருப்பைச் சுற்றி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்; அவர்களது காலடியிலே அந்த நோயாளி கம்பளிக் கோட்டினால் போர்த்தப்பட்டுக் கிடந்தான். வானம் வெளிறிட்டது. இருட் படலம் விலகிக் கரைந்தது. சூரியனின் வரவை நோக்கி இலைகள் படபடத்தன.

"நல்லது. நாம் விடைபெற்றுக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறிக் கொண்டே தன் கரத்தை சோபியாவிடம் நீட்டினான் ரீபின். "சரி, நகரில் உங்களை எங்கு கண்டு பிடிப்பது?"

"நீ என்னைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்" என்றாள் தாய்.

அந்த இளைஞர்கள் மூவரும் மெதுவாய் சோபியாவிடம் வந்து, அசடு வழியும் நட்புரிமையோடு அவளது கரத்தைப் பற்றிக் குலுக்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு அருமையான, அன்பான, அந்தரங்கமான இன்ப உணர்ச்சிக்கு ஆளானார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது, இந்த உணர்ச்சி அதனது பதுமையினால் அவர்களைக் கலங்கச் செய்வதுபோலத் தோன்றியது. அந்த இளைஞர்கள் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் தூக்கம் விழித்துச் சிவந்து போன தம் தண்களால் சோபியாவைப் பார்த்துப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டார்கள்.

"போவதற்கு முன்னால், கொஞ்சம் பால் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டான் யாகவ்.

"பால் இருக்கிதா?" என்றான் எபீம்.

"இல்லை" என்று கூறிக்கொண்டே, தலை யைத் தடவினான் இக்நாத்; "நான் அதைச் சிந்திவிட்டேன்."

அவர்கள் மூவரும் சிரித்தார்கள்.

அவர்கள் பாலைப் பற்றித்தான் பேசினார்கள்; என்றாலும் அவர்கள் வேறு எதைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருப்பதாக, தன்மீதும் சோபியா மீதும் மனம் நிறைந்த பரிவோடும் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாகத் தாய்க்குத் தோன்றியது. இந்த நிலைமை சோபியாவின் உள்ளதைத் தொட்டுச் சிறு குழப்பத்தை உண்டாக்கி விட்டது. அவளும் அந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க முடியாமல், குன்றிப்போனாள். அவளால் பின்வரு மாறுதான் சொல்ல முடிந்தது:

"நன்றி, தோழர்களே!"

அந்த இளைஞர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் தங்களைப் பார்த்துச் சொன்ன அந்த வார்த்தை ஓர் ஊஞ்சலைப் போன்று கொஞ்சங்கொஞ்சமாக ஆகாயத்தில் தூக்கிச் செல்வதுபோல் அவர்களுக்குப் பட்டது.

அந்த நோயாளி திடீரெனப் பலத்து இருமினான். அணைந்து கொண்டிருந்த நெருப்பில் கரித்துண்டுகள் கனன்று மினுமினுக்கவில்லை.

(தொடர்ந்து வரும்)

---

# பட்ஜெட்

## கனகசபை தேவகடாட்சம்

**டாண்!** என்று 12 மணி அடித்தது தான் தாமதம்! அலுவலக வேலைகள் எல்லாம் மூடிவைத்துவிட்டு, சைக்கிளை தள்ளிக்கொண்டு மதிய உணவுக்காக புறப்பட்டான் சிவலிங்கம். ஆவணி யோடு புரட்டாதி கலந்த காலம். உச்சி வெயில் அவன் பாதி மொட்டையை பதம் பார்த்துக் கொண்டிருந்தது. வெளியில் அரச உத்தியோகம் என்று பெயர்! சம்பளத்தை நான்கு நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாத கௌரவ ஏழை. காதலித்து மணம் செய்து கொண்டதால், சீதனப் பாக்கியத்தை இழந்தவன். அவன் உழைப்பிலே காலத்தை தள்ளும் மூன்று பிள்ளைகளும், மனைவியும் கொண்ட குடும்பம்.

இந்த நிலையில் காணி வாங்கி வீடு கட்டுவதென்பது கனவிலும் எண்ண முடியாது. இந்தக் காரணம் தான் உவர் மலையில் அத்துமீறி 'ஒரு பெரியவரின்' காணியை பிடிக்க வேண்டியிருந்தது. உவர்மலை ஏற்றத்தில் சைக்கிளை தள்ளிக் கொண்டு நடந்தான் சிவலிங்கம். இன்னும் கொஞ்சத் தூரம் தான் வீட்டிற்கு! வேகத்தை அதிகரித்தான். மீண்டும் ஒன்றரை மணிக்குள் அலுவலகத்தில் நிற்க வேண்டும். உண்ட பாதி, உண்ணாப் பாதியாக ஓட வேண்டும். உச்சி வெப்பம் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது. அந்த வெப்பத்திலே, அவன் மூளை இம்மாத சம்பள பட்ஜட்டை நெறிப்படுத்திக் கொண்டிருந்தது. 'இம் முறையாவது மனைவிக்கு ஒரு சேலை எடுத்தாக வேண்டும். வசதியானால் அதே பிடவைக் கடையில் பிள்ளைகளுக்கும் எனக்கும் உடுப்பெடுக்க வேண்டும். அரை வாசிக்கு பணம் கொடுத்து, மிகுதிக்கு வரும் மாத சம்பளத்தைக் காட்டலாம். சம்பளத்துடன் சமாளிப்பது என்பது முடியாத காரியம் தான். என்னைப் போல் நடுத்தர அரச ஊழியன், அதுவும் 'ஒத்த உழைப்பு'க்காரன்...... முடியாது! அப்படி எவனாவது வாழ்ந்து காட்டினால்.... அதை 'கின்னஸ்' புத்தகத்திலும் எழுதி, 'நோபல்' பரிசும் வழங்கலாம்.'

எப்படித் தான் 'பட்ஜட்' போட்டாலும், துண்டு விழும் தொகை அதிகரித்த வண்ணமே இருந்தது- சிவலிங்கத்தின் சம்பளத்தில்!

மெதுவாக படலையை திறந்து கொண்டு நுழைந்தான் சிவலிங்கம். எப்படி மெதுவாக திறந்தாலும் 'வருகையை' வீட்டில் உள்ளவருக்கு அறிவிக்க அந்த உடைந்த தகர 'கேட்' மறுப்பதே இல்லை.

சைக்கிளை சாத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்தான்! மேசையில் சாப்பாடு ஆயத்தமாக இருந்தது. கையை கழுவிட்டு சாப்பாட்டிற்கு முன்னால் அமர்ந்தான்.

"இஞ்சேருங்க! மூண்டு காட் வந்திருக்கு!" என்று கூறியவாறு கடிதங்களை சிவலிங்கத்திடம் நீட்டினாள் அவன் மனைவி. அந்த



அழைப்பிதழ் மடல்களை பார்த்ததும் தலை சுற்றியது சிவலிங்கத்திற்கு! அவன் 'பட்ஜட்' கோட்டை சரிந்து கொண்டிருந்தது.

இரண்டு திருமண வீடுகள்! ஒரு பிறந்த நாள் வீடு! அவன் அரச ஊழியனல்லவா? கட்டாயம் அவைகளுக்கு போய்த்தான் ஆக வேண்டும்.

'காட்'டைக் கொடுத்து சிவலிங்கத்தின் 'மூட்'டைக் குழப்பிவிட்டாள் அவன் மனைவி. நாடியில் கையை கொடுத்து, சிந்தித்த வண்ணம் இருந்த சிவலிங்கத்திடம் "ஒரு மணியாகுது! இன்னும் சாப்பிடாம என்ன யோசிக்கிறீங்க?" என்றாள் மனைவி. "ஒன்று மில்லை! கல்யாண வீட்டிற்கு போறதெண்டால் காசும் போடவேண்டும்; நல்ல உடுப்பும் வேணும்" என்றவாறு இரண்டு 'வாய்' சோற்றை அள்ளி எறிந்து விட்டு வேலைக்குத் கிளம்பினான் சிவலிங்கம்.

'பட்ஜட்'டை எண்ணப் பசி பறந்து விட்டது.

சைக்கிளை மெதுவாக தள்ளி படலை வரைக்கும் வந்து சிவலிங்கம், ஏனோ மீண்டும் ஒரு தடவை அந்த அழைப்பிதழ்களைப் பார்க்க வேண்டும் என ஆவல் தூண்டியதால், கைக்கிளை படலையில் சாத்திவிட்டு வந்து, அழைப்பிதழ்களை பார்த்தான். அவன் எதிர்பார்த்தற்கு மாறாக இருந்தது.

வைபவம் நடைபெறும் சுபவேளை மதியம் இரண்டு மணிக்குப் பின்னர் தான் இருந்தது. 'மத்தியான சாப்பாடு' என்றாலும் இலாபமாக இருக்கும் என எண்ணிய அவனுக்கு ஏமாற்றம். இரண்டும் கெட்ட நிலை. இப்போது அவனது கைக்கிள் அலுவலகத்தை நோக்கி மிக வேகமாகச் சென்றது.

எதிர்பார்புகளும் ஏமாற்றங்களும் அவனது சைக்கிளுக்கு வேகத்தை கொடுத்துக்கொண்டிருந்தது. இவைகளை எல்லாம் எப்படி மற்றவர்களுக்கு புரிய வைப்பது? சிந்தித்துக் கொண்டே அலுவலகத்தை அடைந்தான் சிவலிங்கம். அந்த நிகழ்வை உடனடியாக ஒரு கதையாக எழுதி ஓர் ஜனரஞ்சக பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு 'இன்று வரை' காத்துக் கொண்டிருக்கிறான்-அந்த பாதிப்படைந்த சிவலிங்கம்!

# மரங்கொத்திகள்

காதல் அவனுக்கு பொழுதுபோக்கா யிருந்தது; விளையாட்டாயிருந்தது; காதலை அவன் வெறும் கேளிக்கையாக...கேலியாகக் கருதினான். அவன் தான் ரகு.

வருடத்துக்குள் ஆறேழு காதலிகள்; கண்டதும் காதல் பிறக்கும்; கண்ணால் கவர்வான்; கனிவாய்ப் பேசுவான்; கடிதம் கொடுப்பான்; கவிதைகள் கூறி கன்னம் சிவக்க வைப்பான். கடைசியில் அவளைவிட அழகியொருத்தியைக் கண்டு விட்டால் மெது வாகக் கழன்று விடுவான்.

அவனைப் பற்றிய கனவுகளை வளர்த்து, கற்பனையில் மிதந்த காதலி கண்ணீரில் மூழ்க, அவன் ஆறுதல் சொல்வ தாய் நடிப்பான்.

"அம்மா ஹார்ட் பேஷண்ட். அவங்களுக்கு நானே எமனாகக் கூடாது. நிச்சயமா நம்ப காதல்ல அம்மாக்கு விருப்பமில்ல. அதனால... ஒரு தாயின் உயிர்ப்பிச்சையா நெனச்சு என்னை மறந்திடு....." என உருகிக் கலங்குவதாய் நழுவி விடுவதில் மன்னன். நன்றாக நடிப்பான்.

அவனது செய்கைகளுக்கு ஆதரவானது அவனது அழகு, கம்பீரம், மென்மை கலந்த கண்கள், மாயவலை வீசுவதில் வல்ல சாமர்த்திய பேச்சு. பெண்களைக் கவர்வதில் வியப்பென்ன?

"ப்சு.... நானென்ன செய்வதாம் என்னைக் கண்டு ஏமாறும் பெண்களுக்கு புத்தி வேணும். என் ராசி இப்படி! நல்லா ஜொலியா இருக்கற மட்டும் இருந்துட்டா என்ன? இருபதில் ஆடாமல் அறுபதிலா ஆடுவது?" எனக் கேள்வி கேட்கும் மனசாட்சி யுள்ள நண்பர்களுக்கு அலட்சியமாகப் பதி லிறுப்பான்.

இனிமையான பாடலொன்றின் வரிகளை முணுமுணுத்தவாறு பஸ்தரிப்பில் கம்பீரமாய் நின்றிருந்தவன் மனதுக்குள் ஒரே சந்தோஷக் குமிழிகள் பொங்கின. கண்கள் பரபரவென அலை பாய்ந்தன. ஆமாம்! மூன்று நாட்களின் முன்னர் தற்செயலாய்ச் சந்தித்த பேரழகி யொருத்தியின் காதல் வரம் கிடைத்திட்ட களிப்பு.

இதுவரை அவன் காதலித்த பெண் களில் இல்லாத கவர்ச்சி, அழகு, இனிமை. ரகு மயங்கிப் போனான். உண்மையிலேயே அவளைக் காதலிக்கத் தொடங்கியது அவன் மனது.

உருண்டோடிய மாதங்களில் அவள் அவனது உணர்வுகளில் ஒன்றிப் போனதாய் உணர்ந்தான். இதுவரை காலங்களில் அவன் இதயத்தில் தோன்றாத உண்மை அன்பு ஊற்றெடுத்தது. சாந்தமான அவள் குணம், இனிமையான பண்புகள்– ரகு தன் மனம் முழுக்க அவளை நிரப்பிக் கொண்டான்.

"என் உயிருக்குயிரா நான் அவளை நேசிக்கிறேண்டா. அவளில்லாம ஒரு கணம் கூட வாழ முடியும்னு தோணல," என ஆச்சரியப்பட்டு விழி விரித்த நண்பர்களிடம் சொன்னான் ரகு.

நண்பன் திருந்தியதில் அவர்களுக்கு மகிழ்ச்சியே. என்றாலும் அதை நிச்சயப் படுத்த முடியவில்லை. நாளைக்கே இன் னொருத்தியின் பின்னால் ஓடி விட்டாலும் சொல்ல முடியாதென உணர்ந்து பேசாம



லிருந்து விட்டார்கள்.

□□□

தனியார் வாகனமொன்றில் ஏகப்பட்ட சனக்கூட்டம். ரகுவோ உட்கார்ந்திருந்தான். இடையில் அவனது காதலி ஏறக் கண்டதும் ரகுவுக்குள் கோடி மலர்கள் மலர்ந்தன. அவள் அவனைக் காணவில்லை. நெரிசலில் முண்டியடித்துக் கொண்டிருந்த அவளை ஒருவாறு தன்னை நோக்கச் செய்தான். "வா...இடம் தருகிறேன்" என சைகையால் அறிவிக்க அவள் "வேண்டாம் இந்தாருங்கள்" என கையிலடுக்கியும் தோளில் தொங்கவும் விட்டிருந்த ஏராளமான பொருட்களை– பைகளை அவனிடம் கொடுத்து விட்டாள்.

ரகுவுக்கு சப்பென்றிருந்தது. 'இவ்வளவு சனத்தை எப்படி தள்ளிக் கொண்டு இங்கே வருவாள். முடியாது. கஷ்டம்' என சமா தானப்படுத்திக் கொண்டான். இடையில் அவள் இறங்க வேண்டிய இடம். ரகு எல்லா பொருட்களையும் திரும்பக் கொடுத் தான். ஒரு புன்னகையால் விடைபெற்று இறங்கியவளை கண்மூடாது பார்த்தான் ரகு. அவளில் ஏதோ மாற்றம்! இறங்கிக் கொள்ள ரகு எழுந்த போது காலில் ஏதோ இடறியது. குனிந்தவன் கண்களில் பட்டது அழகிய கைப்பை. மனதும் ஒரு கணம் இடறிற்று. ஆமாம் அவனது தற்போதைய காதலியின் கைப்பை! தவறி விட்டுவிட்டாள் போலிருக்கிறது. அவசர அவசரமாக எடுத் துக் கொண்டு இறங்கினான்.

**ஷர்மிளா இஸ்மாயில் -கண்டி-**

மெதுவாக மென்மையான சுகந்தம் வீசிய கைப்பையை பிரித்தான் ரகு. தன் செயல் முரணானது எனத் தெரிந்தும் 'அவளுக்கும் எனக்கும் இடையில் என்ன இரகசியம்? என்னுடையவள் அவள்.' என சமாதானப் பட்டுக் கொண்டான். டயறி இருந்தது. ஏராளமான அழகுப் பொருட்கள் வெகுசீராக இருந்தன. டயறியைப் பிரித்தான். அவனது போட்டோ. மகிழ்ந்தான். இன்னும் புரட்டி னான். இன்னொருவன் போட்டோ... இன் னொருவனது காதல் கடிதம். அந்த இன் னொருவனுக்கு அவள் எழுதி பாதியில் விட்ட நேற்றைய தேதியிட்ட காதல் கடிதம். டயறியின் வரிகள் எஞ்சியிருந்த சந்தேகத் தையும் போக்கியது -அதிர்ந்தான்.... அவளும் அவனைப் போலவே வருடத்திற்குள் ஆறேழு காதலர்களைக் கைவிட்டவள் எனப் புரிந்த போது!

# சீதனம்

"ஹலோ....ஹலோ....ஆர் குமாரா பேசுறது? நான் அம்மா கதைக்கிறன். நேற்றுத்தான் வந்தனான். இந்த நம்பருக்கு எடு நான் நிக்கிறன்" அந்த ஒருநிமிடத்திலை மூச்சு விடாமல் கதைத்து முடித்து ரிசீவரை வைத்தாள் கனகம்மா. ஐந்து நிமிடம் கழித்து மீண்டும் அந்த ரெலிபோன் அலறியது. 'கனடாவிலிருந்து குமார் கதைக்கிறன்' லொட்ஜ் மனேஜர் "கனகம்மாவிற்கு கனடா கோல்.... கனகம்மாவிற்கு கனடா கோல்..." என்று சொல்ல... முந்தானையால் முகத்தை



துடைத்த வண்ணம் அவசரமாக ஓடிச் சென்று ரிசீவரை தன் காதோடு பொருத்திக் கொண்டாள் கனகம்மா.

**யாழ்–வி.ரி. ராஜேந்திரா**

"தம்பி.. எப்பிடிராசா சுகமாய் இருக் கிறியே? எங்கடை பாடுகள் எல்லாம் அப் பிடியும் இப்பிடியும்தான். எங்கடைவீட்டுக்கு கிழக்குப்பக்க ஒழுங்கை கடைசிவீட்டு சின்னத்தம்பி அண்ணேன்ரை ரெண்டாவது பிள்ளை ராதாவை உனக்குத் தெரியுந்தானே. அந்தப் பிள்ளேன்ரை குறிப்பை வாங்கி உனக்குப் பார்த்தனான். நல்ல பொருத்தம். நல்ல பிள்ளை. ஏ.எல். வரையும் படிச் சிருக்கு. உனக்குத் தெரியுந்தானே தம்பி" கனகம்மா வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

"ஓம் அம்மா. எனக்குத் தெரியும். நாலு வருசத்துக்கு முன்னாலை கண்டனான். உங்களுக்குப் பிடிச்சிதெண்டா சரிதான். நீங்கள் போய் ராதான்ரை பேர்த்சேர்ட்டி பிகேற்றும் என்ரை பிரென்ஸிற்கு (Friends) காட்ட கிட்டடிலை எடுத்த படம் ஒண்டும் வாங்கி அனுப்புங்கோ. நான் ஸ்பொன்சர் பண்ணிக் கூப்பிடலாம். பேர்த்சேர்ட்டிபிகேற் முக்கியம். அதைக் கெதிப்பண்ணி அனுப் புங்கோ" என்றான் குமார்.

"ஓம் தம்பி.. எல்லாம் விளங்குது. நான் ஒரு மாதத்திலை திரும்பவும் வருவன். அப்ப கொண்டு வாறன். ரோட்டுக்கரையிலை கட்டின வீடும் நகையும் மூன்று லட்சம் காசும் சீதனமாய்க் கேட்டனான்" என்றாள் கனகம்மா.

"அம்மா நீங்கள் ஒண்டும் கேக்காதை யுங்கோ.அவையள் தாறத்தை தரட்டும். தராட்டியும் பரவாயில்லை. ராதாவுக்கு இன்னும் ரெண்டு தங்கச்சிமார் இருக்குதுகள். சரி வேற என்ன ரெலிபோன் காசு எக்கச் சக்கம். வேலைக்கும் நேரமாச்சு. உண்டி யல்லை கொஞ்சக் காசனுப்புறன். ரெண்டு நாளேக்க கிடைக்கும். எடுத்துக் கொண்டு போங்கோ. பேர்த்சேர்ட்டிபிகேற்தான் கெதி யாய் அனுப்பவேணும், சரியே" என்று விடைபெற்றான் குமார்.

உண்டியல்லை காசு வாற சந்தோசமும் மகன் கலியாணத்திற்கு சம்மதித்த சந்தோச மும் ஒன்றாய்ச் சேர உச்சியிலிருந்து உள்ளங் கால் வரை குளிர்ந்தது. 'எப்படியும் ஒரு மாதத்துக்குள்ள திரும்ப வரவேணும்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் கனகம்மா.

□□

ஒரு மாதம் கழித்து மீண்டும்.

"ஹலோ....ஹலோ....குமார்....நான் அம்மா கதைக்கிறன்."

"அம்மா எப்பிடியிருக்கிறியள்? எப்பவந்த னியள்? இப்ப எங்கையிருக்கிறியள்? பெரி யக்கா பிள்ளையளும் உங்களோடைதானே? வீட்டிலையிருந்து சாமான் எல்லாம் எடுத்துக் கொண்டு போனியளோ? இப்படி வரும் எண்டு ஒருதரும் நினைக்கேல்லை. ராதா வீட்டுக்காரர் எங்கையிருக்கினை? பேர்த் சேர்ட்டிபிகேற் கொண்டு வந்தனியளே?" குமாரின் குரலில் சோகமும் பதட்டமும் கலந்திருந்தது.

"தம்பி...குமார், பேர்த்சேர்ட்டிபிகற் கொண்டு வந்தனான்தான் ஆனா...அது ...ராதான்ரை இல்லை. ரதியின்ரை...." இழுத்தாள் கனகம்மா.

குமாருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. "என்னனை சொல்லுறாய்? அண்டைக்கு கதைக்கேக்கை ராதா எண்டாய்...இண்டைக்கு ரதி எண்ணுறாய். ஆரணை ரதி..? எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை."

"தம்பி ராதாவைத்தான் முந்திப் பேசினது. பொருத்தம் பார்த்தது. நான் இஞ்சை நின்டு ஊருக்குப்போக எங்கடை வீடெல்லாம் ஆமி வந்திட்டுது. உனக்குச் சீதனம் தாற எண்ட வீட்டுக்கு இனி எப்ப போறதோ தெரியாது. அதுதான் அதை விட்டிட்டு வேறையொரு சம்பந்தம் பேசி முடிவாக்கிப் போட்டன். இதுவும் படிச்ச பிள்ளை; நல்ல பிள்ளை. கொழும்பிலை வீடொண்டு வாங்கித் தருகினமாம். அது தான்..." என்று இழுத்தாள் தாய் கனகம்மா.

மறுபக்கத்தில் குமார் ரிசீவரை வைக்கும் சத்தம் கேட்டது.

# மாற்றம் தேவை!

"அக்கா....அக்கா...நீ இப்ப கண்ண மூடிக்கணும். நா சொன்னவுடன்தான் திறக்கணும்..ஓகேயா?" சுஜீயின் கொஞ்சலை கேட்டதும் விஜி 'ஓகே' என்றாள்.

"வன்..டூ...த்ரி...ம்! இப்ப கண்ண திற பார்க்கலாம்."

"என்ன சுஜி சின்னப்பிள்ளையாட்டம்" கண்ணைக் கசக்கிக் கொண்ட அக்கா விஜி செல்லமாக கடிந்து கொண்டாள். சுஜி தன் கைகளை விஜி முன் நீட்டினாள். கையில் பெரிய பார்சலொன்று இருந்தது.

"என்னக்கா, நீ மறந்திட்டியா?"(!) இன் னக்கி உன்ர 'பேர்த்டே' இல்லியா? ம்..ம்... மறந்திட்டியா?"

"சுஜி நா என்ன சின்ன பிள்ளையா என்ன? பேர்த்டே எல்லாம் கொண்டாட?" கேட்டுக்கொண்டே சுஜி கொடுத்த பார்சலை அவளது திருப்திக்காக பிரித்தாள்.

"சுஜீ...நீ..என்னம்மா விளையாடுறியா? இந்தா பிடி....!" அக்கா விஜி ஏதோ



பார்க்கக்கூடாத 'வஸ்து' ஒன்றை பார்பது போல சுஜியை பார்த்தாள்.

"இல்லை..அக்கா..எம்மேல கோவிச்சுக் காத. இதை கட்டி உன்ன பார்க்க ஆசையா இருந்திச்சி அதுதான்..."

சுஜி சமாளித்தாள்.

அக்காவின் கன்னங்கள் 'ஜிவு ஜிவு என்று சிவந்தன. காது மடல்கள் சூடாகின. கண்களில் கண்ணீர் இதோ வருகிறேன்! என்று பயமுறுத்தியது. விஜி பார்சலை சுஜி யின் கைகளில் திணித்தாள். சுஜி மசிய வில்லை.

"முடியாது அக்கா நீ இத உடுத்திதான் ஆகணும். நீ எத்தன நாளைக்கு இப்படியே இருப்ப? நீ எந்த நாளும் சொல்லுவியே 'சுஜிக்காக எது வேணும்னாலும் செய் வேன்னு(?) இப்ப நான் சொல்லுறது கேட்க மாட்டல்ல" சுஜி கோபமாக கேட்டாள்."சுஜி! இதென்ன வெட்டி பேச்சு...," கண்ணீர் கண்களை திரையிட தங்கையை அதட்டி னாள்.

"ஆமாக்கா இப்ப, நா பேசுறது உனக்கு 'வெட்டி' பேச்சு மாதிரிதான் தோணும். அம்மா இருக்கும்போது ஒரு நாள் உனக்கு ஞாபகமிருக்கா காலேஜில நீ படிக்கிறப்போ விதவைகளுக்கு மறுமணம் தேவைன்னு விவா தத்தில விளாசு விளாசுன்னு விளாசி

**செல்வி. சிவாஜினி சதாசிவம்**
**– மாத்தளை –**

'டிஸ்ரிக்கிலே ஃபெஸ்ட் ப்ரைஸ்' எடுத்துக் கிட்டு வந்து நின்னியே, அன்னிக்கு உனக்கு மேடைப்பேச்சு வெட்டியா தோணலியா?"

சுஜி மூச்சு விடாமல் பேசி முடித்தாள்.

"சுஜி நீ சொல்றதும் உண்மைதாம்மா. நிச்சயமா அதெல்லாம் வெறும் மேடைப் பேச்சுக்கு மட்டும்தான் சரி. நிஜ வாழ்க்கைக்கு ஒத்து வராது. உனக்கு புரிஞ்சிக்கிற காலம், வயசு ரெண்டும் வரல்ல. இப்ப இப்படித் தான் பேசத்தோணும்."

"இல்ல அக்கா நா இப்ப மட்டும் இல்ல. எப்பவுமே இப்படித்தான் பேசு வேன். நா..நா..இப்ப என்ன செஞ்சிட்டேன் ஆசை ஆசையா ஒரு கடையா...? எத்தன கடை ஏறி இறங்கி உனக்கு விருப்பமான 'கலர்ல' 'ஸாரி' எடுத்துக்கிட்டு வந்தா..."

"சுஜி, நீ சாதாரண வாயில் ஸாரி எடுத் துத்தந்திருந்தா நிச்சயமா.. நிச்சயமா...நா... உடுத்தியிருப்பேன்."

"என்னக்கா உன்ர மூட நம்பிக்கை? ஒரு 'பட்டு ஸாரி உடுத்தமாட்ட, ஸ்டிக்கர்' பொட்டு வாங்கிட்டு வந்தேன் வச்சியா? கல்யாண வீடுன்னாலே சாவு வீட்டுக்கு போற மாதிரி ஒதுங்கி ஒதுங்கி நிக்கிற? (!) நீ படிச்ச படிப்பெல்லாம் குப்பையில போடுறதுன்னே நினைச்சிட்டியா? என்ன இதெல்லாம் நாடகம்?"

"ப்ளீஸ் சுஜி என்ன வதைக்காத!" விஜி கெஞ்சினாள்.

பார்சலை 'பொத்தென்று' மேசையில் போட்டுவிட்டு கட்டிலில் விழுந்து குலுங்கி குலுங்கி அழுதாள் சுஜி.

விஜி அந்த பட்டுச் ஸாரியை எடுத்துக் கொண்டு உள்ளேபோனாள்- வெள்ளைச் ஸாரிக்கு விடை கொடுப்பதற்காக.

# இழப்பு

**ஜெயமணி**

இடம்பெயர்ந்த பின் அனுப்பியிருந்த முகவரி சரிதானா என மீளவும் பார்த்தான். கைப்பையையும், பெட்டியையும் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். வெறு மனே பதுமையாக அவன் மனைவி சாந்தி வெறித்து நின்றது சினத்தைக் கிளப்பத் தயாரானபோது பொத்துக் கொண்டு புறப்பட் டது அழுகையின் கதறல்.

அம்மாவின் இந்த அழுகை எதனால? மகனை கண்டதாலா?

"அம்மா நான்தான் வந்துவிட்டேனே இதென்ன ஆர்ப்பாட்டம்?"

"சரவணா நீ. நீயா பேசுவது...?"

"இல்லாமல் ஆவியோ வந்து நிக்குது? முழுசாக இரண்டாண்டுகளுக்குப் பின் வந்து நிற்கிறேன். கட்டினவள் பரக்கப் பரக்க விழிக்கிறாள், பெத்ததாய் நீ கேட்கிறாய் நீயோ என்று" புரியாத எரிச்சல் குரலில்.

"உன்னை ஓடி வந்து அணைக்கிற பாக்கியம் வருமென்று கடவுளே வந்து சொல்லியிருந்தாலும் நம்பியிருக்கமாட்டோம். உன் கருமாதி முடிஞ்சு எட்டு நாளாகி விட்டுது என்கிற நினைப்பே மிஞ்சிப் போனது அவ மனசில்."

எட்டி மனைவி முன்போய் நின்றான், மிரண்டாள்.

"எப்படி...நீங்கள்...உங்களை..ஓ!"

வெறுமையை ஊடுருவிய அவள் விழி கள் நீரை சொரிந்தன. அணைத்து விழிகளைத் துடைத்துவிட்டான். கணவனை கட்டிக் கொண்டு கதறினாள்." எப்படி இது..இது.. நான் உங்க உடம்பை தொட்டு அழுது சடங்கு செய்து... ஐயோ எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை. இது எப்படி சாத்தியம் மீண்டும் உயிர்த்துவர....?"

நாட்டின் பயங்கர நிலையில் தினம் தினம் மாண்டு மறையும் உயிர்களில் அவனும் ஒருவனாகி அந்த யாரோ ஒருவன் அவனைப் போன்ற தோற்றத்தில், பெயரில் ஒத்திருக்க,



ஷெல் குண்டின் உதவியால் அடையாளம் தெரியாது முகம் சிதறிப்போக, குடும்பமே ஒப்பாரி வைத்தது.

செத்துப்போனவன் என்று நம்பப்பட்ட வன் திரும்பிவரும்போது இழப்பில் ஏற்பட் டதைப் போலவே அதேவிதமாய் அதிர்ச்சி எழும். அதைவிட அதிகமாகக்கூட எழும்.

எத்தனை கொடுமைகள்? எவ்வளவு இழப்புக்களை சந்திக்கிறார்கள், இந்த மக்கள் தான். அவன் உள்ளுக்குள்ளே வேதனை புரண்டது. நிம்மதி பெருமூச்சுடன் சாந்தி கூறினாள்:

"உங்களை உயிரோடு தந்ததுக்கு இறை வனை எப்படி வாழ்த்துவதெண்டு தெரி யேல்லை."

திரும்பிப் பார்த்தான்.

அவள் முகத்திலும் நிம்மதி படர்வது தெரிந்தது.

"நீ என்னை உயிரோடு தந்ததுக்கு இறைவனை வாழ்த்தும்போது எங்கோ ஒரு பெண் இழப்பைச் சந்திச்ச வெறுமையில் துயரத்தில் கண்ணீரும், கதறலுமாக அவனை நிந்திக்கப் போகிறாள்."

அவன் மனம் துயரத்துடன் அரற்றிக் கொண்டது.

# இலக்கிய நயம்

# கள்

## தருவது – ரசிகன்

**"யார் நீ?"**

சுற்றிவளைத்த பத்துப் புரவிகளிலும் உயர்த்திய வாட்களோடு வீரர்கள்.

வியூகத்தின் மத்தியில் தனிஒருவனாக தன் புரவியில் அமர்ந்திருந்தவன் விதுரன்.

அதட்டலான வினாவுக்கு விடை சொல்வதா? அல்லது இடையிலே உறையில் தொங்கும் வாளை ஏந்திப் போரிடுவதா?

அவனது சிந்தனை செல்லும் திசையைப் புரிந்து கொண்டவனாக புரவி வீரர்களின் தலைவன் இடியென நகைத்தான்

"வாளை எடுக்க நினைத்தால், உன் வாழ்க்கையை கெடுக்க நினைக்கிறாய் என்றுதான் பொருள்! வீரத்திற்கு ஓய்வு கொடு. விவேகத்திற்கு வேலை கொடு! உடைவாளை உருவிக்கொள்வதைவிட நம் உத்தரவுக்கு உடன்படுவதே புத்திசாலித்தனம்."

விதுரன் உடன்பட்டான். வியூகம் மத்தியில் காட்டுக்குள் ஒரு கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

புரவியை விட்டு இறங்கியபோது உறையில் இருந்த வாள் அவனது அனுமதியின்றியே அகற்றப்பட்டது.

"இப்போது தந்துவிடு!" என்றான் புரவிக் கூட்டத் தலைவன்.

"எதை?" என்றான் விதுரன்.

"அந்த ஓலையை. உன் இடுப்பில் மறைத்துவைத்திருக்கும் சோழ மன்னரின் செய்தியை! சேரனுக்கு அனுப்பப்பட்ட ஓலையை பாண்டியர்கள் படிப்பதில் தவறொன்றும் இல்லையப்பா?"

விதுரன் திகைத்துப் போனான். தான் புறப்பட்டதும், தன்னிடம் இரகசிய ஓலைதரப்பட்டதும் இவர்களுக்கு எப் படித் தெரியும் என்று யோசித்தான்.

"என்னப்பா யோசனை? சோழநாட்டு ஒற்றர்படைத் தலைவனுக்கு பாண்டிய நாட்டு ஒற்றர் படையின் வேகமும், விவேகமும் வியப்பாக இருக்கத்தான் செய்யும்!"

எல்லாமே தெரிந்து வைத்திருக்கிறார்கள். சோழநாட்டு ஒற்றர் படைத் தலைவனுக்கு உண்மையாகவே வியப்பாகத்தான் இருந்தது.

ஓலையைக் கொடுத்துவிடலாமா என்று யோசித்தான் ஒற்றர் படைத் தலைவன். நினைத்தபோதே உதட்டில் ஒரு விஷமப் புன்னகை எட்டிப்பார்த்தது.

"இந்தாருங்கள் ஓலை" ஒரு பேழையை நீட்டினான். அது முத்திரையிடப் பட்டிருந்தது.

புரவிக் கூட்டத் தலைவன் ஓலையிருந்த சின்னப் பேழையை கோட்டைக்குள்ளே கொண்டு சென்றான்.

சில நாழிகைகள் கழித்து திரும்பிவந்த புரவிக்கூட்டத் தலைவனின் முகத்தில் அடர்ந்து செழித்திருந்த மீசை துடித்துக் கொண்டிருந்தது. இரண்டு விழிகளும் கோபத்தில் கொவ்வைப் பழ நிறத்தை பெற்றிருந்தன.

"இரகசிய ஓலை சங்கேத மொழியில் இருக்கிறது!"

"அப்படியா?" என்றான் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்ட விதுரன்.

"நன்றாக நடிக்கிறாய் நீ. சங்கேத மொழி உனக்கும் தெரியும் என்பது எங்களுக்கும் தெரியும்."

"எனக்கா? சத்தியமாகத் தெரியாது!"

"ஒற்றர்களின் சத்தியத்தை நாங்கள் நம்புவதில்லை."

"அதனால் எனக்கொன்றும் நஷ்டமில்லை."

அவன் குரலில் தெரிந்த உறுதி புரவிக் கூட்டத் தலைவனை வியக்க வைக்கவில்லை. முன்னரே அந்த உறுதியை எதிர்பார்த்தது



போலவே அவன் முகபாவம் இருந்தது.

"சோழநாட்டு ஒற்றர் படைத் தலைவரின் உறுதி ஊரறிந்ததுதான்!" என்றான். அப்படிச் சொல்லும் போது ஓரவிழிகளில் குறும்பு நகை ஒன்று ஒட்டியிருந்தது.

"இரவு இங்கேயே தங்கலாம் நீர்! காலையில்தான் விசாரணை. அதுவரை களிப்பாயிருக்கலாம். தடையே கிடையாது. வெளியே மட்டும் காவலிருக்கும்."

புரவிக் கூட்டத் தலைவன் போய் விட்டான். விருந்து பரிமாறப்பட்டது. பரிமாறியது பருவ எழில் பாவையர்கள்.

குனிந்து அவன் இலையில் அறுசுவை விருந்து படைக்கும்போது, அவன் கண்களுக்கு எழில் உருக் கோலம் காட்டினார்கள்.

வேண்டுமென்றே விலக்கிவைக்கப்பட்ட மேலாடைகள், உண்ணும் அமுது சுவையா? உண்ணப்படாமல் இருக்கும் நெஞ்சகத்து கனிகளதின் சுவை பெரிதா என்று மனதுக்குள் கேள்வி வளர்த்தன. சிந்தைக்குள் நெருப்பு வளர்த்தன.

"மார்பெழில் காட்டி மனதை மயக்கி, மஞ்சத்தில் வைத்து மாந்தளிர் மேனியின் பொன்னெழில் காட்டி இரகசியம் அறியும் கபட நாடகம். நானோ விழுவேன்? நானே மசிவேன்? குவிந்தும் உயர்ந்தும் மிரட்டும் நெஞ்சத்து மொட்டுக்கள் என் சித்தத்தை வெல்ல எப்படி முடியும்? கனியிதழ் சுவையும், ஆலிழை வயிற்றின் காவிய அழகும், சிறுத்துக் கிடக்கும் இடையின் செருக்கும், மார்பழகோடு மல்லுக்கு நிற்கும் பின்னெழில் பொழிவும் எவரையும் மயக்கலாம். இன்பத்தில் ஆழ்த்தலாம். என்னையா முடியும்?"

ஒற்றர் படைத்தலைவன் தனது உறுதியை தானே வியந்தான். அறுசுவை விருந்து உண்டு முடித்து சயன அறைக்குள் புகுந்து கொண்டான்.

"வருக வீரரே! ஒற்றர் படையின் உன்னத தலைவரே! "அழைத்தது பெண்தான். ஆனால் அபாயமான பெண். பூவுடலை வதைக்கும் விதமாக வரிந்து கட்டிய சேலையும், தொப்புள் சுழியை காளையர்களுக்கு பொறியாய் வைக்கும் விதமாக இறக்கிக் கட்டப்பட்ட பாங்கும், இடைக்கும் கழுத்துக்கும் இடையே இருக்கக்கூடிய எழில் பிரதேசங்களின் ஏற்ற இறக்கங்களை எடுத்துக் காட்டும் மெல்லிய பட்டில் செய்யப்பட்ட மேலாடையும், 'வா' என்று அழைக்கும் வாசனைப் பூச்சும், கண்களுக்குள் மஞ்சத்தை விரித்துக் காட்டும் மதன பார்வையும் அழைத்தவள் தகுதியை அறியப் போதுமானவை.

தடுமாறிப்போனான் விதுரன். 'வெற்றிலைச் சாயமாய் சிவந்திருந்த இதழ்களில் ஓய்வின்றி ஈர அருவியா? அதற்குத்தான் தேன் என்று பெயரா? சே.. மனமே மற! ஆசை துற! முளைவிடும் மோகமே இற!'

விதுரன் உணர்ச்சிகளை மூடினான்.

"கள் தரவா? கள்ளாய் வரவா?" கண் சிமிட்டினாள். மனதை சுரண்டினாள்

"கள்ளே போதும்." ஊற்றிக் கொடுத்தாள். கள் என்றால் பிரியம்தான் விதுரனுக்கு. பிடித்தான் ஒரு பிடி.

"இன்னும் ஊற்றடி!"

"ஊற்றுவதற்கு இனியில்லை. ஊறுகிற கள்தான் உண்டு. ஊட்டவா? போகவா?"

"நில்லடி. பாதியில் போனால் எப்படி?



பருக இருப்பது வேறென்ன சொல்லடி?"

"பருவம் உள்ளது; பருக நல்லது!

கள்ளிலும் இனியது, கலைகளில் வலியது. பருகலாம். பதமறியலாம். நீந்தலாம். பறக்கலாம். நிலவுக்கு மேலே உயர்ந்து மிதக்கலாம். தரவா, அள்ளித் தரவா? இந்த இரவைப் பகலாய் உறவால் மாற்றித் தரவா?"

"என்னடி உளறல்? வாய்ச் சொல்லில் பந்தல் ஏனடி?"

"வாய்ச் சொல்லில் பந்தல் அல்ல. என் வாய் வீச்சில் உன் உறுதி கந்தலாகும் பார்?"

இதழ்களால் அவன் உதடுகளை ஆக்கிரமித்தாள்.

கள்வெறியும், கனிகையவள் தந்த களிப்பு வெறியும் சங்கேத வார்த்தைகளை சரச சுகத்தில் அவிழ்க்க வைத்தன.

ஒற்றர் படைத் தலைவன் கள் மயக்கத்தில் களவு போய்விட்டான். களவு போனவன் இதயத்தில் இருந்த இரகசியங்கள் பாண்டியர் படை ஒற்றர்களால் கொள்ளப்பட்டன.

விடிந்த போது உண்மை புரிந்தது. உறுதி குலையாத ஒற்றர் படைத் தலைவன் என்ற புகழும் போனது. பகைவரும் அஞ்சும் ஒற்றர் படைத் தலைவன் ஒரு குடம் கள்ளால் வெல்லப்பட்டான்.

சித்தம் தெளிவாக இருந்தபோது கொத்தும் விழிகளும், குத்தும் எழில்களும் வெல்ல முடியாத மனதை, கள் புகுந்து சேறாக்கியது.

தலையில் அடித்துக் கொண்டான் ஒற்றர் படைத் தலைவன். ஓவென்று அந்தக் காடு அதிரக் கத்தினான்.

இப்போது திருவள்ளுவர் அவன் சிந்தையில் இருந்து புன்னகைத்தார்.

**கள்மேல் காதல் கொண்டவரைக் கண்டால் பகைவரும் அஞ்சார். கள் வெறி கொண்டோர் தம் புகழையும் இழப்பர்.** அன்றே நான் சொன்னதை படித்திருந்தும் மறந்தாய். பாதை தவறினாய்' என்றார்.

**"உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்."**

குறள் 921, அதிகாரம் 93.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–134

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | 4 | |
| ■ | 5 | | | ■ | | ■ |
| 6 | | | ■ | 7 | | |
| ■ | | ■ | 8 | | | ■ |
| 9 | | 10 | | | ■ | 11 |
| | ■ | | | ■ | ■ | |
| | ■ | 12 | | | | |

### இடமிருந்து வலம்

01. உலகில் அமைதியும், சமாதானமும் நிலவுவதற்காக இவை பல ஒன்று சேர்ந்தே ஐ.நா.சபை உருவானது.
03. தீபாவளியும், கார்த்திகை விளக்கீடும் இதனுடன் ஒட்டிய பண்டிகைகளாகும்.
05. யாழையும், குழலையும் விட இது இனிமையானது என்கிறார் வள்ளுவர்.
06. இதனைக் கிளப்பி விட்டுப் பல பிரச்சனைகளை ஏற்படுத்துவோர் மத்தியில் கவனமாக இருக்க வேண்டும்.
07. பெண் பிள்ளைகளின் பருவ வளர்ச்சிக்கு இது ஒரு சாட்சி.
09. மனிதனுக்கு வாழ்க்கையில் இது இருக்க வேண்டும்.
12. ஒது வருடம் இம்முறை சோபை இழந்து, இதனையும் இழந்து காணப் பட்டது.

### மேலிருந்து கீழ்

02. நமது நாட்டுப் பிரச்சனை தீர இது இன்னும் ஏற்படவில்லையே.
04. இளமையான இது உல்லாசமானது தான். ஆனாலும் பொல்லாததும் கூட.
07. வானம் தெளிவாக இருந்தால் இவற்றின் துள்ளாட்டம் துல்லியமாகத் தெரியும்.
08. நாட்டில் பணத்திற்கு இது ஏற்பட்டு விட்டதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.
09. தமிழக சினிமாவில் இதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டதென்று வடநாட்டில் இருந்து இறக்குமதி செய்கின்றனர்.
10. அணைக்கட்டுக்களில் இது ஏற்படுமாயின் சர்வநாசம் நிச்சயம்.
11. நொடிந்து போனவர்களைத் தூக்கி விட இது அவசியம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 13.01.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-134
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-132ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மு | தி | 2 யோ | ர் | ■ | 3 வெ | றி |
| ய | ■ | 4 கா | ல் | கோ | ள் | ■ |
| ற் | ■ | ச | ■ | 5 மா | ளி | 6 கை |
| 7 சி | ன் | ன | ம் | ■ | ■ | வ |
| ■ | 8 ஆ | ம் | ■ | 9 ஊ | 10 தா | ரி |
| ■ | சா | ■ | 11 தூ | ■ | க | சை |
| 12 தி | ன் | ப | ண் | ட | ம் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 132இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. பிரதீப் புவனேஸ்வரன், கொட்டாஞ்சேனை.
2. என். ஜெகதீசன், புத்தளம்.
3. செல்வி. பாத்திமா பர்வின், வத்தேகம.
4. திருமதி.எஸ். பிரியதர்ஷினி, மொரட்டுவ.
5. ஏ. ஸாஹிருல் இஸ்ரத், ஏறாவூர்-03.
6. கே. வசந்தகுமார், நிலாவெளி.
7. முகமது பாத்தீன், தெல்தோட்டை.
8. செல்வி.ஆர். சுபாஜினி, கல்முனை.
9. திருமதி. சிபாயா மன்சூர், பொலன்னறுவை.
10. எம். பாலகிருஷ்ணன், அட்டன்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**★ உலகில் பெண்களே இல்லை என்றால் எனக்கு மகிழ்ச்சி. உங்களுக்கு?**

க. திலீப்குமார், அக்கரைப்பற்று - 07.

*இப்படிப்பட்ட கேள்வியை கேட்கக் கூடிய திலீப்குமார் அவதரிக்காமல் போயிருப்பாரே என்ற கவலை எனக்கு!*

□□

**★ புலிகளின் பின்னடைவு பற்றி....?**

றைகம ஸ்ரீ, இங்கிலிய.

*பிரபாகரனின் கருத்துப்படி "தற்காலிகம்".*

□□

**★ சமீபத்தில் நீங்கள் பார்த்து இரசித்த பிரசாந்த் படம் எது?**

பிரசாந்த் பிரியை, களுத்துறை.

*பார்த்து இரசித்த புகைப்படத்தை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி.*

**★ டியர் சிந்தியா! உலகம் அழிய இன்னும் ஒருநாள் இருக்கும்போது தங்களின் ஆசை எதுவாக இருக்கும்?**

ஏ.ஆர். முபாரக், கிண்ணியா அரைஏக்கர்.

*அழகான உலகம் அழியாமல் இருக்கக் கூடாதா என்பதுதான்! (அந்த டென்ஷனான நேரத்தில் வேறு ஆசைகள் எப்படி வருமுங்க?!)*



பிரசாந்த், ரகுவரன்
படம்: தாஜுத் இப்ராஹீம்

**★ இலங்கைப் பிரச்சனையில் இந்திய மத்திய அரசு எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது?**

எம். யோகநாத், நுவரெலியா.

*இந்தியாவை நேற்றுவரை வசைபாடிக் கொண்டிருந்த புலிகள், இன்று "இந்தியா நமது நண்பன்" என்று நல்லிசை பாடும் அளவுக்கு!*

□□

**★ மீண்டும் ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஜனாதிபதியாக வந்தால்?**

மு. மயில்வாகனம், திருக்கோணமலை.

*ராஜீவ் காந்தியும் உயிர்த்தெழுந்தால் ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளலாம்.*

□□

**★ டியர் சிந்தியா! நடிகைகளுக்கு இந்தியாவில் மதிப்பு குறைவு என்று கூறுகிறார்களே! உண்மைதானா?**

க. உதயகுமாரன், களுவாஞ்சிக்குடி.

*குஷ்புவுக்கு கோயில் கட்டியதும் இந்தியாவில் தானுங்களே?*

**★ மனிதன் பிறக்கும்போது அழுவது ஏன்?**

கு. சுதா, கொழும்பு - 05

*ஒத்திகைக்காக!*

□□

**★ நெற்றியில் முத்தம் கொடுத்தால் என்ன அர்த்தம்? உதட்டில் முத்தம் கொடுத்தால் என்ன அர்த்தம்?**

தாஹா பயறூஸ், அக்கரைப்பற்று.

*இரண்டுமே வெறியோடு கொடுக்கப் படாவிட்டால் அன்பு என்னும் அர்த்தம். (ம்.கவனிக்க)*

□□

**★ திரைப்படங்களில் உங்களை பிரமிக்க வைத்தது?**

எஸ். சங்கீதா, மாத்தளை.

*பிரமிக்கவைக்காவிட்டாலும் 'மக்கள் ஆட்சி' கலக்கிக் கொண்டிருக்கும் செய்தி பிரமிப்புத்தான். படுதோல்வியடையும் என்று ஆரம்பத்தில் நினைக்கப்பட்ட படம். சட்டென்று சூடுபிடித்து செமர்த்தியாக வசூல் அறுவடை செய்கிறது.*

□□

**★ 'முத்து' படத்தில் சரத்பாபுவை திருமணம் செய்யும் நடிகை யார்?**

எம். கனகராஜா, மட்டக்களப்பு.

*அந்த 'விக்கல்' திலகம்தானே.? அவர்தான் சுபாஸ்ரீ.*

□□

**★ கார்லோசின் தொடர் உண்மைச் சம்பவம் தானே?**

ஏ. நிரஞ்சனி, வத்தளை.

*அதிலென்ன சந்தேகம்? இடைக்கிடையே ரசிகனின் கற்பனையும் விளையாடுகிறது. சம்பவங்களுக்கு மெருகூட்ட கற்பனை தேவைதானே! கார்லோஸ் தொடர்புடைய கடைசிச் செய்தி– கார்லோஸின் மனைவியும், மகளும் புத்தாண்டைக் கொண்டாட இம்முறை ஜெர்மன் சென்றார்கள். பொலிசார் விசாரணை செய்து இருவரையும் வெறுப்பேற்றி விட்டார்கள். கார்லோஸ் என்றால் ஐரோப்பிய நாடுகளுக்கு அப்படியொரு வெறுப்பு.*

□□

**★ உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் அதிக தடவை வெற்றிபெற்ற நாடு எது?**

வி. சீவகன், கல்முனை.

*முதல் முறையாக நான்கு தடவை கோப்பையை அள்ளிக்கொண்டு போன நாடு பிரேசில்தான். அதன்பின்னர் ஜெர்மனியும், இத்தாலியும் மூன்று தடவை கோப்பையைத் தூக்கிப் போயின.*

□□

**★ என் மனைவி எனக்கு சிக்கனம் போதவில்லை என்கிறாள்? சிக்கனமாக வாழ ஒரு வழி சொல்லுங்கள்?**

மு. மகேந்திரன், அக்குறணை.

*சுப்பிரமணிய பாரதியார் என்றால் உடனே தெரியுமல்லவா? அந்தளவுக்கு சந்தான பாரதியாரை நம்மில் சிலருக்கு தெரியாமல் இருக்கக்கூடும். சிக்கனம் பற்றி சந்தான பாரதியார் சொல்வதைக் கேளுங்கள்: நமது சிக்கனப் பணத்தை சேமிப்பது மட்டுமல்ல, நம்முடைய பேச்சு, நினைப்பு, நடைமுறை முதலியவற்றிலும் சிக்கனமாக இருக்க வேண்டும்." அதாவது காசையும் கரியாக்காதே. பேச்சையும் "வேஸ்ட் பண்ணாதே" என்கிறார். மகேந்திரன் ஓ.கேயா?*

□□

**★விவாகரத்துக்கு டயானா சம்மதிப்பாரா?**

ஏ. நூர்ஜஹான், கண்டி.

*பார், பார், சம்மதிப்பார். சம்மதித்து விட்டார்; ஆனால் நிபந்தனையோடு! என்ன நிபந்தனை போட்டாலும் பலாப்பழம் போல கையில் கிடைக்கவிருந்த மகாராணிப் பதவி போனது போனதுதான். சாள்ஸ்சுக்கும் மகாராஜாப் பதவி சந்தேகம்தான். கொடுத்து வைக்காதவர்கள்.*

# இராமாயணம்

## அங்கம் 14

இராமனும் இலக்குவனும் அயோத்தியில் இருந்தவாறே அரசியல் விவகாரங்களில் தந்தை தசரதச் சக்கரவர்த்திக்கு உறுதுணையாக இருந்தார்கள். இயல்பாகவே இன்முகம் காட்டி இனிமையாகப் பழகும் சுபாவமுடைய இராமன் குடிமக்களிடம் மிகவும் கண்ணியமாகவே நடந்துகொண்டான். மக்கள் எத்தகைய பிரச்சனையுடன் அரசவைக்கு வந்தாலும் அவற்றுக்கேற்ற பரிகாரம் கண்டுபிடிப்பதில் இராமனும் இலக்குவனும் வல்லவர்களாக இருந்தனர். இதனால் குடிமக்கள் மத்தியில் இராமனின் புகழ் ஓங்கிவளரலாயிற்று. மிகச் சில நாட்களுக்குள்ளாகவே அயோத்திமாநகரெங்கும் இராமனைப் பற்றிய பேச்சுக்களே எல்லோர் வாயிலும் தவழத் தொடங்கிவிட்டன.

இதே காலகட்டத்தில் இராமனுக்கும் சீதைக்குமிடையே மிகச் சிறந்த இல்லறம் தழைத்தோங்கியது. இருவரிடத்திலும் எந்த விதமான பிணக்கும் ஏற்பட்டதில்லை. ஊடலுக்கான பொய்க் கோபம் தானும் இருவருக்கிடையிலும் தோன்றவில்லை.

இராமனோ இணையிலா வீரன் மட்டுமல்ல; ஈடிணையற்ற பேரழகன். அயோத்திமாநகரில் மட்டுமல்லாமல் மிதிலையிலும் அவனுடைய அழகில் ஆண்களே மயங்கினராம். இராமனுடைய அழகால் ஈர்க்கப்பட்ட ஆண்கள் அவனுடைய அழகினை அள்ளிப்பருகத் தாங்கள் பெண்களாகப் பிறக்க வில்லையே என்று ஏங்குவார்களாம். தசரத மாமன்னர்கூட தன்னுடைய மகனின் அழகை இரசிப்பதற்காக அருகில் வரும்படி அழைப்பாராம். இராமன் அருகில் வரும்போது அவனுடைய நடையையும் முன் அழகையும் பார்த்து இரசிப்பாராம். உடனே - 'போ'

இத்தகைய அழகுடைய இராமன் இணையற்ற வீரனும் கூட. இராமபிரானுடைய பராக்கிரமத்தை மிதிலை மன்னன் அவையில் சிவதனுசினை முறித்ததிலிருந்தே சீதை நன்கு அறிந்து கொண்டவள். ஓர் உத்தமனுக்குரிய அத்தனை அருங்குணங்களையும் ஒருங்கே பெற்றவன் இராமன்.

சீதையும் தெய்வாம்சம் பொருந்தியவள். அழகுடன் அரிய சிறந்த குணங்களும் உடையவள். கண்டபோதே தனது உளமெனும் அரியாசனத்தில் வீற்றிருக்கும் அருகதை பெற்றவனையே தனது மணாளனாக வாய்க்கப் பெற்றவள், அதுமட்டுமல்லாமல் 'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன, என்ற வாக்கியத்துக்கொப்பாக இருவருமே வைகுந்தத்தில் கணவன் மனைவியாக வாசம் செய்தவர்கள். மண்மீது பிறந்தாலும் இந்த மண்ணிலும் கணவன் மனைவியாக வாழ்வதற்குரிய வாய்ப்பை விரும்பியே ஏற்றவர்கள். ஆகவே இத்தெய்வீகத் தம்பதியினரின் இல்லறம் எத்தகைய மேன்மையானது என்பதனை எம்மால் அளவிட முடியுமா?

### சீதைக்குக் கிடைத்த வாக்குறுதி

அயோத்தியாபுரியில் 12 ஆண்டுகள் இராமபிரானும் சீதாப்பிராட்டியும் இல்லறத்தில் ஈடுபட்டு சிறப்பாக வாழ்ந்தனர். தசரதச்



என்று கூறுவாராம். போகும்போது அவனுடைய பின்தோற்றத்தைக் கண்டு மகிழ்வாராம்.

முற்றும் துறந்த முனிபுங்கவரான விசுவாமித்திரரையும் இராமபிரானுடைய அழகு மயக்கியிருக்கிறது. மிதிலை மாநகரத்து மாந்தர் இராமனை வைத்தகண் வாங்காமல் பார்த்து நின்ற காட்சியை கம்பநாட்டாழ்வார் வர்ணித்திருக்கும் பாணி மிகவும் உன்னதமானதாகும்.

### தோள் கண்டார் தோளே கண்டார்

இராமபிரானுடைய அவயவங்களனைத்தும் அளவோடு அமைந்தவை. இதனால் அழகோடு திகழ்கின்றன. மிதிலை மாநகரில் வாழும் பெண்கள் இராமனின் அங்கங்களில் ஏதாவதொரு பகுதியைப் பார்த்துவிட்டால் அதிலிருந்து தங்கள் கண்களை வேறு பகுதிக்கு மீட்டெடுத்துச் செல்ல முடியாதவர்களாகி விடுகின்றனர். அந்தக் குறிப்பிட்ட பகுதியையே இரசித்துக் கொண்டிருப்பராம். தோளைக் கண்டவர் தோளையே பார்த்து நிற்பர்; வீரக்கழல்களை அணிந்திருக்கும் தாமரை மலரை ஒத்த பாதத்தைக் கண்டவர்கள் அப்பாதத்தையே பார்த்து நிற்பர்; கரங்களின் அழகைக் கண்டவரும் அக்கரங்களிலிருந்து தங்கள் பார்வையை அகற்ற முடியாதிருப்பர்; வாளினைப் போன்ற கண்களையுடைய பெண்கள் எவரும் இராமனின் அழகுத் திருமேனியை முழுவதும் பார்க்க முடியாது தவித்தனர். இறை பக்தர்கள் தாங்கள் பக்தி செலுத்தும் தெய்வத்திருவுருவங்களின் மீதுள்ள பற்றுதலால் வேறு திருவுருவங்களை எவ்வாறு நோக்காதிருக்கின்றனரோ அவ்வாறே இராமபிரானின் அவயவங்களில் எவற்றிலாவது ஒன்றின் மீது விழுந்து விட்ட பார்வையை வேறு எப்பாகத்தின் மீதும் திருப்புவதற்கு முடியாமல் மயங்கி நிற்கின்றனராம்.

**தோள் கண்டார் தோளே கண்டார்,**
**தொடு கழல் கமலம் அன்ன**
**தாள் கண்டார் தாளே கண்டார்;**
**தடக் கை கண்டாரும், அஃதே;**
**வாள் கொண்டு கண்ணார் யாரே,**
**வடிவினை முடியக் கண்டார்?**
**ஊழ் கொண்ட சமயத்து அன்னான்**
**உருவு கண்டாரை ஒத்தார்.**

(பாலகாண்டம்–1081)

சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட கோசல நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் அயலிலுள்ள பல நாடுகளிலும் கூட சீதா-ராமனின் புகழ் பேசப்படலாயிற்று.

மிதிலையிலிருந்து தம்பதிசமேதராய் அயோத்தி திரும்பியதும் தங்களுக்குரிய மாளிகையை சீதையும் இராமனும் வந்தடைந்தனர். அன்றைய தினம் இந்த இளந்தம்பதியினரிடம் இடம் பெற்றதாக வர்ணிக்கப்பட்ட உரையாடலின் ஒரு பகுதியை தருகிறோம்.

இராமபிரானின் தாளினைப் பணிந்த சீதாதேவியின் தோள்களைத் தொட்டு எழுப்பிய இராமன், சீதையை மஞ்சத்தில் அருகமர்த்தியவண்ணம், "என் உள்ளமெனும் ஆலயத்தில் உறைந்து விட்ட உத்தமியே! சீதா! திருமணமானதும் தன் மனைவியிடம் அவள் கணவன் ஏதேதோ விலை மதிப்பற்ற பரிசில்களையெல்லாம் தருவதாக வாக்களிப்பான். "தேர்ந்தெடுத்த நவரத்தினங்களைப் பதித்த-வான் முட்டும் மாளிகையினை உனக்குக் கட்டித் தருவேன்; விண்ணுலகம் சென்று வீதிஉலா போந்துவர புட்பக விமானத்தைப் பரிசளிப்பேன். வகை வகையான பட்டுப் பீதாம்பரங்களையும் வண்ண மணிகள் வைத்து வடிவாக இணைத்தெடுத்த அணிமணிகளையும் உன்காலடியில் கொண்டு வந்து கொட்டுவேன்" என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் என்னால் அவற்றையெல்லாம் உனக்கு நான் தரப் போவதில்லை. என் உள்ளக் கமலத்தை ஆக்கிரமித்துக் கொண்ட உனக்கு ஒரேயொரு சத்தியத்தை மட்டும் நான் செய்து தருகிறேன். என் இதயத்தில் உன்னைத் தவிர வேறு எந்தப்பெண்ணும் குடியேற அனுமதிக்க மாட்டேன். இந்த உள்ளமும் உடலும் உனக்கு மட்டுமே சொந்தம்.

உலகே அழிந்தாலும் இந்தச் சத்தியத்திலிருந்து அணுவளவேனும் பிசகமாட்டேன்," என்று கூறினான்.

இந்த வாக்குறுதியினை உத்தமோத்தமனான இராமபிரானின் வாயிலிருந்து உதிரக்கேட்ட சீதாப்பிராட்டியாரின் சிந்தை குளிர்ந்தது. இது வெறும் வார்த்தையல்ல; சத்தியப்பிரகடனம் என்பதை பிராட்டியார் நன்கறிவார்.

## இராமனை அரியணை அமர்த்து

### அயோத்தி நகரளித்த அமோக ஆதரவு

நல்லொழுக்கமும் ஞானச்சிறப்பும்

. இராமாயணம் மனித ஒழுக்கத்தின் உறைவிடம். இராமன் திருமாலின் அவதாரமே என்றும் கொடுமைகளை ஒழித்து நன்னெறி தழைத்தோங்க அவதரித்தார் என்றும் கூறப்படுகிறது. மகாபாரதத்திலும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட கிருஷ்ணனாக அவதாரம் எடுத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மகாபாரதக் கிருஷ்ணன்-தர்மம், நீதி, நியாயங்களை நிலைநிறுத்த முற்படுவதுடன் ஞானோபதேசம் செய்கிறான். இராமனாக அவதாரமெடுத்து அதர்மத்தை அழிப்பதுடன் தனி மனித ஒழுக்கத்தின் மேன்மையை வெளிப் படுத்துகிறார். இராமாயணமும் மகாபாரதமும் ஒழுக்கமும் ஞானமும் மனிதவாழ்வில் நிலைபெற வேண்டும் என்ற நோக்குடன் ஆன்றோர்களால் அருளப்பட்டவை. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகத்தின் உச்சக்கட்டத்திலிருந்த பல இனங்கள் பேசிய மொழிகளில் இயற்றப் பட்டிருந்த நூல்கள் வழக்கற்றுப் போய்விட்டன. ஆனால் அதே கால கட்டங்களில் உருவான இராமாயணமும் மகாபாரதமும் இன்றும் மக்கள் மத்தியில் சிரஞ்சீவியாக நிலைத்திருக்கின்றன. இதற்குக் காரணம் இந்நூல்களில் பொதிந்துள்ள நெறிமுறைகளேயாகும்.

◆◆◆

### ஒரு விளக்கம்

இராமாயணத்தின் பாலகாண்டத்தை நிறைவு செய்து கொண்டு அடுத்து அயோத்தியா காண்டத்துள் பிரவேசிக்கிறோம். இக்காலகட்டத்தில் சில விளக்கங்களைத் தரவேண்டியது எமது கடமையாகின்றது.

பாரதநாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் இராமாயணம் சொல்லப்பட்டிருக்கிறது. வட மொழியில் வால்மீகி முனிவரின் கதையினை அடியொற்றி பல்வேறு புலவர்கள் இராமர் சரிதத்தைப் பாடியுள்ளார்கள். இவற்றுள் துளசிதாசரின் இராமாயணமும் சிறப்பானதாக விளங்குகிறது. இதில் பரசுராமரும் இராமரும் சந்திக்கும் கட்டம் மிதிலையில்-சனகனின் அரசவையிலேயே இடம் பெறுவதாகக் காட்டப்படுகிறது. சிவதனுசு உடைந்ததும் அதே கணத்தில் பரசுராமர் அவ்விடம் வந்து சேர்ந்து விட்டதாக கதை கூறப்படுகிறது. இருவருக்குமிடையில் நீண்ட

இராஜகுமாரன்

நேரம் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இடையில் இலக்குவன் புகுந்து பரசுராமரை பலவாறாக இழிவு படுத்துவதாகவும் துளசி இராமாயணத்தில் கூறப்படுகிறது. விசுவாமித்திர மாமுனிவரும் அதேசமயம் அவையில் இருக்கிறார்.

மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களுள் இராமாவதாரம், பரசுராம அவதாரத்தின் கடைசிக்கட்டத்தில் நிகழ்கிறது, இராமனும் தன்னைப் போல் திருமாலின் அவதாரமே என்பதனை அறிந்த பின்னரே தனது கடமைகள் முடிவடைந்து விட்டன என்று மகேந்திர மலைக்குச் செல்கிறார் பரசுராமர். இருப்பினும் இராமகாதைக்குப் பின் எழுந்த மகாபாரதத் திலும் பரசுராமர் வருகிறார். பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் குருவாக அவர் வந்து போகிறார்.

சிவதனுசினை உடைப்பது சீதையின் சுயம்வர தினத்தன்று என்றும், சுயம்வரத்துக்கு அழைக்கப்பட்டிருந்த பல தேச மன்னர்கள் சிவதனுசினை தங்கள் கைகளில் தூக்கவே முடியாதிருந்தபோது, இராமபிரான் எதுவிதமான சிரமமுமின்றி வில்லைத் தூக்கி நாணேற்றும்போது அது ஒடிந்து வீழ்ந்தது என்றும் கையில் மணமாலையுடன் காத்திருந்த சீதை-வில்லை ஒடித்த வீரனுக்கே மாலையைச் சூட்டினாள் என்றும் சில கதைகளில் காணப்படுகின்றன.

இவற்றில் பல முரண்பாடுகள் காணப்பட்டாலும் தமிழர் பண்பாட்டை ஒட்டி அழகு தமிழில் கம்பநாட்டாழ்வார் கூறும் கதையினையே நாம் கருத்தில் கொள்வது நன்மை பயக்கும். இருப்பினும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல், இடைக்கிடையே வால்மீகி மாமுனிவரையும் தரிசிப்போம் என்பதனையும் குறிப்பிடவிரும்புகிறோம்.

### அயோத்தியா காண்டம்

தசரத குமாரர்களுக்குத் திருமணம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இராமனும் இலக்குவனும் தங்கள் மனைவியருடன் அயோத்தியில் தங்கியிருந்து வரும் வேளையில் பரதனும் சத்துருக்கனும் கேகய நாட்டில் பரதனின் தாய் மாமன் இல்லத்தில் தங்கியிருந்தனர். தசரதச் சக்கரவர்த்தி தன் நான்கு குமாரர்களிடமும் சமமான அன்பு பூண்டவராக இருந்தார். எனினும் எந்தப் பெற்றாருக்கும் தங்கள் மூத்த குழந்தை மீது பாசம் சற்று அதிகமாகவே இருப்பது இயல்பு. அதே போல்





தசரத மாமன்னனுக்கு இராமனிடத்தில் அளவற்ற அன்பு இருந்தது. இருப்பினும் பரதனும் சத்துருக்கனும் தன்னருகில் இல்லாதமையினால் சற்று மனவருத்தம் கொண்டவராகவும் காணப்பட்டார்.

தசரதர் பல்லாயிரம் ஆண்டுகள் அயோத்தி மாநகரை ஆட்சி செய்தார் என்று கூறப்படுகிறது. இந்த ஆண்டுக்கணக்கு இச்சரிதை இயற்றப்பட்ட காலத்தில் எவ்வாறு கணிக்கப்பட்டதோ எமக்குத் தெரியாது. ஆகவே ஆண்டுகள் பற்றிய சர்ச்சையை விட்டு விட்டு சம்பவத்துக்கு வருவோம்.

### இராமனுக்கு இளவரசுப்பட்டம்

உண்மையில் அதிபராக்கிரமசாலியான தசரதர் நீண்டகாலம் நல்லாட்சி புரிந்திருக்கிறார். இராமர் திருமணத்தின் பின்னரும் அவர் ஆட்சியில் தனக்கு உதவி புரிந்த முறைகளையும் அவதானித்த மன்னர், தன்னை முதுமை ஆட்கொண்டு வருவதையும் அனிமானித்தார், தனது ஆயுட்காலம் முடிவதற்குள்ளாகவே தனது மூத்த மகனான இராமனுக்கு பட்டத்துக்குரிய இளவரசுப் பட்டம் கட்டிவிடலாம் என்று எண்ணினார், இராமனுடைய நல்லொழுக்கம், குடிமக்களிடமும் ஆட்சி அதிகார பீடத்திலிருப்பவர்களிடமும் அவன் பழகும் முறை, பரிபாலனத்தில் தனக்கு உறுதுணையாக நின்று உதவி புரியும் பாங்கு ஆகியவற்றையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்தார். தன் மூதாதையினரால் தனக்களிக்கப்பட்ட அயோத்தியின் ஆட்சி பீடத்தை அலங்கரிக்கும் பூரண தகுதி பெற்றவன் இராமன் என்பதை நன்கு தெரிந்து கொண்டார். தன்னை விட பன்மடங்கு மேலான நிலையில் பரிபாலனம் செய்யும் ஆற்றல் இராமனிடம் இருப்பது நன்கு பளிச்சிட்டது. ஆகவே தாமதமின்றி, அயோத்தியின் அரியாசனத்துக்கு உரிய வாரிசினை நியமித்துவிட வேண்டும் என்று தசரதர் தீவிரமாக எண்ணத்தலைப்பட்டார்.

இதற்கிடையில் சில துர்நிமித்தங்களை தசரதர் காண நேர்ந்தது. சில அபசகுனங்களையும் அவர் சந்தித்தார். அவருடைய இறுதிக்காலம் நெருங்கி வருவதாகவும் அவர் உணர்ந்தார். இராச்சிய பாரத்தை உரிய வாரிசடம் ஒப்படைத்து விட்டு துறவு பூண்டு கானகம் ஏக அவர் உள்ளுணர்வு அவரைத் தூண்டிற்று. காலதாமதம் செய்யாமல் அரச குருவான வசிட்ட மாமுனிவரை அவருடைய ஆசிரமம் சென்று தரிசித்தார். அமைச்சர்களை அழைத்து ஆலோசனை கேட்டார். மாமுனிவரும் அமைச்சர்களும் ஏகோபித்த குரலில் தசரதரின் கருத்துக்கு இசைந்தனர்.

அயோத்தியில் மன்னராட்சி நிலவிய போதும் அங்கு மக்கள் பிரதிநிதிகளுக்கும் கருத்துக்கூறும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருவதை முன்னர் குறிப்பிட்டிருந்தோம், இதன்படி மக்கள் சபையின் முன்பு மன்னரின் ஆலோசனையை முன்வைப்பதென முடிவாயிற்று. அவையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கும் அயோத்தி அரசுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களுக்கும் ஏனைய பிரமுகர்களுக்கும் பிரதானிகளுக்கும் உடன் அழைப்புகள் அனுப்பப்பட்டன.

குறிப்பிட்ட தினத்தன்று, அழைக்கப்பட்ட அனைவரும் நிறைந்திருந்த அவையில் தசரத மாமன்னர் எழுந்து நின்று, தனது மூத்த மகனான இராமனுக்கு இளவரசுப் பட்டத்தைத்தரவிருப்பதாகவும், அதற்கு எவராவது மறுப்புக் கூறுவதானால், தக்க காரணங்களுடன் கூறுமாறும் கூறி அமர்ந்தார்.

### அவையினரின் ஆமோதிப்பு

அதுவரை அவையிலிருந்த அமைதி குலைந்து ஆரவாரம் எழுந்தது. எதிர்ப்புக் குரல்கள் தான் எங்கும் எழுகிறதோ என்று மன்னர் ஒரு கணம் துணுக்குற்றார். ஆனால் அத்தகைய நிலை நீடிக்கவில்லை; அத்தனை குரல்களும் இராமனுக்கு இளவரசுப்பட்டம் என்பதனை ஆதரித்து எழுந்த குரல்கள்தான், பேரானந்தப் பெருமகிழ்ச்சி அங்கு பெருங்கடலாகப் பெருக்கெடுத்தோடியது. இராமனின் கல்யாண குணங்களை அங்கிருந்த அனைவரும் நன்கு அறிந்திருந்தனர், மக்களிடத்தில் மாறா அன்பும் நல்லறத்தில் நாட்டமும் கொண்டு அயோத்தி மாநகர மாந்தரை மட்டுமல்லாமல், அயோத்திமாநகர் பற்றி அறிந்திருந்தவர்கள் அனைவரையுமே தன்பால் ஈர்த்துவிட்ட இராமபிரான், அயோத்தியின் அரியணையில் ஏறுவதை எவர்தான் மறுத்துக் கூற முடியும்?

"மன்னர் மன்னவரே! தங்கள் புதல்வரான இராமனை மக்கள் நன்கறிவர்; அவருடைய ஒழுக்கத்தை நன்கறிவர்; அவருடைய வீரம், விவேகம், நேர்மை, வாய்மை, நீதியை நிலை நாட்டும் முறைமை ஆகியவற்றை மக்கள் கண்டும் கேட்டும் தங்கள் மனோராச்சியபீடத்தில் அவரை அமர்த்தி வைத்து விட்டனர். ஆகவே, தாங்கள் எடுத்த முடிவுக்கு மக்கள் எவருமே எதிர்ப்புக்கூற மாட்டார்கள், இராமருக்கு இளவரசுப்பட்டத்தைச் சூட்டுதற்கு உடனடியாகவே நாளைக் குறிப்பிட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்."

இவ்வாறு மக்கள் பிரதிநிதிகளில் பிரதானமான ஒருவர் எழுந்து கூறினார். திரும்பிய பக்கமெல்லாம் அதனை அமோதிக்கும் வண்ணம், "இளவரசர் இராமச்சந்திரர் வாழ்க வாழ்க" என்ற வாழ்த்தொலி வான்முட்ட எழுந்து எதிரொலித்தது.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—12

பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** பரசுராமர்

1. செல்வி. ஜீ. நளீபா
   160, காமினிபுர, ஹட்டன்.
2. அபய சேகரன்
   இந்தகல மேற்பிரிவு, நமுனுகுல.
3. செல்வி. பிரமிளா செல்லதுரை.
   143/12, பண்டாரநாயக்க மாவத்த, கொழு-12.
4. சி. கரிகாலன்.
   61, விகாரைவீதி, திருகோணமலை.
5. செல்வி. அரச ரெத்தினம் வசந்தராணி. விவேகானந்தா வீதி, காரைதீவு-01.

### இராமாயணப் போட்டி 14

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:– இராமாயணத்தில் அயோத்தி காண்டத்துக்கு முட்பட்ட காண்டம் எது?**

ஜனவரி 13ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:14.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


✓ அமெரிக்காவின் லோஸ் ஏஞ்சல்ஸ் மிருகக்காட்சிச்சாலையில் இந்த இரட்டைத்தலைப் பாம்பு இருக்கிறது.

பாம்பு படமெடுக்கும் என்பது தெரியும். கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த இந்தப் பாம்பை படம் எடுக்க படாதபாடுபட்டார் மிகவும் சிரமப்பட்டுப் போனார். கமராவின் பிளாஷ்லைற் கோணத்தை 90 பாகைக்கு மாற்றி, ஒளிக் கற்றையை சிதறவிடாது படம் எடுத்து முடித்தார். 100 எம்.எம்.மக்ரோ லென்ஸ் பாவிக்கப்பட்டது.

மண்ணில் வளை தோண்டும் ரகப் பாம்பு இது. எல்லாப் பாம்புகளும் தாமாக வளை தோண்டுவதில்லை. எலிகள் அல்லது கறையான்கள் தோண்டிய வளைகளில் புகுந்து வாழும் பாம்புகளும் உண்டு.

# தலை இரண்டு



# வேறு வழியில்லை


அம்மன் ஜுவல்
AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


✓ வன்முறைகளும், வக்கிரங்களும் வரம்பு மீறும்போது கைகளைக் கட்டிக்கொண்டு பார்த்துவிட முடியாது. கிடைப்பதை எடுத்துக் கொண்டு எதிர்ப்பது தவிர வேறு வழியில்லை.

அல்ஜீரியாவிலும் அப்படித்தான் நடந்தது. அல்ஜீரிய இஸ்லாமிய தீவிரவாதக் குழுவினர் வரம்பு மீறினார்கள். ஒரே வன்முறை. எங்கும் இரத்தம் எங்கும் மரணம். 40 ஆயிரம் பொதுமக்கள் அநியாயமாய் செத்துப் போனார்கள்.

தீவிரவாதிகளை எதிர்த்த மக்களை அல்ஜீரிய இராணுவத் தலைவர் ஜெரோவலின் தலைமையில் திரண்டனர். திரண்டவர்களில் இளையோரும் பெண்களும் நிறைய பேர் இருந்தனர். 4 வருடமாக போராட்டம் தொடர்ந்தது. முடிவில் தேர்தல் வந்தது. 'வாக்களித்தால் உயிர் இருக்காது' என்றனர் தீவிரவாதிகள்.

'துப்பாக்கி இல்லாவிட்டால் தாளிருக்க மாட்டோம்தானே' என்று மக்கள் துணிச்சலோடு வாக்களித்தனர். 61 சதவீத வாக்குகளைப் பெற்று ஜெரோவலின் வெற்றி பெற்றார். அவருக்கு எதிராக போட்டியிட்ட 'ஹமாஸ்' அமைப்புக்கு 25 சதவீத வாக்குகளே கிடைத்தன.

வெற்றியைக் கொண்டாட பட்டாசு தேடும் பொறுமையில்லை. கையில் இருந்த பிஸ்டலால் வேட்டுக்களை சுட்டு மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார்கள் ஜெரோவலின் ஆதரவாளர்கள். அதில் ஒரு காட்சிதான் படத்தில்.

வீட்டுக்குள் பெண்களை பூட்டி வைத்துப் போவார்கள். வீதிக்கு வந்து வேட்டுத் தீர்க்கும் பெண்கள் மந்தார்க. காலத்தின் கட்டாயம் கேள்விகள் இனிச் செல்லாது.

# நிழல் சாகசம்



✓ 'வைஜயந்தி ஐ.பீ.எஸ்' என்றொரு படம் இந்தியாவில் வசூல் மழை பொழிந்தது. விஜயகாந்தின் ஆக்ரோசமான சண்டைகள்தான் படத்தின் முதுகெலும்பு.

திரையில் பெண்களின் வீரதீர சாகசங்களை காட்டும்போது வரவேற்பு அமோகமாக கிடைக்கிறது. காரணம் என்னவென்று சில உளவியல் நிபுணர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.

பெண் பலவீனமானவள், சண்டை போட முடியாதவள், மிரட்சி கொண்டவள் என்ற கருத்துக்கள் ஆழமாய் பதிந்துள்ளன. அதற்கு மாறாக திரையில் புயலாக சுழன்று எதிராளிகளை வீழ்த்தும் பெண் அதிசயமாக பார்க்கப்படுகிறாள். காணாததைக் கண்ட பிரமிப்பு ஏற்படுகிறது என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

மேலை நாடுகளிலும் அதே கதைதான். ஹொலிவூட் படங்களில் பெண்களின் வீரதீரங்களை சித்தரிக்கும் காட்சிகளுக்கு வரவேற்பு கிடைத்து வருகிறது.

கவர்ச்சியோடு கலந்து வீரத்தையும் காண்பிக்கிறார்கள். அழகான பெண்கள் பாதி மார்புகள் தெரிய சண்டை போடுவதை ரசிகர்கள்கூர்ந்து கவனிக்கவைப்பதுதான் வசூலை அறுவடை செய்யும் தந்திரம்.


பெண்கள் உண்மையாகவே போர்க்களங்களில் கால்வைத்து விட்டார்கள். ஆனால், திரைப்படங்களில் சித்தரிப்பது போல அல்லாமல், ஆரவாரம் இல்லாத நிகழ்வுகள் அவை. அதுதான் நிஜம். ஆனால் நிஜத்தைவிட நிழலுக்கு மதிப்பிருக்கிறது. காரணம் நிழலுக்கு பொய் அழகு சேர்க்கிறது.





✓ மலைபோல குவிந்துள்ளன ஆயுதங்கள். தடி, பொல்லுகள் போல துப்பாக்கிகள் சர்வசாதாரணமாகிவிட சாவுகளும் மலிந்து போகும். ருவாண்டா நாட்டில் இரு இனங்கள் மோதிக் கொண்டது உங்களுக்குத் தெரியும். பின்வாங்கிய குழு ஒன்று 'ஸயரே' நாட்டில் தஞ்சமடைந்தது. அடைக்கலம் கொடுப்பதற்கு முன் ஆயுத ஒப்படைப்பு கோரப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதிதான் இது.

# ஆயுத பூஜை



✓ பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏராளமான இயக்கங்கள் போதாக்குறைக்கு அரச தரப்பு விழிப்புக்குழுக்கள்.

கம்யூனிச அமைப்பு, அதற்கு எதிரான இயக்கங்கள்... இப்படி.

மிந்தனாவ மாநிலத்தில் புதிய மக்கள் இராணுவம் (NAP) எனும் வாய்ந்த அமைப்பு தனிநாடு கோரி போராடுகின்றார்கள். அவர்களிடம் சக்திவாய்ந்த துப்பாக்கிகள் உண்டு.

மேலேயுள்ள படத்தில் பிலிப்பைன்ஸ் கம்யூனிச ஆதரவு அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் கத்தி, வாள், கட்டாரி போன்ற ஆயுதங்களை வழிபட்டுப் பிரார்த்தனை செய்கின்றனர் (ஆண்களும் பெண்களும்).

கீழ்ப்படத்தில் அமர்ந்திருப்பவர்கள் சிறியவர்கள். உணர்ச்சிவசப்பட்டு கத்தியுடன் போஸ் கொடுக்கின்றனர். சரியான சிந்தனை-வழிகாட்டலை பெறாது இவ்வாறு திசை திருப்பப்படும் சிறுவர்கள் அங்கு ஏராளம். ஆயுத பூஜைகளுக்கு இரத்தம்தான் தீர்த்தம், நெய் எல்லாம்.

